# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

● தை - 2021

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

தை - 2021

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப : R.Mahendran,
34 Redriffe Road, Plaistow,
London, e13 0JX, UK

மின்னஞ்சல் : neythal34@gmail.com
mahendran54@hotmail.com

காசோலைகள் : R.Mahendran எனும் பெயருக்கு எழுதுங்கள்.

நன்றி : இணையம்


## வணக்கம்,

காற்றுவெளி புதிய ஆண்டில் (தை 2021) அடியெடுத்து வைக்கிறது.

நிறையவே கற்பனைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட காற்றுவெளி இன்று வரை படைப்பாளர்களினதும், இலக்கிய ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் இன்று வரை பயணிக்கிறது. அவ்வப்போது சிற்றிதழ்ச் சிறப்பிதழ், மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் சிறுகதைச் சிறப்பிதழ் என வெளியிட்டிருந்தோம். கவிதைச் சிறப்பிதழும் வெளிவர உள்ளது


மேலும், படைப்பாளார்களை மேலும் இணைக்க நாடுகளின் சிறப்பிதழ்களை வெளியிடவும், அந்தந்த நாடுகளின் படைப்புக்களைத் தொகுக்கவென தொகுப்பாளர்களையும் இணைக்கும் திட்டமுள்ளது. முன்னரும் முயன்று முடியாது போனது.

சிற்றிதழ்கள் இடையேயான பரஸ்பர புரிந்துணர்வுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ள தொடர்ந்து முயல்கிறோம். விளம்பரங்களாயல்லாமல் தகவல்களின் பரிமாற்றமாய் இருத்தல் அவசியம். பணத்தை முன்னிறுத்தி தொடர்பாடல்களைப் பேண விரும்புவோர் தொடர்புகளைப் பேணலாம்.

புத்தாண்டில் புதிய வடிவமாய் பயணிப்போம். உலகில் அல்லலுறும் மனிதம் நோய் நொடியின்றி வாழவும், ஈழத்தமிழர்க்கான கனவும் நிறைவேறவும் பிரார்த்திப்போம்.

நட்புடன்,

சோபா




# பூமரப்பெண்ணும் & கம்மங்குழி அம்மனும்

● அ. தமிழ்ச்செல்வன்

பூமரப்பெண் 5 சிறுகதைகளை கொண்ட தொகுப்பு.இக்கதைகள் நிஜ நிகழ்வுகளின் சிறுகதைவடிவம் என்றுசொல்லலாம். நாட்டுப்புற கதைகளாக பல நூற்றாண்டுகளாக பேசப்பட்டு சிறு கதைகளாக உருவமெடுத்திருக்கும் நிகழ்வுகள்.

இத்தொகுப்பில் நூலின் பெயர் தாங்கிய பூமரப்பெண், கம்மங்குழியில் இருந்து கதறல், கடுங்காப்பி, நீத்தா, குடியா…குயிலி… காமாட்சி என 5 கதைகள். இவை அனைத்துமே பெண்மையக்கதைகள். பெண்களின் வாழ்வை குறிப்பாக பெண்களின் திருமணத்தை சுற்றிய பிரச்சனைகளை பேசுகிற கதைகள்.

பெண்களை உயர்த்தி பேச ஆண்களை மட்டம் தட்டு தன்மையும் இல்லை.மனித உறவுகளின் அடிப்படையை விவாதங்களின் வழியேபுரிந்து கொள்வதே இந் நூலின் நோக்கம்.பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ள இந்நூல் பல பதிப்புகள் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**நூலின் ஆசிரியர் பற்றி...**

இந்நூலின் ஆசிரியர் ச.மாடசாமி பேராசிரியர், தமிழ்நாடு அறிவியல் இயக்கம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம் போன்ற அமைப்புகளின் முக்கிய நிர்வாகிகளில் ஒருவர். பல்வேறு இலக்கிய , ஆய்வு நூலுக்கு சொந்தக்காரர்.இன் நூலில் உள்ள சிறுகதைகளை தன் வகுப்பறைகள், அவர் களபணியாற்றிய அமைப்புகளில் விவாதித்தவர். பலரின் சேகரிப்பில் கிடைத்த நாட்டுபுற கதைகள் தொகுப்பு. இந் நூல் கதை தொகுப்பாக மட்டும் இல்லாமல் “கதைகள், விவாதங்கள்,சம்பங்கள் என தலைப்பின் அடிகுறிப்பு உடன் வெளிவந்துள்ளது.

**பூமரப்பெண்...**

ஏ.கே.ராமனுஜன் என்பவரின் சேகரிப்பில் கிடைத்த கன்னட நாட்டுபுற கதை. தந்தையை இழந்த குடும்பம்,திருமணத்திற்கு காத்திருக்கும் இரண்டு பெண்கள். வசதியான இடத்தில் திருமணம் செய்துகொள்ள ஆசைப்படும் இளையபெண்ணுக்கு ஒரு மந்திர சக்தி கிடைக்கிறது.மந்திரத்தைசொல்லி தன் மீது தண்ணீரை ஊற்றிக்கொண்டால் பூமரமாக மாறி விடுவாள்.மீண்டும் தண்ணீர் ஊற்றி மந்திரம் சொன்னாள் பெண்ணாக மாறிவிடுவாள்.கிளைகளை ஒடிக்காமல் மரத்திற்கு சேதமில்லாமல் பூக்களை பறித்து அதிக வாசமுள்ள மலர்களை விற்பனை செய்து தன் குடும்ப வறுமை போக்கி கொள்வார்கள்.

இந்த ரகசியம் அந்த நாட்டு இளவரசனுக்கு தெரிந்துவிட , பூமரப்பெண்ணை திருமணம் செய்து கொள்கிறான். பலமுறை மறுத்தும் கணவனின் வற்புதறுத்தலுக்காக தினமும் பூமரபெண்ணா மாறி கிடைக்கும் பூக்களை கொண்டு பூ படுக்கையில் இன்பம் கண்டார்கள் இளவரசனும்,பூமரப்பெண்ணும்.

அரண்மைனையின் முற்றத்தில் கொட்டிகிடந்த வாடிய பூக்களை கண்டு இளவரசனின் திருமணமாகத தங்கை தனது அண்ணியை அழைத்து சென்று பூமரமாகமாற்றி பூக்களை பறிக்கும் போது கிளைகளை ஒடித்து பூமரத்தை சேதப்படுத்த அதனால் கை,கால்கள் முடங்கி பாதிக்கப்பட்ட பூமரப்பெண்ணை இளவரசனின் இன்னொரு திருமணமான தங்கை காப்பாற்றுவதே கதையின் மிகச்சுருக்கம்.

ஒரு பெண் தன் சகோதரியிடமும்,தன் தாயிடமும் பத்திரமாக இருக்கிறாள். திருமணமான நாத்தனாரிடமும் ஒரளவு பத்திரமாக இருக்கிறாள்.அடிபட்டு திருந்திய கணவனிடமும் பத்திரமாக இருக்கிறாள்,ஆனால் திருமணமாகாத நாத்தனாரிடமும், புதுமாப்பிள்ளை கணவனிடமும் அவள் பாதுகாப்பிற்கு இடையூறு இருக்கிறது. என்பதை பெண்னை பூமரமாக உருவகப்படுத்தி சொல்லப்பட்ட கதை பூமரப்பெண்.

**கம்மங்குழியிலிருந்து கதறல்...**

கோகிலா துள்ளித்திரியும் மான் போல அழகு பெண்.தன் அண்ணன் ராமுத்தச்சன்

அம்மாவுக்கும் பிடிமானம். வீட்டில் எந்நேரமும் கோகிலா,கோகிலா என்ற அழைப்பு கொஞ்சல் கேட்டுக்கொண்டே இருக்கும்.

அந்த ஊரின் இளவரசனின் திருமணம் ஆடம்பரமாக அறிவிக்கப்படுகிறது.திருமண நாளான்று அரண்மனை முழுவதும் அலங்கார விளக்குகள் வைக்க ஏற்பாடு நடக்கிறது. விளக்குகள் செய்ய தேர்தெடுக்கப்பட்டோரில் ராமத்தச்சனும் ஒருவன்.அதனை அதிர்ஷ்டமாக ஏற்று விளக்குகள் செய்து குவிக்கிறான்.திருமணநாள் நெருங்குகிறது.

விளக்குகள் செய்யும் தச்சர்களின் வீடுகளுக்கு இளவரசன் சென்று பார்வையிடுகிறான். ராமுத்தச்சன் வீட்டிற்கும் வருகிறான் ...கோகிலா கண்ணில் பட்டுவிட ,பெருமூச்சோடு வெளியிருகிறான் இளவரசன்.

சற்று நேரத்தில் அரண்மைமனை காவலன் ராமுத்தச்சன் வீட்டிற்கு வருகிறான். இளவரசனின் திருமணம் முடிந்த பிறகு உன் தங்கை கோகிலாவை அரண்மனை அந்தபுரத்திற்கு அனுப்புமாறு கட்டளையிட்டு செல்கிறான். வைப்பாட்டியாக அரண்மனை அந்தபுரத்திற்கு அனுப்ப மனமில்லை ராமுத்தச்சனும்கும், அவன் அம்மாவுக்கும். கண்ணீரோடு கூடிகூடி பேசுகிறார்கள். கோகிலாவுக்கு இது விசித்திரமாகப்படுகிறது. அவளின் அண்ணன் இரவு முழுவதும் விழித்திருந்து வீட்டின் முற்றத்தில் குழித்தோண்ட துவங்குகிறான்.

அன்று இளவரசனின் திருமணநாள். கோகிலாவை அம்மாவும், அண்ணனும் எழுப்புகிறார்கள். அரண்மனைக்குசெல்லவேண்டும் ,மரவேலை கருவிகள் உள்ள பையை பரண்மீதிருந்து எடுத்துதருமாறு செல்கிறான். கோகிலா ஒரு பலகை மீது நின்ற படி பையை எடுக்க முயல... அண்ணன் ராமுத்தச்சன் அந்தபலகை உருவ, கோகிலா பெரும் கம்புதாணியம் நிரப்பட்ட குழிக்குழ் விழுகிறார்கள். கோகிலா கதறி அழுதாலும் அண்ணன், அம்மாவும் அவளை கம்மங்கழிக்குள் சமாதியாக்கி விடுகிறார்கள்.

இந்த கதைதயில் யார் தவறு .அதிகாரத்தை பயன்படுத்திய இளவரசனின் தவறா?இளவரசனின் கண்ணில் பட்ட கோகிலாவின் தவறா?

அல்லது தன் குடும்ப பிரச்சனையை அக்கம்பக்கத்தினரிடம் ஆலோசனை கேட்காத பொற்றோரின்தவறா? குடும்ப மானத்தை காப்பாற்ற பெண்ணை மட்டும் காரணமாக்கி பலியாக்குவது நியாயம் தானா ? என்றகேள்விகள் விவாதத்திற்கு உரியவை. கோகிலா இன்னும் தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் கம்மங்குழி அம்மனாக திகழ்கிறாள்.

**கடுங்காப்பி....**

பால் கலக்காத தேனீர் அல்லது காப்பியை கடுங்காப்பி என சொல்வது வழக்கம். இந்த கதையும் பெண் திருமணத்தை சுற்றிய கதை தான் .ஆனால் திருமண விஷயத்தில் ஒரு ஆண் எப்படி முடிவெடுக்கவேண்டும் என்பதை சொல்கிற கதை.

கதையின் நாயகன் கொண்டுசாமி,கிராமத்து மனிதனுக்கே உரித்தான தாட்டியமான ஆள். முறுக்கு மீசை, கிருதா என 23 வயதுக்கே உரித்தான தெனாவெட்டு உள்ளவன். நம்மையா தரகர் அவனுக்கு பெண் பார்க்கிறார். பக்கத்து ஊரில் பெரிய சம்சாரி( வசதியான விவசாயகுடும்பரம்) வீட்டுப்பெண் பார்க்க ஏற்பாடு. பஸ்ஸில் போய் இறங்கிய நேரம் காலை 10 மணி ...மதியம் 1 மணிக்குத்தான் நல்ல நேரம் என்பதால் சம்சாரி வீட்டில் 1 மணிக்கு வரசொல்லி விட்டார்கள்.

தரகர் சும்மா இருப்பானா... பக்கத்திலேய வசதிகுறைவான வீட்டில் பெண்பார்க்க அழைத்துச்செல்கிறான். கணவனை இழந்த அந்த பெண்ணின்தாய் கம்மல்,மூக்குத்தி போடுவதாகவும் ,மேக்கொண்டு தன்னால் முடிந்ததை செய்வதாகவும் சொல்கிறார். கடுங்காப்பியுடன் வரும் பெண்ணை பார்க்கிறான் கொண்டுசாமி, வெயிலும் ,கடும்உழைப்பும் சேர்ந்து அவள் இளமை அழகை உருமாற்றியிருந்ததை பார்க்கிறான்.

அந்த பெண் வீட்டிலிருந்து வெளிவரும் தரகர், பெரியசம்சாரி வீட்டுக்கு பெண்பார்க்க கொண்டுசாமியை அழைக்கிறான். கடுங்காப்பியே போதும் எனக்கு என்கிறான்

கொண்டுசாமி.

பெண்பார்ப்பதை பொழுது போக்காக செய்யும் ஆண்கள் இருக்கிறார்கள். பெண்ணுக்கு மூக்கு சரியில்லை,முகர சரியில்ல,நகை பத்தல,குடும்பம் சரியில்ல என குறை சொல்லித்திரியும் ஆண்கள் அனேகம் உண்டு.

பெண் வீட்டாரும் வசதியான மாப்பிள்ளை அமைந்தால், அவனின் குணநலன்களை பார்க்காமல் பெண்ணை கொடுத்துவிட்ட பின் அவதிப்படும் பொற்றோரும் உண்டு.

இதற்கிடையில் தனக்கான நிலையிலிருந்து பெண்ணின் தோற்றம், வசதி ,குடும்பச்சூழ்நிலையை கவனத்தில் கொள்ளாமல் தனக்கான,தன் எதிர்காலத்திற்கு பெண்ணை தேர்வு செய்த கொண்டுசாமி இக்கதையின் சிறப்பான கதாபாத்திரம்.குடும்ப வாழ்க்கையில் பல கட்டங்களில் முடிவெடுப்பது மிக முக்கியமானது. அதை சரியாக செய்தான் கொண்டுசாமி.கடுங்காப்பி என்பது பெண்ணின் கறுப்பு நிறத்தையும் வறுமையையும் குறிக்கும் குறியீடு.

**நீத்தா...**

15 ஆண்டுகளுக்கு முன் குஜராத்தில் நாரி கிராமத்தில் நடந்த உண்மை சம்பவத்தின் சிறுகதை வடிவம்.திருமணத்திற்கு பின்பான பெண்ணின் வாழ்கையை சுற்றி நடக்கின்ற சம்பவத்தின் தொகுப்பு. குடும்பத்தில் பிரச்சனைகள் வருவது இயல்பு.குடும்பத்திற்கு வெளியிலிருந்து வரும் பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்கிறோம் என்பதுமுக்கியமானது. திருமணமான நீத்தா சாதி வெறியர்களால் கற்பழிக்கப்படுகிறாள் .அதனை நீத்தாவும் அவளது குடும்பமும் குறிப்பாக அவளது கணவரும் எப்படி எதிர்கொண்டார்கள் என்பது நீத்தா கதை.

நீத்தா குஜராத்தில் நாரி என்ற கிராமத்தில் பிறந்தவள். பாவாஜி என்ற பிற்படுத்தப்பட்ட சமுகத்தை சேர்ந்தவள்.

நாரிக்கு பக்கத்திலுள்ள தத்வா என்ற கிராமத்தை சேர்ந்த சிறுவியாபாரி தினேஷைக்கும் நீத்தாவுக்கும் திருமணம் நடக்கிறது.தத்வா கிராமம் படேல்,தர்பார் என்ற உயர் சாதிகளின் ஆதிக்கம் உள்ள கிராமம்.அதிலும் தர்பார்கள் முரட்டு சுபாவம் கொண்டவர்கள். தங்கள் ஆதிக்கத்தைபயன்படுத்தி பெண்களை கிண்டல் செய்வது, துன்புறுத்துவது வழக்கம்.

இதில் நீத்தா மாட்டிக்கொண்டாள். ஆனால் மற்ற பெண்களை போல் இல்லாமல் தர்பார் ரவுடிகளுக்கு தக்க பதிலடி கொடுத்தாள் . ஆத்திரம் தாங்கமல் உயர் சாதி ஆணவம்,ரவுடித்தனமும் கொண்ட தர்பார் சமூகத்தை சேர்ந்த பிரவின் சிங்கா அவனது கூட்டாளிகளால் நடுத்தெருவில் நீத்தா கொடூரமாக தாக்கப்பட்டு பலமுறை கற்பழிக்கப்பட்டாள்.

மாலை வீடுதிரும்பிய கணவன் தினேஷிடம் கதறி அழுத நீத்தா தனக்கு ஏற்பட்டஅவமானத்திற்காக விஷம் குடித்து தற்கொலை செய்து சாகப்போவதாக சொல்கிறாள். அதற்கு கணவன் “இது உன் தப்பா? நீ என்ன செய்வே பாவம்... ரவுடிகள் செஞ்ச தப்புக்கு நீ சாகணுமா? தப்பு செஞ்சவங்களை தண்டிக்கணும் நீத்தா அந்தபோராட்டத்தில் நாம உயிர் போச்சுன்னா அது பரவாயில்லை என்கிறான்”. போராட்டமா ? அது எப்படி முடியும் நாம தாழ்த்தப்பட்ட சாதி,உயர்சாதிக்காரங்கள எதிர்த்து எப்படி சாத்தியம் என்கிறாள் நீத்தா...

அது முடியும் நாம காரியத்துல இறங்குவோம் என்கிறான் கணவன் தினேஷ். நீ ஏன் அவனுக்கு கிட்ட வம்பிழுத்தே மானம் போச்சே என புலம்பாமல் நடந்த சம்பவத்திற்கு மனைவி மீதே பழி போடமல் தைரியமாக பேசுகிறான் கணவன்.

நீத்தாவுக்கு நடந்த கொடுமையை தினேஷ் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க மூன்று மாத கால இழுபறிக்கு பிறகு ஏற்றுக்கொண்ட காவல்த்துறை பெயரளவிற்கு நடவடிக்கை எடுக்கிறது. தங்கள் மீது புகார் கொடுத்த தால் தர்பார் சமூகத்தினர் நீத்தாவின் வீட்டினை அடித்த நொருக்குகிறார்கள்,ரூ.60 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களை கொள்ளை அடித்து ச்செல்கிறார்கள்.பொய் வழக்கு மூலம் தினேஷ் ஜெயிலில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யபடுகிறான்.குஜராத் சமாச்சார் என்ற நாளிதழ் மூலம் நீத்தா& தினேஷ்க்கு நடந்த கொடுமை வெளிஉலகத்திற்கு வருகிறது.புகழ் பெற்ற வழக்கறிஞர் மூலம் இவர்களுக்கு நிவாரணமும் இவர்களை துன்புறுத்தியவர்களுக்கு தண்டனையும் கிடைக்கிறது.

இவர்களுக்கே கிடைத்த வாய்ப்பாக குஜராத் பஞ்சாயத்து தேர்தலில் இவர்களின் தத்வா கிராமம் பெண்களுக்கான இடஒதுக்கீடுகிடைக்கிறது. நீத்தா வை எந்த சமூகம் இவர்களை ஒதுக்கி வைத்ததோ அதே தர்பார்,படேல் சமூகத்தினரின் ஆதரவோடு நீத்தா பஞ்சாயத்து தலைவியாக அமோக வெற்றி பெறுகிறாள்.

வாழ்க்கை சிக்கல் மிக்கது.எதிர்பாராத திருப்பங்கள் உள்ளது. அதிலும் நீத்தா போன்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு கூடுதல் பிரச்சனைகள். அதை கடந்து நிற்கிறாள் நீத்தா.

**குடியா...குயிலி..காமாட்சி**

உங்கள் துண்டை நான்பயன்படுத்திக்கொள்ளலாம்,உங்கள் சட்டையை நான் பயன்படுத்த முடியாது. உங்கள் அனுபவம் எனக்கு தேவைப்படலாம்... உங்கள் வாழ்க்கையை நான் வாழமுடியாது.

குடியா..குயிலி...காமாட்சி என்ற 3 பெண்களின் வேறுபட்ட திருமண முடிவுகள் . இது சரிதானா என கேட்கதோன்றும் முடிவுகள் அவை.

**காமாட்சி**

காமாட்சியின் கணவன் நல்லவன் இல்லை.காமாட்சியை தொட்டதுகூட இல்லை.வேறு பெண்ணோடு தொடர்பில் இருக்கிறான். ஒருவயதான பாட்டியின் ஆலோசனை படி மூலிகை பொடியை உணவில் கலந்து கொடுத்தால் கணவன் தன்னை சுற்றிச்சுற்றி வருவான் என நினைக்கிறாள். மூலிகையை உணவில் கலந்ததும் உணவு சிவப்பு நிறமாகிவிட பயந்து போன காமாட்சி அதை வீட்டுக்கு வெளியில் கொட்டுகிறாள். அந்த உணவை சாப்பிட்ட பாம்பு நாகராஜனாக உருவெடுத்து காமாட்சியோடு உறவு வைத்துக்கொள்கிறது. அதன் பயனாக காமாட்சி கர்ப்பம் அடைகிறாள்.நாகராஜன் ஒரு கட்டத்தில் தான் ஒரு பாம்பு என்றும் தன்னால் உனக்கு எந்த பிரச்சனையும் வராது உனக்கு உதவுவேன் என்று சொல்லி மறைகிறது. காமாட்சியின் கர்ப்பம் கணவனுக்கு தெரியவருகிறது.ஊர் பஞ்சாயத்து முன் காமாட்சியின் கர்ப்பத்திற்கு தான் காரணமில்லை என வாதிடுகிறான். காமாட்சி புற்றிலிருந்த பாம்பை கையில் பிடித்துபடி தன் கணவனையும்,கையில்பிடித்திருக்கும் பாம்பையும் தவிர நான் யாரையும் தொட்டதில்லை

என சத்தியம் செய்கிறாள்.இங்கே காமாட்சி செய்தது சரிதானா?

**குயிலி....**

பாரதி உண்டாக்கிய கலாச்சார அதிர்வு குயில் பாட்டு. வீர முருகன் என்னும் வேடன் மகள் குயிலி. அவளுக்கு தினசரி மனம் மிகுந்த பூக்களையும் தேன்,பழங்களையும் கொண்டுவந்து கொடுப்பான் மாடன்..குயிலியின் மாமன் மகன்.தினசரி தனக்கு எதோ செய்கிறானே என்ற நினைத்து மாடனின் திருமண கோரிக்கையை ஏற்கிறாள் குயிலி. முழுவிருப்பத்தோடு அல்ல.

தன் தந்தையின் வற்புறுத்தலுக்காக பெரும் வசதி படைத்த நெட்டைக்குரங்கனுக்கு மாலையிட சம்மதிக்கிறாள் குயிலி. இன்னும் திருமணத்திற்கு 12 நாட்கள் இருக்கும் போது காட்டுக்கு வேட்டைக்கு வந்த சேரமைந்தனை காண்கிறாள் குயிலி,கண்டதும் காதல் கொள்கிறாள்.தன் மனதிற்கு பிடித்த வாழ்க்கை அமையும் போது நிர்பந்தங்களை மீறுவது சரி என்கிறார் பாரதி. கொடுத்த வாக்குக்காக மாடனை திருமணம் செய்வதோ, மண ஒப்பந்தம் ஏற்பட்டதால் நெட்டைகுரங்கனை மணப்பதோ சரியல்ல மணதிற்கு பிடித்த வாழ்க்கையை அடைவது பெண்ணுக்குசரியாக தீர்வு என்கிறாக் குயில் பாட்டில் பாரதி.

**குடியா....**

உத்திரபிரதேசத்தில் பரபரப்பாக பேசப்பட்ட நிஜ நிகழ்வு.ஆரிப் இந்திய ராணுவ வீரர்.15 வயது குடியாவை 1999ல் திருமண செய்கிறார்.திருமணமான 17வது நாளில் கார்க்கில் போருக்கு போனவன் பாகிஸ்தான் படைகளால் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறான்.4 ஆண்டுகளாக எந்த தகவலும் இல்லை. ஆரிப் இறந்திருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு குடியாவுக்கு தௌபீக் என்பவரோடு 2 வது திருமணம் நடக்கிறது. குடியா கர்ப்பம் அடைகிறாள். இந்நிலையில் இறந்ததாக கருப்பட்ட முதல்கணவன் ஆரிப் திரும்புகிறான்.

ஊர் பஞ்சாயத்து கூடுகிறது. ஆரிப்பை முறையாக குடியா விவகாரத்து செய்யாததால் 2 ம் திருமணம் செல்லாது என முடிவு செய்யப்பட்டு .ஆரிப்புடன் குடியா வாழ வேண்டும் தீர்ப்பு வழங்குகிறது ஊர்பஞ்சாயதக்து.குடியாவின் தகப்பனும் அதற்கு ஆதரவாக நிற்கிறார்.ஆரிப்புடன் வாழும் குடியாவிற்கு ஒரு சிக்கல் என்ன வென்றால் வயிற்றில் வளரும் குழந்தையை யார் ஏற்பது என்பது தான்.

நாட்டிற்காக தியாகம் செய்த ராணுவ வீரன்,ஊர்பஞ்சாயத்தின் நிர்பந்தம் இவற்றால் குடியா மவுனமாக ஆரிப்புடன் வாழ சம்மதிக்கும் குடியா தன் மனதில் உள்ள முடிவை சொல்லாமலேயே நிர்பந்தத்திற்கு அடிபணிகிறாள்.பிரச்சனைகள் வரும் போது ஊர் பேசுகிறது,தன் தந்தை உள்ளிட்ட குடும்பதது ஆண்கள் பேசுகிறார்கள் .ஆனால் பிரச்சனைகளுக்கு முடிவெடுக்கும் அதிகாரம் பெண்களுக்கு கிடைப்பதில்லை.

ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கின்ற பிரச்சனைகளை,சிக்கல்களை,அவிழ்க்க முடியாத முடிச்சுகளை பூ மரப்பெண் சிறுகதை தொகுப்பு மூலம் மிகமிகசுறுக்கமாக சொல்கிறேன். அவை உங்கள் மனதில் விவதாங்களை உருக்கலாம். வாய்ப்பிருந்தால் நூலை வாங்கி முழுமையாக படியுங்கள் மேலும் விவாதங்கள் வழி வாழ்க்கை யை கற்றுக்கொள்ள முடியும்.



# சிகப்பு விளக்கு

● ப .தனஞ்ஜெயன்.

அந்த தெரு பிரதான சாலையிலிருந்து விலகி உள்பக்கமாக இருந்தது.எப்பொழுதும் அமைதி."மனங்கள் அமைதியாக இருந்ததா..?"என்றால் கதவிற்குள் செல்ல வேண்டும்.அன்று இருவர் வெள்ளைக்கலர் காரில் வந்து நின்றார்கள்.இந்த தெருவில் அகிலா வீடு எங்கே இருக்கிறது எனக்கேட்டார்கள்.தெருவில் சென்று கொண்டிருந்த மணிக்கு ஆர்வம் பொங்கிட அகிலா வீட்டை அடையாளம் காட்டினான்.

சுற்றிலும் சிமெண்ட்டால் பூசப்பட்டு சிமெண்ட் ஷீட்டுகள் போடப்பட்டிருந்தது. எப்பொழுதும் வெப்பமாகவே இருந்தது அந்த வீட்டு அறைகள்.எப்படிச் சம்பாதித்தாலும் இந்த சமூகம் திரும்பப் பெற்றுக்கொள்ளும் உத்தியை அழகாக அமைத்திருக்கிறது. அப்படிதான் அகிலாவிற்கும் எவ்வளவு சம்பாதித்தாலும் தன்னை பாதுகாத்துக்கொள்ளவே

சரியாகப் போய்விடுகிறது.

அகிலாவைப்பற்றியும் அவள் வீட்டைப் பற்றியும் பல இன்பமான தகவல்களை பரிமாறிக்கொண்டார்கள் அந்த தெரு முழுவதும்.அகிலா யாரிடமும் அவ்வளவாகப் பேசமாட்டாள்.தெற்கு பகுதியில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் மரபிலிருந்து எங்கள் ஊர் வாணிய செட்டியாருக்கு மருமகளாக வார்க்கப்பட்டாள்.வந்த புதிதில் நல்ல உடல்வாகு,யார் சென்றாலும் திரும்பிப்பார்க்கும் அளவிற்கு உடல் வளர்ந்துபோயிருந்தது.

வந்தசிலவருடங்களில்இரண்டுபெண்குழந்தைகளைப்பெற்றெடுத்தாள்."வாழ்க்கையின் கைகளும் கால்களும் சும்மா இருக்குமா என்ன..?"சில நாட்களில் தன் கணவனோடு அகிலாவிற்கு முரண்பாடு ஏற்பட்டது.இரண்டு மனதிற்குள் செல்லும் இந்த வாழ்வு விரிசலைத்தாண்டி அகிலா அலையாகவும் அவள் கணவன் பாறையாகவும் பிரிந்தார்கள். எப்பொழுதும் அகிலாவின் அலை பாறை மேல் வீசிக்கொண்டேயிருக்கும் சில மிக வேகமாகப் பாறையைத் தாண்டியும் விழும்.

இவள் வேலைப்பார்க்கும் இடங்களில் அனைவரிடமும் நெருக்கமாகப் பழகினாள். பெண்கள் சுதந்திரமாகப் பழகினால் நிறைய அர்த்தங்கள் கற்பிக்கப்பட்டுள்ளது இவளையும் விட்டுவைக்கவில்லை.கொஞ்சம் சத்தமான பேச்சு,சிரிப்பு அவளது கணவனுக்குப் பிடிக்கவில்லை.

நாகரீகத்தின் உச்சத்தை அடைந்தாள்.சாதாரண சேலையிலிருந்து சற்று அழகான சேலைக்கு மாறினாள்.தலை முடியை நெற்றியின் இறக்கத்தில் கொஞ்சம் ஸ்டைலாக விட்டுக்கொண்டாள்.உதட்டுக்குச் சாயங்கள்,உடலுக்குச் சாயங்கள் என நாகரீகம் பேசத்தொடங்கியது அவள் உடல்.

அவள் உடலின் அழகும் கூடியது.அது பிடிக்காத அவள் கணவன் இருக்கும் பொழுது, சில ஆண்கள் அவளை வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து வீட்டில் விட்டுச்செல்வதும் ஏற்றிச்செல்வதுமாக இருந்தது.

அதற்கு அவள் சொல்லும் காரணம் பேருந்து கிடைக்கவில்லை.இன்று கம்பெனி வாகனம் வரவில்லை என்று சொல்வது மேலும் அவனுக்கு வெறுப்பூட்டியது.இது முற்றிப்போனது.இனிமேல் இந்த நாகரீகத்தின் உச்சத்தோடு என்னால் பொருத்திக்கொள்ள முடியாது என்று முடிவிற்கு வந்து

முறைப்படி விவாகரத்து எதுவும் இல்லாமல் பிரிந்தார்கள்.

நிரந்தரமாகப் பிரிந்தார்கள்.அகிலா மட்டும் தன் குழந்தைகளோடு எங்கள் தெருவிலே இருந்தாள்.அகிலாவின் கணவன் எங்குச் சென்றான் என இன்று வரை யாருக்கும் தெரியவில்லை. ஒருவன் இறந்துவிட்டிருப்பான் என்றான். வயதான ஒருத்தி காசி,ராமேஸ்வரம் எனச் சென்றிருப்பான் என்று கூறினாள்.அகிலாவின் கணவன் சென்றது அவளுக்கு வசதியாகப்போச்சு என்று பேசிக்கொண்டார்கள்.ஆனால் அகிலா அப்படி நினைத்தாளா என்று ஒருவரும் அவளிடம் கேட்கவில்லை. அகிலாவின் இரண்டு பெண்களில் முதலில் வளர்ந்தவளுக்குப் பிஞ்சு வயதிலே பாலியல் தொந்தரவு விளையாட்டாகக் கொடுக்கப்பட்டது.

இந்த சமூகம் தனியாக இருக்கும் பெண்களுக்கு எப்பொழுதும் பாலியல் சார்ந்த

நிலையைத் தவிர வேறு எதனுடனும் பொருத்திப்பார்ப்பதில்லை.

அகிலா வேலைக்குச் சென்று வீடு திரும்பிய போது அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீண்டெழ வெகுநாட்கள் ஆயிற்று.முதல் மகள் மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்கப்பட்டிருந்தாள். நான்கு ஐந்து பேர் செய்த காம கொடூரங்களில் விளைந்து வந்த சிறுமியின் உடல் கருகி போச்சு.

அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.காலத்தை ஏற்றுக் கொள்வதா,எதிர்ப்பதா என்ற போராட்டம்.அவளால் நீதி கேட்க முடியாது.இருந்தும் விரைந்தாள்.அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு உள்ளே சென்றவளை அங்கிருந்த இன்ஸ்பெக்டர் பார்த்துப் பிரமித்துப்போனார்.அவள் மனம் பிள்ளையைப் பறிகொடுத்துத் தவித்துக்கொண்டிருந்தது.

அவளுக்காகக் குற்றவாளிகளைப் பிடித்து சிறிது மிரட்டல் பாவனைச் செய்து விட்டார்.அவளுக்கும் வேறு வழி தெரியவில்லை.இரண்டு நாட்கள் துக்கங்களுக்குப்பிறகு அகிலா, இன்ஸ்பெக்டர் முத்தோடு நெருங்கினாள்.சில நேரங்களில் போலீஸ் ஜீப்பில் வீடு வந்து இறங்கினாள்.இப்படியே ஒரு மனிதர்கள் விட்டு மனிதர்கள் எனத்தாவித் தாவி அவள் வாழ்வு சென்று கொண்டிருந்தது.மனிதச்சங்கிலியோடு தொடர்புகொண்டிருக்கிறது இந்த சிகப்பு விளக்கு.

அவளுடைய அழகான உடல் மற்றும் முகம் தாண்டி அவளுடைய மனதின் எல்லையை யாரும் தொடவில்லை.இவளுக்கு இப்படியே பழகிவிட்ட வாழ்க்கைச் சூழலை வயிற்றுப் பிழைப்பிற்கு எதையாவது பொருத்திக் கொள்ள வேண்டியதாயிருந்தது.இது மனதின் அடிப்படையைச்சார்ந்து இருக்கிறது.

உடல் தாண்டி செல்வது என்பது மரணமாகத்தான் இருக்கிறது.அப்படி மரணத்தை விரும்பியும் இருக்கலாம் அவள்.அவள் ஆண் சமூகத்தால் அழுத்தம் தரப்பட்டுக்கொண்டே இருக்கிறாள்.ஆண் சமூகத்தால் நிறைய முறை மரணமும் அடைந்திருக்கிறாள்.அதாவது செத்துச் செத்துப் பிழைக்கும் வாழ்வைச் சந்திப்பாள்.கடன் சொல்லும் வாடிக்கையாளர்களைப் பார்த்து சில நேரம் கத்துவாள்.

இப்படிச் செய்து சாப்பிட்டறதை விட சும்மா இருக்கலாம்.

நான்கு வீட்டிற்கு பத்து பாத்திரம் தேய்க்கலாம்.செத்துப்போகலாம். அனைத்தையும் செய்து பார்த்தவள்தான் அகிலா.உடம்பை வித்து பிழைக்கின்ற பிழைப்பு ஒரு பிழைப்பா? நல்ல கேள்விதான். ஆனால் அந்த விற்கிற உடம்பை வாங்குகிறது ஒரு பிழைப்பா?என்கிற கேள்விமட்டும் எழவேயில்லை.இப்படிப் பரிதாபப்படும் மனிதர்களைத் தாண்டி அகிலாபோன்ற நிறையப் பெண்களின் வாழ்க்கை காப்பாற்றப் படாமலும் கண்டுகொள்ளாமலும் நடந்தேறித்தான் வருகிறது.

சில சட்டங்களைத்தாண்டி சமூக ஒழுங்கை காலம் காலமாக இப்படித்தானே அமைத்துள்ளோம்.இதற்கு எடுத்துக்காட்டாக அறிஞர் அண்ணாவின் வாக்கியம் ஒன்றை தலைகீழாகச் சொல்வாள் அகிலா,அவன் ஒன்றும் உத்தமன் அல்ல,நான் ஒன்றும் பத்தினி அல்ல என்பாள்.சிரிப்பாள்.அந்த சிரிப்பில் நல்ல அங்கதம் இருக்கும்.

அவளுக்கு சமூகம் நிறையச் சிக்கல்களைத்தந்தது அவளைத் திருவிழாவில் சந்தித்தாலும்,கடைத்தெருவில் சந்தித்தாலும் ,பேருந்தில் சந்தித்தாலும் பாலியில்

கண்ணோட்டத்தில் தள்ளுவார்கள்.ஆனால் அகிலாவிடம் பாலியல் விதிமுறைகள் சிலவற்றை வைத்திருந்தாள். தானாக யாரையும் தேடிப்போகமாட்டாள். அவளைத்தேடி வருபவர்களை மட்டும் நேசிப்பாள் அகிலா.கோலாகலமாக்கத் திருவிழா நடந்துகொண்டிருந்தது. அன்றைய நாள் அகிலாவின் வீடு தீப்பற்றி எரிந்தது.தீயணைப்பு வாகனம் ஒன்று தாமதமாக வந்தது.முழுவதுமாக எரிந்து தீக்கனல் அடங்கிப்போயிருந்து. அதில் கிடந்த சில கம்புகள் மட்டும் தகதகவென்று நெருப்பைக் கக்கியது.அதை அணைத்து விட்டுக் கிளம்பியது வாகனம்.

அகிலாவின் முகத்தில் கரிபூசிக்கொண்டு நைட்டியோடு நின்றிருந்தவளைக் கண்டு யாரும் பரிதாபப்படவில்லை.அவளைப்பாவப்பட்டவள் என்று பேசினார்கள்.

தகவல் அறிந்து தன் போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துவின் சைரன் பொருத்தப்பட்ட ஜீப் வந்து நின்றது.அங்கு விசாரணை நடந்து முடிந்து அவளை ஏற்றிக்கொண்டு சென்றது. அவளது இரண்டாவது மகள் பக்கத்து வீட்டில் படுத்திருந்தாள்.

காலை அகிலாவை ஏற்றிக்கொண்டு வந்து இறக்கிவிட்டுச் சென்றது அந்த வாகனம்.தன் வீட்டிற்கு நிவாரணம் பெற விண்ணப்பம் ஒன்றோடு தொகுதி மந்திரி ஜானகி ராமனைச் சந்திக்கப் புறப்பட்டாள்.சில சந்திப்புகளில் தன் அழகு ஊடுருவிச் செல்கிறதோ என்னவோ அவள் வயிற்றுப்பசி ஊடுருவிச் சென்றுவிடுகிறது.ஜானகி ராமன் காரில் வந்திறங்கினாள் அகிலா.அவருடைய அலுவலகத்தில் சமையல் வேலைக்குப் பரிந்துரைக்கப்பட்டாள் அகிலா.எத்தனையோ சிகப்பு விளக்குப் பொருத்தப்பட்ட காரில் வந்திறங்கினாலும் அவளுக்கான உடல் சுரண்டலைத்தாண்டி அவளால் பெரிதாகச் சம்பாத்தியம் செய்யமுடியவில்லை.அகிலாவின் உடலை விரும்பியவர்கள் அவளுக்குச் சன்மானமாகப் பெரிய தொகையைத் தந்தால் அவள் இந்த நிலையைத் தொடரமாட்டாள்.ஆனால் அப்படி ஒருவரும் செய்யாமல் ஏழ்மையில் அவளை கிறங்கடித்து உடல் தேவையைத் தூண்டினார்கள்.

ஜானகி ராமன் இரண்டாவதாகத் திருமணம் செய்து கொள்வதாக உத்தரவாதம் தந்தார்.அகிலாவிற்குத் தெரியும் எத்தனையோ வாடிக்கையாளர்களின் வாக்குறுதிகளைக் காது குளிர கேட்டு எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமார்ந்து போனவள் அவள்.

ஓடினாள் ஓடிக்கொண்டேயிருந்தாள்.இளமை சரிய ஆரம்பித்தது.முன் பற்கள் சில வீழ்ந்தன.உடல் மெலிதாக வற்றியது.உடலில் ஹார்மோன்களின் நாட்டியம் குறைந்து போனது.அதற்குப் பிறகு அவளும் எந்த முயற்சியும் செய்யவில்லை.ஏதோ கிடைக்கும் வேலைக்குச் செல்வாள். வழக்கமாக வயதாகிவிட்டால் செய்யக்கூடிய செக்கியூரிட்டி வேலைக்குச் சேர்ந்தாள்.தன் மரண நாட்களை யோசிக்கத் துவங்கிய காலம் அது. அவளுடைய இரண்டாவது மகள் அஷ்டத்திற்குக் காதல் வயப்பட்டது. திருமணம் விருப்பப்படி செய்துகொண்டாள்.

சில நாட்களில் அகிலாவிற்கு அழகான பேத்தி பிறந்தாள் பெயர் மீரா.அஷ்டத்தின் கணவனுக்குச் சந்தேகம் அதே சந்தேகம் ஏற்பட அவர்களும் பிரிகிறார்கள்.சில குடும்பத்திற்கே உண்டான சாபக்கேடு என்று பேசிக்கொண்டார்கள் தெரு முழுவதும்.

அகிலாவிற்குத் தீராத துயரமாகிவிட்டது அஷ்டத்தின் வாழ்வு .தன் குடும்பத்தின் நிலையற்ற தன்மையையும் தன்னைப்போன்றே சுதந்திரத்தை விரும்பும் தன் மகளை

அழைத்துக்கொண்டு ஆட்டோவில் புறப்பட்டவளுக்கு நிறைய ட்ராபிக் ஜாமில் நின்று செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஆகிறது. எரிந்துகொண்டிருந்த சிகப்பு விளக்கு நிறுத்தப்பட்டு பச்சை விளக்கு எரிகிறது.

ஜானகி ராமனைச்சந்திக்கிறாள். அவருடைய வனப்பு குறையாமல் அப்படியே இருக்கிறது. ஒரு வேளை பணத்திலேயே இருப்பவர்கள் வயதும் உணவும் ஒரு பிரச்சனையே இல்லை என்பது புரிந்தது அவளுக்கு. தன் மகளுக்கு வேலை மனு ஒன்றை அளித்தாள்.

வேலைக்குச் சிபாரிசு செய்கிறேன் ஒரு தனியார் தொழிற்சாலையில் வேலைக்குப் பரிந்துரைத்து விட்டார். எப்படியோ அஷ்டத்தைக் காப்பாற்றிய உணர்வுகளோடு தாயும் மகளும் வீடு திரும்பினார்கள். பெண்கள் மேல் அக்கறை எடுத்துக்கொள்வது போன்று ஆரம்பித்தது பிரச்சனை. அஷ்டத்தோடு வேலைப்பார்த்த மேனேஜர் முதல் சீண்டலைத் தந்தார்.

சிகப்பு விளக்கு என்பதற்கு இரண்டு விளக்கம் சொல்லப்படுகிறது போராட்டமான வாழ்வு மற்றொன்று அபாயகரமான வாழ்வு. அப்படித்தான் திடீரென்று தொழிற்சாலையில் சிகப்பு விளக்கு எரிந்துகொண்டே சைரன் அடித்தது.

ஆறுமாதத்திற்கு ஒரு முறை அபாயமணியும் அந்த விழிப்புணர்வையும் சோதிப்பார்கள். அந்த சோதனையின் போது இவர்கள் உள்ளிருந்து சமிஞ்சைகள் தந்தார்கள். மேனேஜரும் அஷ்டமும் கைகோர்த்து ஓடிவரத்துவங்கினார்கள்

இவர்களுக்குள் விளக்கு எரியத்தொடங்கியது. அஷ்டத்தை ஏற்றிக்கொண்டு வீட்டில் விட்டுச்சென்றார் மேனேஜர். அஷ்டத்தைத் தேடி ஒரு சிலர் இரவு நேரங்களில் வரத்தொடங்கினார்கள்.

அகிலாவிற்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை தன் மகளின் செயல். மரபணுவில் இந்த மரபு கடத்தப்படுவதை விரும்பாமல் அஷ்டத்தோடு சண்டையிடுவாள். இதையெல்லாம் மறக்கச் சுற்றுலா சென்று வரலாம் என முடிவெடுத்து

கிராமத்திலிருந்து புறப்பட்ட ஆன்மீக சுற்றுலா சென்றார்கள். அன்று வெள்ளைக்கலர் காருக்கு வழிகாட்டிய மணியும் அவர்கள் கூட்டத்திலிருந்தான். ராமேஸ்வரம் சென்றார்கள்.

அங்கு மணி எதிர்பார்க்காதது ஒன்று நடந்தது.

வேனை விட்டு இறங்கி சில கடன்களை முடித்துக்கொண்டு அமைதியாக இருந்த சமுத்திரத்தில் குளித்தார்கள். பிறகு பாவம் போக்கும் ஒவ்வொரு கிணறாகக் குளித்துவிட்டு கோவிலுக்குள் அனைவரும் அவர் அவர் சகாக்களுடன் சென்றார்கள்.

அங்கு வரிசையில் அமர்ந்திருந்தவர்களைச் சந்நியாசி என்பதா? பிச்சைக்காரர்கள் என்பதா? தெரியவில்லை மணிக்கு. அந்த வரிசையில் தீடிரென்று அகிலாவின் கணவன் சேகரைச் சந்தித்த மணி கண்ணீர்விட்டான். சேகரும் அடையாளம் தெரியாமல் மாறிப்போயிருந்தான். அவனுடைய முன்னங்கைகளில் அகிலா என்ற பச்சை குத்தப்பட்ட எழுத்துகள் அவனை அடையாளம் காண்பித்தது. சட்டென்று துணியால் கைகளை மூடிக்கொண்டான்.

“அண்ணே..” என்று பாசமாக அழைத்தான் மணி. “இருடா மணி..” என்று சற்றுத்தள்ளி பின்புறம் உள்ள தனிமையான இடத்திற்குச் சென்று ஒரு மண்டபத்தில் இருவரும்

அமர்ந்தார்கள்.தனது கிராமத்தை அக்கறையாக விசாரித்தான் சேகர்.அவனுக்குத் தெரிந்த சிலர் இறந்து போன செய்தியையும் பெரிய மகள் இறந்து போன செய்தியையும் கேட்டுத்துடித்தான்.

அனைத்து விஷயங்களையும் மணி சேகரிடம் சொன்னான்.அகிலாவும்,அஷ்டமும் சேகரை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் தாண்டிச்சென்றார்கள்.கவனிக்கவும் இல்லை.பொங்கல் விடுமுறையில் அஷ்டமும் அவளது குழந்தை மீராவும்,அகிலா அக்காவும் வந்துள்ளதாகத் தெரிவித்தான் மணி.சந்நியாசிகள் கூட்டத்தில் வாழ்ந்த சேகருக்கு வருத்தம். எப்படியோ நம்மைக் கண்டுபிடித்து விட்டானே என்று.

“சரி.. வாங்க அண்ணே வீட்டிற்குப் போகலாம்” என்றான் மணி.உச்சபட்ச வேதனையாக ஒலித்தது அந்த வார்த்தைகள் சேகருக்கு. “கோவிலுக்கு உள்ளே சென்று வா நான் இங்குதான் அமர்ந்திருப்பேன்” என்று மணியை அனுப்பிவைத்தான் சேகர். அவர்கள் தெய்வ வழிபாடுகளை முடித்து விட்டு வர சில மணி நேரங்கள் ஆனது. அப்பொழுது மீராவைக் காணவில்லை என வந்திருந்தவர்கள் ஆளுக்கொரு திசையில் தேடினார்கள்.

மணி கோவிலுக்குள் தேடிவிட்டு,சேகர் அமர்ந்திருந்த இடத்தில் வந்து பார்த்தான். அங்குக் குழந்தை மீராவையும் காணவில்லை.சேகரையும் காணவில்லை.

அடர்த்தியான கற்பூரத்தின் சிகப்பு ஜுவாலை அனைத்திற்கும் விடை சொல்வது போல் எரிந்து கொண்டிருந்தது.தேடித்தேடி அகிலா மற்றும் அஷ்டம் அழுது, அழுது இருவர் குரலும் வற்றிப்போனது. வழக்கமாக சைரன் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ்,போலீஸ்வாகனம் மற்றும் தீயணைப்பு வாகனம் செல்வதும்,வருவதுமாக இருந்தது.

கோவிலிருந்து கிழக்கு நோக்கி இரண்டு கிலோமீட்டர் தொலைவில் கடற்கரை ஓரத்தில் சிதைந்த இரண்டு சடலங்களில் ஒதுங்கியிருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். அகிலாவோடு அனைவரும் அந்த இடத்திற்கு விரைந்தனர். இறந்து போன பிரேதங்களை அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை.மீன்கள் அரித்திருந்தது.அதைப்பார்த்தவுடன் அகிலாவும், அஷ்டமும் அழுதார்கள்.

சேகரின் பச்சைகுத்திய கைகளில் எந்த எழுத்துகளும் இல்லை.மீராவைக் கண்டுபிடித்த அகிலாவால் இன்னொரு பிரேதத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.இரண்டுபேர் நீண்ட படுக்கையில் வைத்து ஆம்புலன்ஸில் இரண்டு பிரேதங்களை ஏற்றினார்கள்.சிகப்பு விளக்கு சத்தத்துடன் புறப்பட்டது வாகனம்.

பிரேதப் பரிசோதனை கூடத்தில் முன் சிகப்பு விளக்கு எரிந்தது.இறந்து போன சடலங்களின் உடல்கூறுகளுக்கு விளக்கம் தந்து கொண்டிருந்தது அங்கிருந்து வந்த போஸ்மோர்டம்ரிப்போர்ட்.ஆனால்உடல்கூறுகளின்மனச்சுமையைச்சொல்லவேயில்லை போஸ்மோர்டம் ரிப்போர்ட் இன்றுவரை. மணியாலும் எதையும் வெளியில் சொல்ல முடியவில்லை.

அஷ்டம் அழுதுகொண்டே அவள் பையிலிருந்த மீராவின் உடைகளை எடுத்து இராமேஸ்வரம் கடலில் வீசிவிட்டு தலை மூழ்கினாள். அங்கிருந்து மீராவின் பிரேதத்தோடு அனைவரும் சொந்த ஊருக்குத் திரும்பினார்கள்.

# கவியாசகன் கவிதைகள்

கார்கால பொழுது
நாலா திசையும் தேடுகிறேன்
அகவும் மயில்களை

❍

அந்தி புல்வெளியில்
அடிவைத்தாலே பறக்கின்றன
ஆங்காங்கு விட்டில்கள்

❍

அந்திப் பொழுது
மெல்ல நகர்கிறது
கோடை நத்தை

❍

ஆடம்பர மாளிகையில்
ஆசையாக வைத்திருக்கிறார்
புத்தர் சிலை

❍

ஒருமுறை இடிஇடிக்க
பலமுறை மிரட்டுகிறது
அந்த மலைத்தொடர்

கோடைக்கால வனம்
முற்றிலும் தீக்கிரையாகிறது
விழுந்த எரிகற்களால்

❍

வரப்பை கடந்துவரும்
மகளின் கைகள் நிறைய
மூக்குத்திப் பூக்கள்

❍

பிரம்மாண்டமான முகப்பு
ஆவலாக உள்நுழைகிறேன்
அத்தனையும் கல்லறைகள்

❍

கூடிழந்த பறவை
மீண்டும் தேடியலைகிறது
கருகிய காட்டை

❍

மேயும் மந்தைகளோடு
வசந்தகால மந்தைவெளியில்
ஆங்காங்கு பட்டாம்பூச்சிகள்

● கட்டுரை



# சிறு கதைகள்

● வேதா இலங்காதிலகம். டென்மார்க்.

சிறுகதைகள் கவிதைகளிலும் பார்க்கப் பெரியது. நாவலிலும் சிறியது. அந்தந்தக் கிராமிய மொழிநடை, நகர வாழ்வுமுறை, மீனவர் வாழ்வு என்று எந்தெந்தத் தொழில் முறையோ அவ்வழியாகவும் மாற்றலாகவும் கதை புனைவார்கள். அது படிப்பினையாகவும், பட்டவர்த்தனமாகவும், கண்டனங்களாகவும், நகைச்சுவையாகவும், காதலாகவும் எழுகிறது.

இயற்கை விபரிப்புகள் கதையில் வரும் போது இயற்கை மீது தனிப் பற்றுதலை உருவாக்குகிறது. பக்தியோடு, பயணத்தோடு, தத்துவத்தோடு பிணைபவை இவ்வழி ஈடுபாட்டைக் கிளப்புகிறது. பல நுணுக்கங்களை விபரிக்கிறது. மனதில் பதிந்து ஈர்ப்பு உருவாகிறது.

சிறுகதைகள்.கொம் என்று எழுதி கூகிள் பண்ணினால் அகிலன் என்று அ னாவிலிருந்து அத்தனை கதையாசிரியர்கள் பெயரும் அவர்கள் கதைகள் பெயரும் இன்னும் பல தகவல்களும் பெறமுடியும். மார்கழி 2011ல் இருந்து இவ் இணையத்தளம் இயங்கி

வருகிறது. 1400க்கும் மேற்பட்ட சிறுகதை எழுத்தாளர்களும், 11000 ற்கும் மேற்பட்ட சிறுகதைகளும் இங்கு காணலாம். இது மொபைல் போன் மூலமும் சாத்தியமாகிறது.

சிறுவயதிலிருந்து வாசிப்புத் துறைக்குப் பிள்ளைகளைத் தயார்ப்படு;துவது ஒரு இனிய அனுபவம். நல்ல கதைகள் மூலம் பழைய பாரம்பரியங்கள், மரபு முறைகளை நன்கு அறிய முடிகிறது. தேவையற்ற பொழுது போக்குகள் இன்றிப் பிள்ளைகள் நல்ல வழியில் செல்ல நல்ல ஊக்கமும் நிறைய வாய்ப்புகளும் உருவாகிறது.

சிறு கதைகள், குறுங்கதைகளாகவும் மிக நீண்டவை நாவல்களாகவும் பிரிவாகிறது. புலம் பெயர்ந்தோர் சிறுகதைகள் அந்தந்த நாட்டுக் கலாச்சார நிகழ்வுகளை மையப் படுத்தி வரும் போது அந்த நாட்டைப் பற்றி அறிய முடிகிறது. அனுபவங்கள் மூலமும் நாட்டு முறைகளை அறிய முடிகிறது.

சிறுகதை எழுதுதலும் ஒரு கலைப் படைப்புத் தான். தன் அனுபவிப்பு என்பதை ஒருமையில் எழுதுதலும், முழுமையும், உணர்வும் அவசியம். வளவள என்று எழுதாது சிக்கனமாக எழுதப் படுவது சிறுகதை. தனது கண்ணோட்டம், தனித்தன்மை, உணர்வுகள் மிக முக்கியமாகிறது. கண்ணியமாகவும், தீவிரமாகவும் அமைக்க வேண்டும்

ஒரு பிரச்சனையை எடுத்துக் கதையாகக் கோர்த்துப் பிணைக்கலாம். வாழ்வில் காணும் பாத்திரங்கள் கூட பல கதைகள் பின்ன வழி வகுக்கும். சொந்த அனுபவம் கூட சுயமாக வடிக்கும் முறையில் கற்பனையோடு சிறு கதையாகிறது. யாரும் சொல்லித் தந்து வருவதல்ல சிறுகதை.

பத்திரிகைகள் சிறு கதைகளை வளர்க்கிறது என்ற கூற்று அருகி வருகிறதோ என்று எண்ணத் ஸீதோன்றுகிறது.


ஒரு முறையில் படித்து முடிக்கக் கூடியதான தன்னளவில் ஒரு அமைப்புத் தான் சிறுகதை. நல்ல சொல்லாட்சி, திடீர் மாற்றம் பெறும் விதம், கருத்துச் செறிவு உள்ளதாக அமைக்கலாம். அரை மணி முக்கால் மணியில்படித்து முடிக்கக் கூடியதாக இழைக்கலாம். எந்தக் குறுக்கீடின்றி வாசிக்கும் திறனுடைத்தாயிருக்க வேண்டும். சைக்கிள் ஓட்டம் போன்று தொடங்கி முடிக்கும் சுவை நிறைக்க வேண்டும். எடுத்தவுடன் கவனமீர்த்துத் தளராது, இயக்கி உச்ச நிலையடைய வேண்டும். முழுதாக வாசகரைக் கட்டிப் போட வேண்டும். சிறு கருப்பொருள் இருத்தலே போதுமானது. சாகசம் நிறைத்தும் எழுதிடலாம்.

ஆரம்பம், மையப்பகுதி, உயர்ச்சி, வீழ்ச்சி என்று பிரிக்கலாம். சிறுகதையில் போராட்டமோ, மனப்போராட்டமோ, சமுதாய மாற்றமாகவோ இருக்கலாம். சிறிதான கட்டமைப்பாக இருக்க வேண்டும். ஒரு நிகழ்வோ, ஒரு மணிப்பொழுதோ, ஒரு வாழும் காலமாகவேனும் நீட்டி முழக்காது அமைக்கலாம்.

சிறுகதைகள் சமூகத்தைப் பிரதிபலிப்பவையே. தனிமனித, குடும்ப, பொருளாதார, சமூகச் சிக்கல், போர், இழப்பு எனப் பலவாகிறது. இதற்குள்ளும் பல கிளைகளுமாகிறது.

நல்ல தலைப்புகள் அமைக்க வேண்டும். தலைப்பு வேறு, கதை வேறாக அமைவது வெற்றி பெறாது. கதை எழுத எழுத முன்னேற்றம் உருவாகும். மொழி கதையமைப்பும் சிறக்கும். ஒவ்வொருவரின் எழுத்து நடையும் ஒரு தனித்துவமாக அமைகிறது. இதன் விளக்கங்களை நான் முன்னர் குறிப்பிட்ட இணையத் தளத்தில் வாசி;த்து அறிந்திடுங்கள். அதனாலேயே கதாசிரியர்கள் பெயர்கள் குறிப்பிட்டு அவர்கள் பாணி பற்றி இங்கு விபரிக்கவில்லை.

● சிறுகதை



# அட்டை

● மாலினி

வண்டி பிராங்க்பெர்ட் விமானநிலையத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. ஜன்னல் கரையில் அமர்ந்து வேகமாக விடைகொடுத்து நகரும் கட்டடங்களையும் மரங்களையும் பார்த்துக்கொண்டிருந்த அச்சு அருகிலிருந்த அம்மாவின் பக்கம் திரும்பினாள். அம்மாவின் முகத்தில் ஒரு வித ஒளிர்வையும் , இனங்காண முடியாவோர் இறுக்கத்தையும் கவனித்தாள்

ஊருக்குப்போவதாக முடிவெடுத்த நேரத்திலிருந்தே அம்மாவின் முகத்தில் அந்த வித்தியாசத்தை அவதானித்திருந்தாள் அச்சு. பொதுவாகவே ஊருக்கு வெளிக்கிடும் ஒவ்வொரு தரத்திலும் அம்மாவின் முகத்தில் ஒரு பிரத்தியேக மாற்றம் தெரிவதை அவள் அவதானித்திருக்கிறாள். ஊரில் நிற்கும் நாட்களில் குடத்தில் இருக்கும் தண்ணீர் முழுவதையும் உறிஞ்சிக் குடித்துவிட அவாவும் ஒரு காகத்தின் அதகடி அவள் கண்களில் அலைபாய்ந்து கொண்டிருக்கும். ஆனாலும் . மீண்டும் ஐரோப்பாவுக்குத் திரும்பி வரும் போது அவள் எதிர்பார்த்த எதுவோ நடக்கவில்லையான ஏக்கம் கண்களில் கலங்கலாக எஞ்சி வெறித்து நிற்கும். , வந்த பின் அது எப்போதும் போல எழுதிவைத்த கண்கள் போலாகி விடும் .அம்மா வழமைபோல வேலைத்தளம் வீடு என இயந்திரகதியில் இயங்க ஆரம்பித்து விடுவாள். எந்த இயக்கத்தின் போதும் மாற்றமற்று அந்தக் கண்கள் அச்சுவின் பார்வைக்கு சித்திரத்தில் எழுதிய கண்களைப் போலிருக்கும்.

அச்சுவின் சிறுவயதிலிருந்தே அம்மா எப்போதாவது தானும் அச்சுவும் தனியாக உள்ள நேரங்களில் கதைகள் சொல்லுவாள். அவை யாரோ எழுதிவைத்தவையல்ல. அம்மாவின் கதைகள் அம்மாவிடமிருந்து தான் வந்தன. . அந்தக் கதைகள் அவள் பிறந்து வளர்ந்த மண் பற்றியதாக இருந்தன.

அம்மாவின் கதைகளில் வந்த , அநேகமாக நிறைய களைத்து வியர்த்தவர்களாக எப்போதும் இருக்கும் அந்த நபர்களிடம் ஒரு நிமிர்வு இருந்தது. அப்படியான சிலரின் பெயர்களை அடிக்கடி உபயோகித்தாள்.

அப்படி அவள் உபயோகித்த பெயர்களில் ஒன்று டானியேல். வேறு யாருடையதோ கதைகளைச் சொல்லும் போது கட்டாயம் போலும் , நிராகரிக்க முடியாதது போலும் சிலவேளைகளில் இந்தப் பெயர் வந்து புகுந்து கொள்ளும். புகுந்து கொண்டதானால் சட்டென அந்தக் கதை தடைப்பட்டு விடும். அம்மா இலக்கற்று எங்கோ வெறிப்பாள். பட்டென அவள் கண்கள் கலங்கி முட்டும் . ஏதோ தவறு செய்த பதட்டத்தில் உதடும் அவள் கைகளும் நடுங்கும். அதற்கு மேல் அம்மாவை இழுத்து, விட்ட இடத்திலிருந்து தொடர வைத்தாலும் , சுவாரசியம் அற்று ஏதோ ஒப்புக்கு இரண்டு வரிகளில் கதை முடித்து விட்டு அச்சுவின் தலையைத் தடவியவாறே "தப்புச் செய்திட்டேன் அச்சு "என்பாள்.

"உனக்கென்று உள்ள இரகசியங்களை மனதில் மறைத்து வைக்கப் பழகிக் கொள் " என்பாள். இன்னோர் இப்படியான பொழுதில் . . குற்றஉணர்ச்சியற்று வாழ்தலே வாழ்வின் மிகப்பெரும் நிம்மதி . நீ உனக்கானவைகளை உனக்குள் வைத்திருக்கக் கற்றுக் கொள் சம்பவங்களோடு சம்பந்தமில்லாத எவரிடமும் எதையும் என்றும் உளறி விடாதே" என்பாள்.

அச்சு வளர்ந்த போது, அம்மாவின் கதைகளிலிருந்து அம்மா வளர்ந்த வீட்டைச் சுற்றி போராளி முகாம்கள் இருந்ததைப் புரிந்து கொண்டாள். அம்மா சிறுமியாக இருந்த போதிருந்தே அவர்களுக்கு மத்தியில் வளர்ந்ததனால் அவர்களுடன் அதிக நெருக்கம் கொண்டவளாகவும், அவர்களது நம்பிக்கைக்கு உரியவளாகவும் இருந்திருக்கிறாள். ஒரு காலத்தில் அவளது சுற்றம் சூழல் எல்லாம் அவர்களாகவே இருந்திருக்கிறார்கள். அவள் தன் வீட்டு வாசல் தாண்டுவதானாலும் அவர்களைக் கடந்தே செல்லவேண்டியிருந்திருக்கிறது. என்றான சூழலில் அவளுக்கு பலரைப்பற்றியும் நிறையவே தெரிந்திருக்கிறது. அவர்களது குடும்பங்களுடன் பரிட்சயம் இருந்திருக்கிறது என்பதை ஊகித்துக் கொண்டாள்.

அச்சுவும் அம்மாவும் சேர்ந்திருந்து வெளிநாட்டுப் போராட்டப் படங்கள் பார்க்கும் போது அம்மா அடிக்கடி முகத்தைச் சுளித்துக் கொள்வாள். உடலைச் சுற்றி துப்பாக்கி ரவைகளை அணிந்திருக்கும் நடிகனைப் பார்க்கும் போது "துடைப்பக்கட்டைக்குப் பட்டுக் குஞ்சம் கட்டியது போலிருக்கு . ஆயுதம் தூக்கிற நிமிர்வும் தீரமும் கண்களில இருக்கவேணும் தெரியுமோ அச்சு". என எழுந்து கொள்வாள் . "வாம்மா " என அழைத்தால் "அப்போது டானியல் ரவைக்கோர்வைகளை உடலில் சுற்றிக் கொண்டு தன்னுடைய முகாம் போராளிகளை வழிநடத்தி களத்துக்குக் கூட்டிப்போக வாகனத்துக்கு அருகில் ஆயத்தமாய் நிற்பார் பார். அந்த நிமிர்வுக்கு இந்த நோஞ்சான் நடிகன் பிச்சை வாங்க வேண்டும்" என்பாள். இன்னொரு நாள் அந்தப் பெயர் தேவன் ஆக மாறியிருக்கும். வேறொருநாள் அது வெள்ளை என்றிருக்கும்.. வேறும் நாட்களில் அது வேறு வேறாக இருக்கும். ஆனாலும் . கண்கள் ஏதோ ஒரு காலத்தை தன் பார்வையில் சுமந்திருக்கும் அப்போது அம்மாவின் முகம் வேறு மாதிரி ஜொலிக்கும். . ஆனால் டானியேல் என்ற பெயர் குறிப்பிட நேர்ந்து விட்டால் , பின் சட்டென உடைந்து அதே குற்றவாளித் தோரணையில் குறுகி ஒடுங்கிப் போவாள்.

அம்மாவின் கதைகளிலிருந்து, ஒரு முகாமின் பொறுப்பாளனாகவும், ஒரு

படைப்பிரிவை வழிநடத்துபவனாகவும், திடகாத்திரமான நிமிர்ந்த மனிதனாகவும் அச்சு அந்த டானியலை தனக்குள் உருவாக்கியிருந்தாள். டானியல் பற்றிப் பேசும் போது அவளில் ஏற்படும் உணர்வு மாற்றங்களை அச்சு வளரும் போது தனக்குப் புரிந்த விதத்தில் கணிக்கத் தொடங்கியிருந்தாள்

அம்மாவுக்கும் அச்சுவின் தந்தைக்கும் பெரிதாக நெருக்கம் எதுவும் கிடையாது. மாதத் தொடக்கத்தில் தனக்கான அத்தனை செலவையும் கணக்குப் பார்த்து மேசையில் வைத்து விடும் அம்மா அதிக வசதிகள் கொண்ட அந்த வீட்டில் அன்னியப்பட்டு ஒதுங்கி அச்சுவுக்காகவே அந்த வீட்டில் இருப்பது போல தோன்றும். அந்த நெருக்கமின்மைக்கும் டானியேல் தான் காரணமாக இருக்கவேண்டும் என எண்ணத் தலைப்பட்டு பின்னாளில் அதுதான் என தனக்குள் உறுதி செய்தும் கொண்டாள். பெற்றோர் எனினும் அவர்கள் தனிப்பட்ட வாழ்வை அலசுவதும் விமர்சிப்பதும் தனக்கு உரிமையற்றது என்ற மேல்நாட்டு மனப்பான்மையில் வளர்த்திருந்தாள்.

அச்சு தன் அம்மாவை அவளது இயல்பான இருப்பில் மென்மையானவளாகவே புரிந்து வைத்திருக்கிறாள். , அதிகமாய் அதிர்ந்து பேசிக் கூட அச்சு பார்த்ததில்லை. ஆனால் "கொம்மா விசரி வாழத்தெரியாத லூசு" என அடிக்கடி எரிச்சலாக முணுமுணுக்கும் அவளது தந்தை அம்மாவின் எதிரில் சொல்லும் போது அம்மா தலை நிமிர்ந்து தீர்க்கமாகப் பார்ப்பாள். அந்தப் பார்வை மிகப் பயங்கரமான சீறும்அனல் போலிருக்கும் . "அடுத்தவன் வாழ்க்கையைப் பறித்து சுகம் தேடும் எல்லாருக்கும் மற்றவர்கள் எல்லாம் வாழத் தெரியாத பைத்தியமாகத் தான் தெரியும் " என்பாள். ஒவ்வொரு சொல்லும் பற்களில் நெரிபட்டு சத்தமற்றுத் தெறிக்கும். அப்போது அம்மாவைப் பார்க்க மிகப் பயங்கரமாக இருக்கும். அதற்கு மேல் பேசமாட்டாள். விலகிச் சென்று விடுவாள்.

"அந்த மண்ணை எவ்வளவோ நேசிக்கும் நீ ஏன்மா இங்கு வந்தாய்?" என அச்சு ஒரு போது தன் அம்மாவிடம் கேட்டாள்.. "நேசித்ததால் தான் " என பெருமூச்சுடன் அம்மா விலகிப் போனாள். அம்மா பதில் சொல்லாத விடயங்களில் எப்படி முயன்றாலும் பதில் பெற்று விட முடியாது என்பது அச்சுவுக்குத் தெரியும் ஆதலால் பதில் கிடையாத கேள்விகளை அவள் திரும்பவும் எப்போதும் கேட்பதில்லை.

ஆனாலும் அம்மாவின் சகோதரர்கள் வந்து போகும் போது பேசிக்கொள்வதிலிருந்து அம்மா போராளிகளுடன் இணைந்து சென்று விடக் கூடும் என்ற பயத்தில் வெளிநாட்டிலிருந்த சகோதரர்கள் இங்கு அழைத்துக் கொண்டார்கள் என்பதும், அப்பாவுக்கு மாரடைப்பு வந்து விடும் , நான் கிணத்துக்குள் குதித்து விடுவேன் என பயங்காட்டி அம்மாவின் தாய் அம்மாவைச் சம்மதிக்க வைத்து வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதும் இங்கு வந்த பின் அச்சுவின் அப்பாவைத் திருமணம் செய்து வைத்திருக்கிறார்கள் என்பதும் , திருமணம் செய்த பின் அச்சுவின் அப்பாவுக்கு வதிவிட அனுமதியும் அச்சுவும் ஒரே காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றிருக்கிறார்கள் என்பதும் புரிந்தது.

, இந்த வதிவிட அனுமதி கிடைக்கும் வரை அம்மா அப்பாவுடன், சாதாரணமாகத்தான் இருந்திருக்கிறாள். இப்போது போல எந்த இறுக்கமும் அற்றவளாக , அச்சுவுடன் பேசுவதைப் போல அல்லது அதைவிட அதிகமாக அவள் அப்பாவுடன் அனைத்தையும் பேசியிருக்கிறாள்.. எப்போதும் தான் வளர்ந்த சூழல் பற்றி, சூழ இருந்த மனிதர்கள் பற்றி போராட்டம் பற்றி, களங்கள் பற்றி, காயங்கள் பற்றி, அவர்களின் குடும்ப அவலங்கள் பற்றி தான் அறிந்தவையெல்லாம் அம்மா பேசியிருக்கிறாள். அதன் பின் தான் ஏதோ

ஆகியிருக்கிறது. நொறுங்கிப் போயிருக்கிறது என்பதை அச்சு புரிந்து கொண்டாள். .



அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இறங்கினார்கள்.அம்மாவின் கண்கள் வரைந்தது போலல்லாது ஒளிரத்தொடங்கியத்தை அது கலங்கியதை அச்சு அவதானித்தாள். இம்முறைப் பயணத்தில் அச்சு பதினெட்டு வயது நிரம்பிய, பல்கலைக்கழகம் செல்லும் பெரிய பெண்ணாக வளர்ந்து விட்டிருக்கிறாள் . தன்னைச் சுற்றிய ஒவ்வொரு விடயங்களையும் ஆராய்பவளாகவும் அறிந்து கொள்ள விரும்புபவளாகவும் தேடல்கள் கொண்டவளாகவும் மாறியிருக்கிறாள்.

அவர்கள் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கத் தொடங்கினார்கள். இடையில் அனுராதபுரத்திலும் , புத்தளத்திலும் உணவுக்காக வாகனம் நிறுத்தப்பட்ட போது இறங்குவதற்கும் உண்பதற்கும் அம்மா ஆர்வம் காட்டாது வாகனத்துக்குள்ளேயே அமர்ந்து கொண்டதை தாம் இறங்கிச் செல்லும் போது கவனித்தாள்.

பிறகு சுற்றுச் சூழல் கானல்வெளி போலிருந்த ஆளரவமற்ற இடத்தில் வாகனம் நிறுத்தப்பட்ட போது அம்மா இறங்கினாள். கண்களுக்குள் அந்தப் பகுதி முழுவதையும் விழுங்கி விடுபவள் போலப் பார்த்தாள். இவர்கள் அம்மாச்சி உணவகத்தில் தேநீரும் வடையும் உண்டு விட்டு வந்தார்கள். வாகனத்தில் ஏறி அமர்ந்த போது நீண்ட பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டுச் சொன்னாள், "நாமெல்லாம் ஐரோப்பியப்பிரஜைகளாக பாதுகாப்பாக வாழ்வதற்கு மூலகாரணமான மூச்சுகள் இந்த அனல் வெளிகளில் அவலமாக மூசிக் கொண்டிருக்கக் கூடும் " என்று. அச்சுவுக்கு அரைகுறையாகவே அது புரிந்தது.

அதன் பின் வாகனம் நகர நகர அம்மா வெளிக்காட்சிகள் அனைத்தையும் கலங்கிய கண்களுக்குள் அப்படியே கோலி எடுத்துவிடுவது போல் பார்த்திருந்தாள்.

அவர்கள் வீட்டின் முன் வாகனம் நின்று கோன் அடித்ததும் பாட்டியும் தாத்தாவும் அரக்கப்பரக்க ஓடிவந்து பெரிய உயர்ந்த கேற்றை அகலத் திறந்தார்கள். கேற்றிலிருந்து வீட்டு வாசல் வரை சீமேந்துச் சார் இழுத்து சிவப்புச் சாயமடித்த பாதையில் ஓடி நின்றது வாகனம். இறங்கினார்கள் . இரண்டடுக்கில் பெரிய மாடிவீடு பொலிவாக மின்னியது.

பாட்டி வந்து கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். தாத்தா "வாருங்கோ குஞ்சு" எனக் கூட்டிக்கொண்டு முன்னே நடந்தார். கூடவே வந்த பாட்டி சொன்னாள் "எல்லாம் பிள்ளைக்கு வசதியா இருக்கோ எண்டு பாருங்கோ . நீங்கள் மாமாமார் குடும்பத்தோட லீவுக்கு வந்து நிண்டு போறதுக்காக அங்கே நீங்கள் இருக்கிற வசதிகளோட பார்த்துப் பார்த்துக் கட்டிவிச்சனான்கள் " என்று . அம்மா வாசல் படியில் ஏறி நின்று மதிலுக்கு அந்தப்பக்கம் கவனிப்பாரற்று மங்கிக் கிடந்த தான் பிறந்து வளர்ந்த வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அம்மாவின் அம்மா அம்மாவின் அருகில் போனாள். "உதென்ன பிள்ளை பழையதை எட்டிப்பார்த்துக்கொண்டு நிக்கிறாய். உள்ளவந்து எதையும் குடிச்சுச் சாப்பிடன் " என்றாள். அம்மா திரும்பினாள். முகம் கசங்கியிருந்தது.

"இப்ப வெளிக்கிட்டுத் திரிய ஆமிப்பயம் இல்லையோ?" என்றாள்

"சீ சீ அவங்கள் ஒண்டுக்கும் வராங்கள்"

"அப்ப போராளிகள் எல்லாம் சாதாரணமா திரியலாமோ?"

“ஓம் உங்க ஆர் இப்ப போராளி. எல்லாரும் தான் திரியீனம் . ஆருக்கு ஆரெண்டு தெரியும்“

“எங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருந்தவை ஆரையும் கண்டனீங்களோ?”

“க்கும் விசர் தொடங்கிவிட்டுது.” அச்சுவின் அப்பா வெளிநாட்டு விஸ்கியை கண்ணாடிக் குவளையில் ஊற்றிக்கொண்டே , பொரித்த கோழிக்கால் ஒன்றை வாயில் வைத்துக் கடித்த படி முணுமுணுத்தார். அம்மா அதைச் சட்டை செய்யவில்லை இப்போது. தனது விசாரிப்பில் மும்முரமாக இருந்தாள்

“ஆருக்குத் தெரியும் பிள்ளை இருக்குதுகளோ செத்துப் போச்சுதுகளோ எண்டு. பழசை தேடுறதை விட்டுப்போட்டு எல்லாத்தையும் மறந்து சந்தோசமா வாழுற வழியைப்பார். “

“ராசையா அண்ணை இங்க ஊரில தான் இருக்கிறாரோ..?”

“ஓமோம் அவன் இஞ்ச தான். நீங்கள் வாறியள் எண்ட உடன ஓடித்திரிஞ்சு கழுவத் துடைக்க இடிக்க என்று ஆள்ப்பிடிச்சு எல்லா அலுவலும் பார்த்தது அவன் தான். சாமான் சக்கட்டு வாங்கித்தர பின்னேரமா வருவான். “

அம்மா பின்னேரம் வரை காத்திருந்தாள். ராசையா அண்ணை வீட்டு வாசல் தாண்டி உள்ளே வராமல் வெளியிலேயே நின்று நலம் விசாரித்தார் . அம்மா வெளியே போய் உள்ளே அழைத்தாள். வெளிவாசலுடன் நின்று கொண்டார். அம்மா எதற்கோ ஆத்திரத்துடன் காலைத் தரையில் உதைத்து நடந்தாள். கதிரையை இழுத்துப் போட்டு வெளி வராண்டாவில் வற்புறுத்தி அமரவைத்தாள். அம்மாவும் அவரும் பேசிக்கொண்டதில் மிகுந்த அன்னியோன்னியம் இருந்ததை அச்சு கவனித்தாள்.

“விசாரிச்சீங்களோ அண்ணை?”.

“ஓம் பிள்ளை. ஒவ்வொரு தரமும் நீங்கள் வந்து சொல்லிப்போட்டுப் போகும் போது விசாரிக்காமல் இருப்பேனோ. நானே சொல்லவேணும் எண்டு தான் காத்திருந்தனான் “

“அப்போ ?”

“ஓம் தகவல் கிடைச்சது. ஆள் உயிரோட தான் இருக்குதாம்.”

பின் ஏதோ தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். “முகுந்தன் எண்டு சொன்னால் தான் தெரியும். சந்தை நேரம் தான் ஆளைப் பிடிப்பது இலகு பிள்ளை .” என்பது மட்டும் அச்சுவின் காதில் விழுந்தது அம்மாவின் முகத்தை இப்போது ஹாலில் இருந்த அச்சுவால் கணிப்பிட முடியவில்லை. அவள் அச்சுவுக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தாள்.

அடுத்த நாள் காலையில் அம்மா மிகவும் பரபரப்பாக இருந்தாள். தாத்தாவிடம் சொல்லி ஒரு ஓட்டோவை வரவழைத்தாள். அச்சுவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு வெளிக்கிட்டாள். எங்கே என்று கேட்கத் தோன்றவில்லை. அது அச்சுவுக்குப் பரீட்சயமில்லாத இடம். ஆகையால் யாராவது அழைத்துச் செல்லும் இடத்துக்குத் தான் போக முடியும். அத்துடன் அம்மாவின் பரபரப்பு அச்சுவுக்குப் புரிந்தது ஆதலால் கேட்கத் தோன்றவில்லை.

நீண்ட தூரம் போனார்கள் . ஓட்டோ ஒருமணி நேரத்துக்கும் மேலாக ஓடியது. ஒரு பெரிய சந்தைக்கருகே ஓட்டோவை நிறுத்தி காத்திருப்பில் வைத்து இறங்கினாள் அம்மா.

அச்சுவை இறங்கு என்றோ இறங்காதே என்றோ சொல்லாததால் அம்மா உடனே வந்து விடுவாள் என அவள் ஓட்டோவுக்குள் காத்திருந்தாள். வாசலில் பெரும்கடை விரித்திருந்த ஒருவரிடம் அம்மா எதுவோ விசாரிப்பது தெரிந்தது. அச்சு அருகே இருந்த கடைகளை வேடிக்கை பார்த்தாள். பின் , மொபைலை எடுத்து கண்டிகிரஷ்சாகா விளையாட ஆரம்பித்தாள்.

விளையாடிச் சலித்து நிமிர்ந்தாள். அம்மா வேறு யாருடனோ குனிந்து பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. அருகே சென்றாள் . கறுத்து வறண்டு மெலிந்து கிடந்த அந்த மனிதரின் முகத்தை மறைத்திருந்தது பலநாட்கள் சவரம் செய்யப்படாத நரைத்த தாடி மீசை. முன்நெற்றி முடி முழுவதும் கொட்டியிருந்தது. வழமைக்கு ஒவ்வாத விதமாக காலை மடித்து, ஒரு கரத்தில் தன் உடல் பாரத்தை ஊன்றி சாய்வாக ஒரு சாக்கில் அமர்ந்திருந்த அவர் நிமிர்ந்து முகம் பார்க்க அல்லது காட்ட விரும்பாதவர் போலக் குனிந்து கொண்டே சன்னமான குரலில் பேசிகொண்டிருந்தார். . அவர் முன்னே நான்கைந்து தேங்காய்களும் வெங்காயம், பச்சைமிளகாய், சில வாடிய கீரைக்கட்டுகள், கொஞ்சம் கத்தரி தக்காளி என ஒரு சாக்கில் பிரித்து வைக்கக் கூடிய சிறு சிறு குவியல்கள் பரப்பபட்டிருந்தன.

அச்சுவுக்குச் சலிப்பாக இருந்தது அம்மா அவருக்காகக் காத்திருந்தாள். சந்தையில் சனம் குறைந்த போது ஒரு சிறுவன் சைக்கிளில் வந்து அந்தச் சாக்கருகே நிறுத்தினான். அவர் எழுந்திருக்க முனைந்தார். இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி, இடுப்பை மேலே உயர்த்தி, ஒரு காலில் முட்டுக் கொடுத்து தடி ஒன்றை ஊன்றி நிமிர்ந்தார். இடுப்பிலிருந்து ஒரு பக்கம் சாய்ந்து ஊன்ற முடியாது தொங்கியது ஒரு கால். அம்மா முகத்தில் அனல் அள்ளிக் கொட்டியது போல சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டாள். சிறுவன் சாக்கில் கிடந்த காய்கறிகளை ஒரு உரப்பையினுள் போட்டுக் கட்டி கரியரில் வைத்துக் கட்டினான். அந்தமனிதர் அம்மா எவ்வளவோ அழைத்தும் ஆட்டோவில் வர மறுத்து சிறுவனின் சைக்கிள் பாரில் அமர்ந்து கொண்டார்.

சைக்கிளுக்குப் பின்னால் ஒட்டோ நகர்ந்து ஊர் ஒதுங்கிய ஒரு வீதியிலிருந்து இறங்கி மண் ஒழுங்கைக்குள் நுழைந்து தட்டிப்படலை வாசல் முன் நின்றது அம்மா இறங்கி சைக்கிளின் பின்னால் உள்ளே போனாள். அச்சுவும் பின்னால் போனாள். “இது தான் வீடு” என சைக்கிள்காரச் சிறுவன் சொன்னது போல அது வீடாக அச்சுவுக்குத் தோன்றவில்லை. ஒரு அடி உயரத்துக்குக் குந்து வைத்து சுற்றுவர ஓலைச் செத்தை கட்டி மேலே தகரம் போட்டு மூடிய ஒன்றை வீடு என்று அச்சு இதுவரை எங்கும் கண்டதில்லை.

“உலைவைச்சு சோறு வடிச்சுப் போட்டன் .புழுக்குத்தினது வாடல் ஏதும் மிஞ் சினதேயப்பா. உடன கறிச்சமைச்சுத் தந்திடுவன்” கேட்டுக்கொண்டே வெளியே வந்த பெண் புதியவர்களைக் கண்டதும் சற்றுத் தடுமாறினாள். போசாக்கற்ற வறுமையின் குழந்தைகள் சில அச்சுவிலும் குறைந்த வயதுகளில் வாசலால் எட்டி அவர்களை வேடிக்கை பார்த்தனர். அவளுக்கு என்னவோ போலிருந்தது வெளியே வந்து தட்டிப்படலையையும் கரையான் புற்றெடுத்தவேலியையும் மண் ஒழுங்கையையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு அம்மாவுக்காகக் காத்திருந்தாள்.

ஒரளவு நேரத்துக்குப் பிறகு வந்த அம்மாவின் முகம் இறுகிப் போயிருந்தது. உதடுகளை அழுந்தக் கடித்திருந்தாள். வாசல் வரை தடியூன்றிக் கொண்டு சாய்ந்து சாய்ந்து நடந்து வந்து விடை கொடுத்த அந்த மனிதர், அச்சுவின் தலையில் உரிமையுடன் வருடி , கன்னப் பக்கமாய் முகவாயை ஏந்தி “ போயிற்று வாங்கோம்மா நல்லாப் படிச்சு பெரிய ஆளா

பெயர் சொல்ல வாழோணும் பிள்ளை" என்று சொன்ன குரலிலும் காய்த்துக் கிடந்த கரடுமுரடான அந்தக் கரங்களின் வருடலிலும் மிகவும் நெருக்கமும் வாஞ்சையும் நிறைந்திருந்தது போல உணர்ந்தாள் அச்சு.

வீடு வந்து சேரும் வரை அம்மா அதே இறுக்கத்திலேயே இருந்தாள். வழியில் எதுவும் பேசவில்லை. கடித்திருந்த உதடுகளைப் பிரித்தால் கதறுவாளோ கடூரமாகக் கத்துவாளோ போன்ற தோரணையில் இருந்தாள். மதியம் கடந்து மாலையாகிக் கொண்டிருந்தது . பசித்தது. அச்சுவுக்குப் பசிப்பதைப் பொறுக்காத அம்மா இன்று வழியில் ஏதாவது குடிக்க வாங்கித் தரட்டுமா என்று கூடக் கேட்கவில்லை ..

வீட்டுக்கு வந்ததும் அச்சு அவசரமாக வாஷ் ரூமுக்குப் போய் பிரஷ் ஆகி வந்து சாப்பாட்டு மேசையில் மூடியிருந்த உணவுகளின் மூடிகளை நீக்கினாள். அம்மம்மா பரிமாற ஓடி வந்தாள். முந்திரியும் வதக்கிய இறைச்சித் துண்டுகளும் தாராளமாக மிதந்த நெய்ச் சோற்றை ஒழுக ஒழுக தட்டில் வைத்தாள் அம்மம்மா . ஆட்டுக்கறிப் பிரட்டலையும் , ஒரு மீன் பொரியலையும் எடுத்துத் தட்டில் வைத்துக் கொண்டு டீவிக்கு நேரே இருந்த ஆடுகதிரையில் அமர்ந்தாள். "உங்களுக்கெண்டு இறால் நண்டு எல்லாம் சமைச்சு வைச்சிருக்கிறன் இதென்ன வெறுஞ்சோற்றைச் சாப்பிட்டுக் கொண்டு " என சொல்லியவாறே அச்சு மறுக்கமறுக்க சாப்பாட்டுக் கோப்பையில் விதவிதமாகப் பரப்பினாள் அம்மம்மா.

அம்மா உள்ளே வராமல் வெளி வராந்தாவில் போட்டிருந்த கதிரைகளில் ஒன்றில் பொம்மை போல அமர்ந்திருந்தாள். கண்கள் , கவனிப்பாரற்றுப் பாழடைந்து கிடக்கும் அம்மா வளர்ந்த வீட்டை நோக்கியிருந்தன . அம்மம்மா அம்மாவை சாப்பிட அழைத்தாள். அம்மா அழைப்பை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

"என்ன ஆச்சுப் பிள்ளை உனக்கு. எங்கை போட்டு வந்தனி ?" என்றாள் அம்மம்மா.

அம்மா நிமிர்தாள்.

"டானியேல் அண்ணாவைப் பார்க்க"

அச்சு திடுக்குற்றுப் பார்த்தாள்

"ஆர்.... ஓ...... பொடி உசிரோட இருக்குதோ ? வந்தனி சங்கையாக நாலு இடம் திரிஞ்சு திண்டு குடிச்சு சந்தோசமா போறதை விட்டு உதுகளை எல்லாம் ஏன் தேடித் போறாய்?"

"வேறை என்ன விசர் தான்" அம்மம்மா கொடுத்த உசாரில் அப்பாவின் குரல் இப்போது சத்தமாகவே வெளிவந்தது.

அம்மா நெருப்பு போல எழுந்தாள்

"ஓம் விசர் தான். அந்த விசரில தான் விசம் எண்டு அறியாது எல்லாத்தையும் சொன்னனான். அணைக்கும் போதும் , படுக்கும் போதும் , அரைநித்திரையிலும் நயவஞ் சகமா காதல் கதை பேசி நம்பிக்கை கொடுத்து அவங்களுக்கு உதவுவன் எண்டு நம்பிக்கை தந்ததால தான் எனக்குத்தெரிஞ்ச எல்லாரையம் பற்றி, அவங்களுக்குப் பின்னால இருந்த எல்லாக் கதைகளும் சொன்னனான்.

டானியேல் இயக்கத்துக்கு வந்தப்பிறகு பொம்பர் போட்ட குண்டில வீடு சிதறி குடும்பத்தில சாவுகள் விழுந்து போச்சு, தாயும் சகோதரிகளும் ஒதுங்கக் கூரையில்லாமல்

நிக்குதுகள். இவ்வளவு பயிற்சி எடுத்து , இத்தனை களங்களில் அனுபவம் பெற்றப் பிறகு குடும்பத்தை நினைச்சு தேசக் கடமையை விட்டிட்டுப் போகமாட்டன் என்று நின்ற மனிதனின் குடும்பம். அது ஒதுங்க ஒரு குடிசையாவது கட்டிக் குடுக்க வேணும். அது எங்கட கடமை என்று கேட்டன். டானியல் அண்ணாவுக்கு எதுவும் தெரியாமல் இருந்தாலும் அவரின்ர குடும்பம் நான் கொடுத்த வாக்குறுதியை தங்கட அவல நிலையில நம்பியிருந்தது.

“உங்கட மருமோன் எப்பிடி நடிச்சு என்னை நம்பவைச்சு அவையின்ர விபரம் எல்லாம் கேட்டு, அந்தச் சிதறின வீட்டையும் படமெடுத்து அனுப்பவைச்சு, அது அத்தனையும் தன் குடும்பத்துக்கு நேர்ந்த அவலமாக கதை சோடிச்சு, தன்னுடைய அகதி விண்ணப்பத்தில், தான் அனுதாபத்துக்குரிய அங்கீகரிக்கப்பட வேண்டிய அகதி என்று உறுதிப்படுத்தி விசா எடுத்தார் என்று கேளுங்கோ.”

அம்மம்மா விழி பிதுங்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். தாத்தாவின் திகைப்பு திறந்த வாயை மூட மறந்திருந்தது.

“அதுக்குப் பிறகு நான் சொன்ன கதைகளை வைத்து விசாவுக்குக் கதை எழுதிப் பிழைக்கிற பிரபலமாகிவிட்டார் உங்கட மருமோன். அதோட முடிஞ்சுதா கடைசிப் போர் நேரம் திருவோடு ஏந்தாத குறையா வெள்ளைக்காரரிட்டை கூட மானம் கெட்டுக் கெஞ்சி வாங்கின காசு எங்கை எண்டு கேளுங்கோ “

அம்மாவுக்கு மூச்சு வாங்கியது

“கொடுத்த வாக்குறுதி , பட்ட கடன் ஒரு கொஞ்சமாவது அடைச்சுப்போட வேணும் என்று தான் இத்தனை காலமா தேடினேன். ஒதுங்க ஆனதாக ஒரு கூரை இல்லாமலே மழையும் ஒழுக்குமா கிடந்தது சிதைஞ்சு தாய் செத்துப்போச்சு. போக்கிடமற்று, சகோதரிகள் போருக்குள் முடிஞ்சு போனது அவருக்குச் சந்தோசம் தான் “

அம்மா முழங்கால் மடித்து அப்படியே தரையில் வழுக்கி உடைந்து அழுதாள்.

அம்மாவின் குணம் அறிந்த அம்மம்மா “சரி ஏதாவது உதவி செய்யலாம் எழும்பு வந்து சாப்பிடு” என்றார் .

“கேட்டேன். மறுத்திட்டார். தன்மானம் மட்டும் தான் மிச்சமிருக்காம். அதாவது சாகும் வரைக்கும் மிஞ்சி இருக்கவேணும் எண்டிட்டார்.”

அச்சுவுக்கு உள்ளே சில்லிட்டது .

.’புழுக்குத்தினது வாடல் ஏதும் மிஞ்சினதேயப்பா. உடன கறிச்சமைச்சுத் தந்திடுவன் ‘ என்ற குரல் மனதுக்குள் ஒலித்தது.

தன் சாப்பாட்டுத் தட்டைப் பார்த்தாள். தட்டு நிறைய அருவருப்பாக எதுவோ நெளிவது போலிருக்க ,அதிர்ந்து எழுந்தாள் . தட்டு கீழே விழுந்து சிதறியது. தட்டிலிருந்து தெறித்த மாமிசத் துண்டுகள் இரத்தம் ஒழுகும் மனிதத் துண்டங்கள் போல் பெரிய கொடுக்குகளுடன் நெளிந்து நெளிந்து அச்சுவை நெருங்குவது போலிருந்தது. கண்களை மூடி இரண்டு கைகளாலும் தலையை இறுக்கமாகப் பற்றிக் கொண்டு வீடே அதிர வீரிடத்தொடங்கினாள்

முதல் முறையாய் அவளது தந்தை அதிர்ந்து திரும்பிப்பார்த்தார்.

**செய்யுள் வகை ஈரேழு வரிப்பா & 141**

**ஆங்கில மூலம்:& வில்லியம் ஷேக்ஸ்பியர்**

**தமிழில் : கெக்கிறாவ ஸுலைஹா**


உண்மையாகவே, நான் உன்னை
என் கண்களால் நேஸித்திருக்கவில்லை
உன்னை ஆயிரம் குறைகள் கொண்டவளாய்
அவை சித்தரிக்கின்றன என்பதால்.
ஆயினும், என் இதயமோ என் கண்களைப்போலன்றி
குறைகள் கொண்டதுவாய் அவை சொல்லும்
உன் தோற்றப்பொலிவை முழுதுமாய் நிர்மூலமாக்கி
உன்னை நேஸிக்க வைத்து விடுகிறது.

போலவே, உன் குரலின் இனிமை கருதி
என் செவிகள் ஒன்றும் ஈர்க்கப்படவில்லை.
உன் ஸ்பரிசம் கூட பேருவகையாய் என்னை
உன்பால் கவர்ந்திடவுமில்லை.
மேலும், என் வாசனையினதும், சுவையினதும்
நரம்புகள் ஒன்றும் உணர்வு விருந்துபசாரம் தந்தெல்லாம்
என்னை வசப்படுத்தவுமில்லை.

ஆயினும்,
வேறெந்த சந்தோஷங்களையும் காணாத
முற்றிலும் உனதான அடிமை மனுஷனாய் ஆகி,
பெருமிதங்களில் மிதக்கும் எஜமானி உனக்கு
சேவகம் செய்வதன்பால் நான் கொண்ட
அசையாத விருப்பத்திலிருந்து
என் முட்டாள்த்தனமான இதயத்தை
தடுத்தெல்லாம் நிறுத்திட
என் ஐயறிவினிற்கோ அன்றி ஐம்புலன்களுக்கோ
எப்போதும் இயலுமாய் இருக்கவில்லை.


இதுவரை, நேஸிப்பின் துயரங்களுள் ஆழ்ந்தாலும்
நிறையப் பெற்றதுவாய் மட்டுமே நான் கருதுகிறேன்.
பாவங்கள் புரிந்திடுமாறு என்னைத் தூண்டிக் கிளறி,
பாவங்களையே எனக்கு அவள் பரிசாயும் அளிக்கிறாள்.

4to40



# சதீஷ் குமரன் கவிதை

ஜெர்சி மாடுகளின் பாலுண்ணோம் நெய்யுண்ணோம்
கார்ப்ரேட்களின் மையிட்டெழுதோம் வறண்ட
காவிரியில் மணல்சுரண்டி பிழைப்பறியோம்.
ஊற்றுத்தோண்டியே ஒரு குடம் தண்ணீருக்கு
நாய்ப்படாதபாடு படுவோம்
கிடைத்தால் குடிப்போம்
இல்லையெனில்
மணல்குவாரியில் விழுந்து மடிந்து உனக்கே
ஆளாவோம் ..
வாலட் வையத்தில் வாழ்வீர்காள்
ஒரு நாள் வரிசையில் வந்து எல்லாவற்றுக்கும் நின்று
வாழ்ந்துபார்
எம்பாவாய்.




# இருது சங்கார விருந்து தந்தனன்

● யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

ஒவ்வொரு மொழியிலும் இலக்கியங்கள் உருவாகி மொழியை வளப்படுத்துகின்றன. அவ்வாறு தோன்றியவற்றை விட வேற்று மொழிகளில் உருவாகியவற்றையும் அந்தந்த மொழிகளில் பாண்டித்தியம் பெற்றோர் தம் மொழிக்கு மேலும் வளம் சேர்க்கின்றனர். அந்த வகையில் எழுந்த இலக்கியங்கள் பல எமது மொழியிலும் உள்ளன.

எமது அயல்நாடான பாரதத்தில் உபயோகிக்கப்படும் பல மொழிகளுள் சிறந்தனவாகக் கருதப்படுவனவற்றில் சமஸ்கிருதம் முதல்நிலைப்படுத்தப்படும் மொழியாகும். இதில் சிறந்த பல இலக்கியங்கள் அநேக புலவர்களால் ஆக்கப்பட்டு நிறைந்து கிடக்கின்றன. இம்மொழிக் கவிஞர்களுள் காளிதாசன் தலைசிறந்தவராகப் போற்றப்படுகிறார்.

போஜமகாராசனின் ஆஸ்தான வித்துவானாகத் திகழ்ந்தவர் காளிதாசன். வடமொழிக் கவிஞர்களுள் மிகச்சிறந்தவராகப் போற்றப்படுபவர். இவர் இரகுவம்சம், சாகுந்தலம், இருது சம்ஹாரம், குமாரசம்பவம், மாளவிகாக்கினிமித்திரம், விக்ரமோர்வசியம், மேகசந்தேசம், முதலிய சிறந்த வடமொழி இலக்கிய நூல்களின் ஆக்ககர்த்தா. இவரால் முதன்முதலில் எழுதப்பட்ட நூலாக இருதுசம்ஹாரம் கருதப்படுகிறது.

சம்ஸ்கிருதத்தில் ருது என்பது பருவகாலத்தைக் குறிக்கிறது. ஆறு பருவகாலங்கள்

உள்ளன.அவை வசந்த ருது, இளவேனிற்காலம், கிறிஷ்மருது,, முதுவேனிற்காலம், வர்ஷ ருது, கார்காலம், சரத்ருது, கூதிர்காலம், ஹேமந்தருது, முன்பனிக்காலம், சிசிர ருது - பின்பனிக்காலம் என்பனவாகும். இப் பருவகாலங்களினை மிகமிகச் சுவைபடத் தன் காதலிக்கு வர்ணித்துக் கூறுவதாக இருதுசம்ஹாரம் அமைந்துள்ளது.

சம்ஸ்கிருதம் இன்று வளக்கிழந்து போய்விட்டாலும் இந்து சமய பூசைகள்,சடங்குகள் ஆகியவை வடமொழியிலேயே பெரும்பாலும் ஆற்றப்படுவதாலும் இச்சமயம்சார் நூல்கள் இம்மொழியிலேயே அமைந்துள்ளதனாலும் சமஸ்கிருதம் கற்றறியப்படும் மொழியாக இன்றும் உள்ளது. இதனால் இலங்கையைச் சார்ந்த பல அறிஞர்களும் இம்மொழியில் தேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். காணப்படுகின்றனர். இதனுடன் தமிழிலும் புலமைபெற்றவர்கள் இரு மொழி இலக்கியங்களையும் வேறு துறைசார் நூல்களையும் மொழிபெயர்த்து பெரும்பணியாற்றியுள்ளனர்.

இத்தகு வித்துவான்களுள் முகாந்திரம் தி. சதாசிவ ஐயர் குறிப்பிடத்தக்க ஒருவர். அளவெட்டி - பெருமாகடவையில் தியாகராஜ ஐயர், செல்லம்மாள் தம்பதிகளின் புதல்வனாகப் பிறந்தார்.இவர் 1882ஆம் ஆண்டில் பிறந்திருக்கவேண்டும். இவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.இவர் கல்கத்தா பல்கலைக்கழகத்தின் எவ். ஏ. தேர்வில் முதற்பிரிவில் சித்தியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மல்லாகம் ஆங்கில வித்தியாசாலை, கந்தரோடை ஆங்கில வித்தியாசாலை ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றிய பின் 1910ஆம் ஆண்டு முதல் வித்தியாதரிசியாகவும் 1927ஆம் வருடத்திலிருந்து பகுதி வித்தியாதரிசியாகவும் ஐயா கடமையாற்றினார். ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தை 1921ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிறுவ இவர் பெரும்பங்காற்றினார். இதன் மூலம் மாணவர்கள் தமிழையும் சமஸ்கிருதத்தையும் கற்று பண்டிதர், வித்துவான் முதலிய பட்டங்களைப் பெற்று முன்னேற வழிவகுத்தார். இலக்கிய ஈடுபாடுகொண்ட ஐயா, சங்கம் 1942 இல் வெளியிட்ட கலாநிதி என்ற பத்திரிகைக்கு ஆசிரியர் பொறுப்பை ஏற்று நடத்தினார். இதேபோல் 1945 இல் வெளிவந்த சுவதர்ம போதம் என்ற மும்மாத இதழுக்கும் இவர் ஆசிரியராக இருந்துள்ளார்..

புலவராகப் பரிணமித்த ஐயா, பெருமாக்கடவை பிள்ளையார் இரட்டை மணிமாலை, தேவி தோத்திர மஞ்சரி, தேவி மானச பூசை அந்தாதி ஆகிய நூல்களை இயற்றினார். மட்டக்களப்பு நாட்டார் பாடல்களைத் தொகுத்து வசந்தன் கவித்திரட்டு எனும் நூலையும் ஐங்குறுநூறு மூலமும் உரையும் ஆகிய நூல்களையும் வெளியிட்டார். இவற்றைவிட காளிதாசனின் இருது சம்காரத்தையும் தமிழில் மொழிபெயர்த்து இருதுசம்கார காவியம் எனும் நூலாக வெளிக்கொணர்ந்தார். இந்தக் காவியம் ஐயாவின் திறமையை பறைசாற்றும் இலக்கியமாகத் திகழ்கின்றது. அவரது தமிழறிவு, சமஸ்கிருத அறிவு, கவிபுனையும் ஆற்றல் முதலிய அனைத்துத் திறமைகளையும் இக்காவியத்தைச் சுவைக்கும் எவரும் விளங்கிக் கொள்ளலாம்.

மகாகவி காளிதாசன் தனது நூலுக்கு ருது ஸம்ஹாரஷபருவகாலங்களின் கூட்டம் எனப் பெயரிட்டு பருவ காலங்களை வருணித்துள்ளார். இதில் ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு சருக்கமாக ஆறு சருக்கங்கள் அமைந்துள்ளன. இயற்கையைக் கூர்ந்து கவனித்து தன் புலமைக்கூடாக அழகொழுகும் சொல்லோவியங்களாக ஒவ்வொரு செய்யுளையும் காளிதாசன் படைத்தளித்துள்ளார். காதலிக்கு பருவகாலத்தை வர்ணித்து முடித்த பின்னர் சருக்கத்தின் இறுதிச் செய்யுள் அந்தப் பருவம் அவளுக்கு எல்லா நலங்களையும் நல்குக என வாழ்த்துவதாக அமைந்துள்ளது.

திருந்து சங்கதத் திருதுசங் காரசிங் கார
விருந்து தந்தனன் காளிதா சக்கவி வேந்து
பொருந்து மன்னதைப் புனைகுவன் தமிழ்க்கவி யாக
முருந்து வாணகை பங்கமர் முன்னவ னருளால்

எனும்

பாயிரத்துடன் ருது ஸம்ஹாரத்தை அதன் சுவை சிறிதும் குன்றாது இருது சம்கார காவியமாக தமிழில் மொழிமாற்றம் செய்து முகாந்திரம் தி. சதாசிவ ஐயர் எமக்கு அளித்துள்ளார். அவரது இத்தகைய பணிகளைக் கௌரவித்தே முகாந்திரம் என்னும் பட்டம் அரசால் ஐயாவுக்கு வழங்கப்பட்டது. காவியத்தில் முதுவேனில் பருவ வர்ணனையில் 28,கார்பருவ வர்ணனையாக 28, கூதிர் பருவ வர்ணனைக்கு26,,முன்பனி பருவ வர்ணனையாக18, பின்பனி பருவ வர்ணனையில் 16, இளவேனிற் பருவ வர்ணனைக்கு 28உமாக 144 செய்யுள்களை யாத்து ஒரு பாரிய மொழிபெயர்ப்பைச் செய்து ஐயா சாதனை நிலைநாட்டியுள்ளார். ஆனால் அந்த அரிய பொக்கிஷத்தை நாம் காத்து பயன் பெறவில்லை என்பதும் இங்கு அத்தியாவசியமாக சுட்டிக்காட்ட வேண்டிய ஒன்று. ஐயா உருவாக்கிய நூற்று நாற்பத்து நான்கு செய்யுள்களையும் இங்கு எடுத்துப் பார்த்து இரசிப்பது இயலாத செயலாகும். ஓரிரு பாடல்களை மட்டும் பதம் பார்ப்போம்.



முகாந்திரம், தி. சதாசிவ ஐயர்
( Retired District Inspector of Schools – Ceylon Govt.)

முதலில் பாடப்பட்டிருப்பது முதுவேனிற்காலம். வெயிலின் அதீத உக்கிர உஷ்ணம் பாடல்களில் சித்திரமாகும் அழகு அலாதியானது. கொடூர வெயிலினால் இயற்கையில் ஏற்படும் திரிபை நுண்ணிதின் நோக்கி இரசிகர்களின் கண்முன் அவ்வாறே கொணர்ந்து நிறுத்தும் கவி வேந்தனின் பாக்களை அப்படியே சுவை குன்றாது தன் பாடல்களில் மொழிபெயர்த்து தந்துள்ளார்.

வனத்திலுள்ள விலங்கினங்கள் ஒவ்வொரு பருவகாலத்திலும் எவ்வாறு நடந்துகொள்கின்றன என்பதையும் கவிஞர் கவிச்சித்திரங்களாக்கியுள்ளார். உதாரணமாக யானைகளும் சிங்கங்களும் பகைமை கொண்டவை. எனினும் கனலும் வெப்பினால் அவை களைப்படைந்து கிடக்கும்போது பகை மறந்துபோகின்றன. அல்லது பகைமையைக் காட்டும் திறனிழந்து கிடக்கின்றன.


மிகுதரு தாகம் விஞ்சி
விசைத்தெழு விறலை வீட்டப்
பகுதரு வாய்செய் பஞ்சா
னனம்பட ருளைசி லிர்த்துத்
தொகுதரு நாமுன் தொங்கத்
தொடர்ந் துவெய் துயிர்த்து நாளும்
பகைதரு மதமா பாங்கர்ப்
படரினும் பாய்ந்த டாதால்.

என்ற செய்யுளில் சிங்கம் ஒன்று முது வேனிலின் வெம்மையில் படும் பாட்டைப் பார்க்கிறோம். மிகுந்த தாகம் அந்த அரிமாவிற்கு மேலும் அதிகரிக்கிறது. அதனால் அச்சிங்கத்தின் உத்வேக வீரம் வீழ்ந்துவிடுகிறது. அதன் வாய் பிளந்து நாமுன்னே தொங்க, பிடரிமயிர் சிலிர்க்கிறது. பெரும் மூச்சு எழுகிறது. அதற்குப் பகையான மதங்கொண்ட யானை அருகே வந்தாலும் அதன் மேற் பாய்ந்து அதனைக் கொல்லாதிருக்கின்றது.

முதலில் சிங்கம் வாயைப் பிளந்து கொண்டிருக்கிறது. பிடர்மயிர் சிலிர்க்கிறது. கர்ச்சனை போன்ற சப்தம் எழுகிறது என ஒரு காட்சியை சித்திரித்து, அது எதன் மீதோ பாய்ந்து கொல்லப்போகிறதோ என்று சிந்திக்க வைத்த கவிஞன் வாசகனின் எதிர்பார்ப்பைப் புரட்டும்வகையில் அதன் பிளந்த வாயிலிருந்து நாவைத் தொங்க வைத்து அருகிலிருந்த யானையைக்கூட கொல்லாமற் செய்துவிடுகிறார்.

செய்யுளின் முற்பகுதியில் இத்தகைய ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி வெம்மையால் தளர்வுற்ற சிங்கத்தின் தோற்றத்தினை விவரித்தவர் பின்னர் தளர்வால் அதன் இயல்பில் ஏற்பட்ட வேறுபாட்டைக் கூறுகிறார். அதாவது பக்கம் நிற்கும் யானையைக்கூட எதுவும் செய்யாது நிற்கின்ற மாறுபட்ட இயல்பு கூறப்படுகிறது. அடுத்த பாடலில் யானையை இதே வகையில் வர்ணித்து அதை அரிமாவுக்கு அருகில் அச்சமின்றிச் செல்ல வைக்கிறார். வெயில் காலத்தில் தவளைகளை சர்ப்பத்தின் பட நிழலில் ஓய்வெடுக்க வைக்கும் பாவலன், அவற்றை மழைக்காலத்தில் மண்ணுக்கு இடையே ஓடிவரும் நீரை பாம்பென்று கருதி பயந்தோட வைக்கிறார். காவியம் இவ்வகையில் சுவை சொட்ட ஆக்கப்பட்டுள்ளது.

இத்தகைய காவியத்தை சுவை மாறாது தமிழில் மொழிபெயர்த்த முகாந்திரம். தி. சதாசிவ ஐயர் அவர்களின் இருது சங்கார காவியத்தைத் தேடிச் சுவைத்துப் பாருங்கள்.



# போட்டோ

● யோகன் (கன்பரா)

எட்டு மணியாகி விட்டது. அரியம் என்று அவர் கூப்பிடும் அவர் மனைவி அரியமலர் இன்னும் எழுந்திருக்கவில்லை. வரவேற்பறையின் யன்னல் திரையை விலக்கி வெய்யில் வந்து விட்டதா என்று பார்த்துவிட்டு உள்ளே போக திரும்பியபோதுதான் சுந்தரம்பிள்ளைக்கு சுவரில் கலண்டருக்குப் பக்கத்திலிருந்த இடைவெளி கண்ணுக்குத் தட்டுப்பட்டது.

அவரும் மனைவியும் சேர்ந்து எடுத்த போட்டோ கீழே செரமிக் ஓட்டு நிலத்தில் விழுந்து கண்ணாடி குறுக்காக உடைந்து கிடக்க, சுவரில் ஆணி தனது கழுத்துச் சுமை தொலைந்த சந்தோஷத்தில் இளித்துக் கொண்டிருந்தது.

அரியத்துக்குத் சொல்லாமல் கண்ணாடித் துண்டுகளை குப்பைத் தொட்டிக்குள்; போட்டு விட்டு படத்தையும் பிரேமையும் அலுமாரிக்கு மேலே வைத்தார். கண்ணாடிப் படம்

உடைந்தால் வீட்டுக்கு கூடாது என்பாள் அரியம். தமிழ்ப் படங்களில் பூவை சாமிப் படத்தில் வைக்க அது கீழே விழும், அல்லது எங்கிருந்தோ வீட்டுக்குள் வரும் காற்றினால் விளக்கு ஒன்று அணையும். இதுவும் அந்தக் கேஸ்தானோ ? பிள்ளைக்கு மனம் பதறியது.

கொஞ்ச நாட்களாக ஒன்று மாறி ஒன்றாக வருத்தப் படுக்கையில் கிடக்கும் அரியத்துக்குத்தான் எதேனும் நடந்து விடுமோ.? போட்டோ உடைந்ததை அரியத்துக்குச் சொல்லக்கூடாது. சொன்னால் யோசித்து இன்னும் வருத்தம் கூடிவிடும்.

அவரது அறை அரியத்தின் அறையைப் பார்த்தபடி நேர் எதிரே இருந்தது. “அரியம் அரியம் “ கூப்பிட்டவாறே அரியத்தின் அறைக்குள் செல்ல யுகலிப்டஸ் மணம் பரவிய நீராவி மூக்கினுள் அடித்தது. இரவெல்லாம் இருமிக் கொண்டிருந்து காலையில்தான் அயர்ந்து தூங்குகிறாள்.

கையுடன் கொண்டு வந்த அவர் தயாரித்த ஓட்ஸ் கஞ்சியையும் தேநீரையும் அரியத்தின் கட்டிலுக்குப் பக்கத்திலுள்ள சிறிய ஸ்டூலில் வைத்து விட்டு அவளை எழுப்பாமல் திரும்பினார்.

அறையின் மூலையில் இரு கதிரைகளும் ஸ்டூலும் மேலே கரம் போட்டில் காய்கள் சிதறிக் கிடந்தன. வரவேற்பறையில் கிடந்த கரம் போட்டை அவர்தான் உள்ளே அரியத்தின் அறைக்குள் கொண்டு வைத்திருந்தார்.

முன்பு அரியம் படுக்கையில் விழ முன்னர் இருவரும் மதிய உணவுக்குப் பிறகு ஒரு ஆட்டம்; பிறகு இரவு படுக்கைக்குப் போக முன்னர் ஒரு ஆட்டம் என்று ஒரு வழக்கமாகவிருந்தது. பள்ளி நாட்களில் அவர் கரம் விளையாட்டில் சம்பியன். அவர்தான் அரியத்துக்கும் அறிமுகப்படுத்தினார்.

கதவு பலமாகத் தட்டப்படும் சத்தம் கேட்கிறது.

அழைப்பு மணி இருப்பது தெரிந்தும் கதவை உடைப்பது போல தட்டுவதென்றால் அது சிவலிங்கத்தார் ஆகத்தான் இருக்கவேண்டும். வேண்டா வெறுப்பாக போய் கதவைத் திறந்தார்.

“என்ன சரியான பிஸி போல” வோக்கிங் போகும் ஆயத்தங்களுடன் சிவலிங்கம் நிற்கிறார். பக்கத்திலுள்ள முதியோர் இல்லமொன்றில் இருக்கிறார். அவர் மனைவி சோதியும் அவ்வப்போது கரம் விளையாட வந்திருக்கிறாள்.

“என்ன பெல்லை அடிக்காமல் கதவைத் தட்டுறீர் “

“எத்தனையோ தரம் அடிச்சனான். உமக்குத்தான் காது கேக்கேல்லை”

அரியத்தின் நித்திரை குழம்பாமலிருப்பதற்காக அவர்தான் பெல் சத்தத்தை குறைத்து வைத்திருந்ததை பிள்ளை மறந்து விட்டார். அதை சொல்லாமல்,

“சரி உள்ளை வாரும்“

“சீச்சீ நான் வோக்கிங் போறன். நீரும் வாருமேன்”

“இல்லை நான் ஒருக்கால் கடைக்குப் போக வேணும்.” கடத்துகிறார் பிள்ளை.

“நேற்று கோல்ப் விளையாட்டுக்குப் போனதில் நாள் முழுவதும் போய் விட்டது.”

சிவலிங்கத்தார் முதியோர் இல்லத்தில் நல்லாக என்ஜோய் பண்ணுகிறார். பிள்ளைக்குப்

பொறாமையாகவிருந்தது.

சிவலிங்கம் போனதும் பிள்ளை சமையலறைக்குப் போய் பிரிஜ்ஜிலிருந்து இரவே எடுத்து சிங்க்கிற்குள் போட்டிருந்த சிக்கினைத் தொட்டுப் பார்த்து விட்டு வெங்காயங்களை வெட்டத் தொடங்கினார்.

பிள்ளை நல்ல சமையற் கலைஞன். வேலை பார்ப்பதற்க்காக ஊரில் தனிக்கட்டையாக இருந்தபோதே இந்தக் கலையை கற்றுத் தேர்ந்து விட்டார் .

இரு வருடங்களுக்கு முன்பு கோடை காலத் தொடக்கத்தில் அரியத்துக்கு அடிக்கடி களைப்பு, பசியின்மை ஏற்பட்டு வைத்திய பரிசோதனைகள் பல செய்தபின் சிறுநீரக வீக்கம் இருப்பது தெரிந்தது. அன்றிலிருந்து ஏதோ மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது.

இந்த வின்டருக்கு நியுமோனியா வேறு வந்து வாட்டி எடுத்தது. அறையை விட்டு அவள் வெளியே வரவே இல்லை. எந்நேரமும் ஓடிக்கொண்டிருக்கும் ஒயில் ஹீட்டர். வரட்டு இருமல் கொள் கொள் என்று அடிக்கடி. எதாவது பேசத்தொடங்கினால் குறுக்கிடும் இருமல். பிறகு சைகையால் பேச்சு. இப்படித் தொடர்கிறது அவள் பாடு.

அரியம் போய் விட்டால் அம்பிகா தன்னை வீட்டொடு வந்திருக்கச் சொல்வாள் என்பது பிள்ளைக்குத் தெரியும். பிள்ளைக்குத் துளியும் பிடிக்காத விசயம் அது. அதைவிட முதியோர் இல்லத்திற்கு செல்வதே மேல் என்பது அவர் எண்ணம்.

பத்து வருடங்களுக்கு முன்னர் இந்த இரண்டு அறை வீடொன்றை ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அரியத்துடன் குடிபுகுந்தார் பிள்ளை.

அம்பிகாவுக்கு அரசாங்க திணைக்களத்தில் உயர் பதவி. அடிக்கடி கூட்டம் மகாநாடு என்று பயணங்கள். வீட்டில் இருப்பதே குறைவு ஆனாலும் சனிக்கிழமைகளில் அரியத்தையும் பிள்ளையையும் வந்து பார்க்கிறாள். மருமகன் திவாகர் சாதாரண அரச உத்தி யோகம்தான். ஆனால் கட்டிட லைசென்ஸ் வைத்திருந்து தனியார் வீடுகள் கட்டி கொடுப்பதில் பெரும் பணம் சம்பாதிக்கிறான். சனி, ஞாயிறுகளில் திவாகர் ஒரே பிஸி. ஒரே மகள் திவ்யா பல் வைத்தியம் படித்து சிட்னியில் தொழில் பார்க்கிறாள்.

எல்லாவற்றையும் நன்கு யோசித்த பிறகு ஒருவருக்கும் தெரியாமல் முதியோர் இல்லத்திற்கு போவதற்கான ஆயத்தங்களை இரகசியமாக செய்யத் தொடங்கியிருந்தார் பிள்ளை. அரியத்திடமும் சொல்லவில்லை.

சிவலிங்கத்தார் இருக்கும் முதியோர் இல்லம் ஒரு பழைய கட்டிடம். பிள்ளை இப்போது பார்ப்பதோ பல மில்லியன்கள் செலவழித்து அண்மையில் நவீன முறையிலே கட்டப்பட்ட முதியோர் இல்லம்.

ஒரு திங்கட்கிழமை காலை உணவை முடித்தபின் அந்த முதியோர் இல்லத்துக்கு சென்று அங்குள்ள அலுவலகத்தில் அனுமதிக்கான பத்திரங்களை கேட்டு வாங்கினார். உள்ளே ஒருமுறை பார்க்க அனுமதி கேட்டு சுற்றிப் பார்க்கவும் தவறவில்லை. பொது அறையில் டிவியுடன் பத்திரிகை சஞ்சிகைகள் கிடந்த மேசை வேறும் அமர்ந்திருந்து விளையாடும் பல விளையாட்டுப் பொருட்கள் மத்தியில் கரம் போட்டும் இருந்தது அவருக்குச் சந்தோசந்தான். ஸ்விம்மிங் பூல் கூட கட்டி வைத்திருந்தார்கள். ஸ்விம்மிங் பழகாமல் விட்டு விட்டொமே என்று சற்று வருத்தம் அவருக்கு.

அன்று வீட்டுக்குத் திரும்பியதிலிருந்து அவர் மனம் உற்சாகமாகவிருந்தது.

மதியம் வெயில் ஏறி குளிரின் உக்கிரம் கொஞ்சம் குறைந்து போக தொப்பியும்,

சப்பாத்தையும் கொழுவிக்கொண்டு மரக்கறித் தோட்டப்பக்கம் போனார். வீட்டுக்குப் பின்னே சிறிய பாத்தியொன்றில் மிளகாய், கத்தரி தக்காளி என்று பிள்ளை கோடையில் மரக்கறிகளை முளைக்கப் போடுவது வழக்கம். அவரது பின் வேலிக்கும் வீட்டுச்சுவருக்கும் இடையிலுள்ள சிறு நிலத்துண்டுதான் அந்தப் பாத்தி. கையுறைகளைப் போட்டுக்கொண்டு தோட்டத்தில் குளிரில் விறைத்துப்போய் பட்டுபோயிருந்த செடிகளைப் பிடுங்கினார். வேர்கள் அழுகியதில் மண்ணுடன் சேர்ந்து முரண்டு பிடிக்கும் செடிகள் கூட இலகுவில் வேருடன் வந்தன. மண்ணைக் கொத்திக் கொண்டிருக்கையில் பெரிய மண்புழுவொறு வந்தது. அதன் பருமனும் நீளமும் அசாதாரணமாகவிருந்தது.

பிள்ளைக்கு விபரீதமான பரிசோதனையொன்று என்ணத்திலுதித்தது. புழுவைகொண்டு போய் சற்றுத் தூரத்திலிருந்த கொங்ரீட் தரையில் போட்டார். வெயிலின் இதமான சூட்டில் புழு சில கணங்கள் அசையாது படுத்திருந்தது. பிறகு மெதுவாக உடலைச் சுருக்கி விரித்து முன்னேறியது. அந்த வேகத்தில் அது மண்ணுக்குத்திரும்ப குறைந்தது ஒரு மணி நேரமாவது செல்லும். அவரது பரிசோதனை இதுதான். மைனாக்களுக்கும் மக்பைகளுக்கும் வேறும் குருவிகளுக்கும் கண்ணில் படாது உயிர் தப்பி மண்ணுக்கு புழு திரும்ப வேண்டும். இந்த ஒரு மணி நேரமும் மூன்று மீட்டர் தூரமுந்தான் புழுவின் விதியைத் தீர்மானிக்கப்போகிறது.

இனி வரும் ஒரு மணி நேரத்திற்கு அவர்தான் புழுவின் கடவுள். பறவைகள் வந்தால் துரத்தி புழுவை காப்பாற்றவும் முடியும் அல்லது பேசாமல் சாகவும் விடவும் முடியும். இதில் பிள்ளைக்கு பெரும் சந்தோஷம். புழுவின் மேல் கொஞ்சம் கழிவிரக்கமும் ஏற்பட்டது. இந்த விளையாட்டைத்தான் மேலிருந்து கடவுள் தினசரி விளையாடுகிறார் போலும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

மைனா ஒன்று அவர் தலையத் தொட்டு விடுமாற் போல் பறந்து புழுவை காணாமலேயே போய் விட்டது. பிள்ளை வழமையாக கொங்ரீட் தரையில் போடும் சாப்பாட்டுக்குத் தேடிவரும் மக்பைகளையும் காணோம்.

மேலும் கொஞ்ச நேரம் வரப்போகும் புழுவின் எமனுக்காகக் காத்திருந்தார் பிள்ளை. எதுவும் வரவில்லை. கேவலம் ஒரு புழுவின் விதியக் கூடத் தன்னால் தீர்மானிக்க அந்தக் கடவுள் விடவில்லையே என்று ஒரு சலிப்பு வந்தது. வல்ல சீவன் தான் என்று நினைத்துக்கொண்டு கொஞ்சம் சலிப்புடன் புழுவை மீண்டும் தூக்கி வந்து மண்ணில் போட்டார். தண்ணீருக்குள் மீன் குதிப்பது போல அது மண்ணுக்குள் குதித்தது.

❍ ❍ ❍

அந்த முதியோர் இல்லத்தில் பிள்ளைக்கும் அரியத்திற்கும் தரப்பட்ட அறையில் இரட்டை படுக்கையுடன் சிறிய மேசை கதிரையுடன் ஒரு பிரிஜ்ஜும் தெரிகிறது. டிவியும் சுவரில் கொழுவியிருந்தார்கள். பக்கத்தில் மணிக்கூடும் ஒரு கலண்டரும்.

அறையுடன் தொடுத்துக் கட்டப்பட்ட ஒரு பாத்ரும் ஷவருடன் இருந்தது. அணுவைத் துளைத்து ஏழ்கடலை புகுத்தியது போல் சகலத்தையும் ஒரு அறைக்குள் அடக்கியிருந்தார்கள். கலண்டரிலுள்ள ஆண்டை கவனித்தால் இரண்டு வருடங்கள் கடந்து விட்டது தெரிகிறது.

கண்ணாடி யன்னலூடு வெளியே தெரிவது ஒரு செயற்கை நீர்த்தடாகம். காலையிலும் மாலையிலும் நடை போவதற்காக போடப்பட்ட கொங்ரீட் பாதை அவர்களின் அறைக்கு அருகாக செல்கிறது. நேற்றுத்தான் அம்பிகா அவர்களது பழைய வீட்டில் எஞ்சியிருந்த பொருட்களை காரில் கொண்டு வந்திருந்தாள்.

பிள்ளை கட்டிலில் படுத்திருக்க அரியம் டிவி பார்த்துகொண்டிருக்கிறாள். சாப்பாடு பரிமாறுவதற்காக தாதிப் பெண் கொண்டு வந்த ட்ரொலியில் வெறும் பிளேட்டுகள் கிடக்கின்றன. கட்டிலுக்குப் பக்கத்தில் பிள்ளை நடப்பதற்காக பாவிக்கும் கை பிடித்து தள்ளும் வண்டில் நிற்கிறது. பிள்ளை அரியத்தை ஒரு கணம் பார்க்கிறார். இரண்டு வருடங்களில் எத்தகு மாற்றம்? ஒரு வகையில் அவருக்குத்தான் ஏமாற்றம். வருத்தப் படுக்கையில் இருந்த அரியம் எழுந்திருக்க தான் படுக்கையில் விழுந்து விட்டதுதான் அந்தப் பெரிய மாற்றம்.

பிள்ளையின் இடப்பக்க முளையில் வந்த ஸ்ட்ரோக் வலப்பக்க கை காலுடன் வாயையும் ஒரு பக்கம் இழுத்து விட்டது. அவ்வப்போது அவரை விஷேட சிகிச்சை பயிற்சி என்று கூட்டிச் செல்கிறார்கள். குறைந்தது ஆறு மாதமாவது செல்லுமாம். சொற்களை சரியாக அவரால் உச்சரிக்க முடியவில்லை தொண்டையின் நரம்புகளும் கையை விரித்து விட்டன. அதற்கும் தனியே பயிற்சி உண்டு. அவர் உச்சரிக்கும் சொற்கள் ஓசையில் வேறு விதமாக வந்து விழுகிறது. அதனால் அவ்வப்போது சைகையால் பேசிக் கொள்கிறார் முன்பு அரியம் செய்தது போல.

டிவி பார்த்துக்கொண்டிருந்த அரியம் ஏதோ திடீரென்று ஞாபகம் வந்தது போல உள்ளே போய் பேப்பரில் சுற்றியிருந்த எதையோ எடுத்து வருகிறாள். கதிரையில் அமர்ந்து பேப்பரை விரித்து அதை வெளியே எடுக்கிறாள். அது முன்னர் உடைந்த அதே போட்டோதான். வீடு மாறும் போது அலுமாரிக்கு மேலிருந்து கண்டெடுத்த அதே போட்டோ. ஆனால் அதை இப்போது அவள் சுவரில் கொழுவவில்லை, கண்ணாடி பிரேமும் போடவில்லை. பிளாஸ்டிக் பிரேம் போட்ட படத்தை மேசையில் ஒரு ஸ்டாண்டில் கவனமாக வைக்கிறாள். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது என்பது அவள் எண்ணம்.

போட்டோவை பார்த்ததும் பிள்ளையின் முகத்தில் ஒரு வியப்பு. பரபரப்புடன் எதோ சொல்ல முயற்சிக்கிறார் அது முடியாமல் சைகையால் ஏதோ காட்டுகிறார். எல்லாம் தனக்குத் தெரியும் என்பது போல அரியம் அவரை அமைதியாக்குகிறாள்.

அரியம் மணிக்கூட்டைப் பார்த்து விட்டு நேரமாகி விட்டது போல எழுந்து கொள்கிறாள். எங்கே என்பது போல பிள்ளை பார்க்க


“சோதியுடன் கரம் ஆடிவிட்டு வருகிறேன்”.

சிவலிங்கத்தாரும் மனைவி சோதியும் பக்கத்துக்கு கட்டடத்தில்தான் இருக்கிறார்கள்.

பிள்ளை விண்ணப்பித்திருந்த அந்த புதிய இல்லத்தில் அவர்களுக்கு உடனடியாக அனுமதி கிடைக்கவில்லை. சிவலிங்கத்தார் இருக்கும் அதே பழைய முதியோர் இல்லத்திலேயே இருவருக்கும் அனுமதி கிடைத்தது. பிள்ளையின் ஸ்ட்ரோக் வியாதிக்கான உடற் பயிற்சிகள், மற்றும் பராமரிப்பதற்கான வசதிகளை கொண்ட இந்த இல்லம் அம்பிகாவுக்கும் உள்ளூர திருப்திதான்.

“சிவலிங்கத்தார் எப்போதும் உங்களைத்தான் எப்போது குணமாகி மீண்டும் கரம் ஆட வருவார் என்று அடிக்கடி கேட்டபடி.” சொல்லிகொண்டே வெளியே போகிறாள்.

அரியம் வெளியே செல்லபிள்ளைக்கு திடீரென ஏனோ அந்தப் மண்புழுவின் ஞாபகம் வந்தது. மண்ணுக்குள் இன்னும் அது உயிரோடிருக்குமா? ஆனால் அந்த மண்புழு இன்னும் மண்ணுக்குள்தான் இருக்கிறது என்பது சுந்தரம்பிள்ளைக்குத் தெரிந்திருக்கவில்லை.



● சா.கா.பாரதி ராஜா

# துளிப்பாக்கள்

பாறையைச் சுற்றிய கயிறு
இழுக்க நினைக்கிறதோ
சுற்றும் எறும்புகள்

❍

பாழடைந்த வீடு
குயில் பாடுகிறது ஆசையாக
தன் பாட்டைத் தானே கேட்க

❍

மிரண்டு கிடக்கிறது ஊர்
மந்திரிக்க மரத்தையே ஆட்டுகிறாயா
புயலே!

❍

எறிந்த கல்
உள்ளே இழுத்துக் கொண்டது
உள்ளே விழுந்த குழியையும்

ஏ! வயற்காட்டுப் பொம்மையே!
நீயும் தானியத்தை திருடுகிறாயோ
சரிந்து தொடுகிறது கை

❍


சிறுகிளையைத் துளைத்த குளவி
ஊரெல்லாம் கொண்டு போகிறது
ஒரு ராகத்தை

❍

சிந்தாமல் சாப்பிடுகிறேன்
திட்டிக் கொண்டே செல்கிறது
அருகே அமர்ந்த ஈ

❍

● மொழிபெயர்ப்புச் சிறுகதை



# லூட்டி

**கன்னட மூலம் : Ex Minister லலிதா நாயக்**

**● தமிழாக்கம் Dr. மலர்விழி Presidency University**

**Poetess Mrs. மதுமிதா**

இயற்கை நெருப்பை உமிழ்வது போல, மொத்த சுற்றுப்புறமும் வெயிலில் அனலாய்க் கொதித்துக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் விரிசலும் வெடிப்புமாய் உலர்ந்து கிடக்கின்ற தரை. மறுகணமே வெடித்துவிடுமோ என்று தென்படுகின்ற கரும்பாறைகள்

இவைகளுக்கு இடையில், தானும் ஒரு எரிகின்ற கொள்ளியாக, இடதுபுற தோள் மீது கோடரியை வைத்துக்கொண்டு வேக வேகமாய் நடந்து கொண்டிருந்தாள் 'ராமி'.

ஒவ்வொரு அடிக்கும், அவளது கால் கொலுசின் சத்தம் ஒலித்துக்கொண்டிருந்தாலும், அவளுக்கு அதில் கவனமில்லை. தன்னுடைய கொலுசின் சத்தத்துக்குத் தானே புல்லரித்துக் கொண்டிருந்த காலம் ஒன்றும் இருந்தது.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்பு, அவள் 'கீரு'வைக் கைப்பிடித்தபோது, அது போன்ற சுகத்தை அனுபவித்திருந்தாள். தாய் வீட்டில்

கொடுத்த சில வெள்ளி நகைகளை அணிந்துகொண்டு மகிழ்ச்சியுடன் ஓடித் திரிந்து கொண்டிருந்தாள். சந்தோஷமாக இருந்த காலத்தில் நிகழ்காலத்தைத் தவிர தவறியும் இறந்தகால, எதிர்காலங்களை அவள் சிந்தித்தும் பார்த்ததில்லை.

வருடங்கள் உருண்டன. அவள் மீண்டும் மீண்டும் கர்ப்பமாகி, பிரசவித்து நாலைந்து குழந்தைகளுக்குத் தாயுமானாள். அவளுக்குள் இருந்த பொங்கிப் பெருகும் சுக உல்லாச ஊற்றொன்று, இருந்ததற்கான அடையாளமே இன்று இல்லை. அது காணாமல் போய்விட்டது. அது அவளிடம் இப்போது இல்லையென்ற கவலையும் அவளுக்குத் தோன்றவில்லை.

மனைவியை அடித்து உதைத்து தொல்லைகொடுக்கும் வேறு கணவன்மார்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, கீரு அவர்களை விட எவ்வளவோ நல்லவன். அதிகமாக கோபம் வந்தபோது தவிர, ஒருபோதும் அவன் அவள்மீது கை வைத்ததில்லை. சொந்த நிலம் இல்லாததால், கூலி வேலைக்குப் போய் மனைவி, குழந்தைகளுக்கு வயிறார சோறுபோட கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்.

ராமி ஐந்தாவது பிரசவத்தில் குடும்பக்கட்டுப்பாடு செய்துகொண்டபிறகு, இனி குழந்தை பிறந்துவிடும் என்ற பதற்றம் இல்லாமலிருந்தது. இனி இருவரும் சேர்ந்து குழந்தைகளை வளர்க்கலாம் என்று தைரியம் உண்டானது. ஆறு மாத குழந்தைக்கு வயிறு நிறைய தாய்ப்பால் ஊட்டி, எட்டு, ஒன்பது வயது நிரம்பிய மூத்த மகளிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு கணவனுடன் கூலி வேலைக்குப் போவாள்.

அந்தக் காலம் கழிந்து, குழந்தைக்கு ஒன்றரை வயது ஆகியது. தாயின் தாய்ப்பால் அதற்குப் போதவில்லை. சாப்பிடுகின்ற ஆறு, ஏழு வாய்களில் இதுவும் ஒரு வாயாகக் கூடியது. இப்படி இருக்கையில், சாப்பிடுவதற்கு கணக்கு அதிகமாகியது, உழைக்கும் கையோ முறிந்து மூலைக்குப் போய்ச் சேர்ந்தது.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு கீரு, பண்ணையார் நிலத்திற்கு உரம் போட ஒத்துக் கொண்டிருந்தான். குப்பை மேட்டிலிருந்து ஒரு மைலுக்கு அப்பால் இருக்கும் நிலத்திற்கு, நெடுஞ்சாலை வழியாகப் போக வேண்டியிருந்தது.

வண்டியில் இருக்கும் உரத்தைக் கொட்ட எட்டு, பத்து அடி தூரம் இருக்கும்போது பின்புறமிருந்து வந்த ஒரு லாரி, வண்டியின் ஒரு பகுதியில் இடித்து வண்டியை உருட்டித் தள்ளிவிட்டு வந்த வேகத்தில் முன்னால் போய்விட்டது.

மயக்கமடைந்து கீழே விழுந்து கிடந்த கீருவை, பண்ணையார் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, முதலுதவி செய்து, வீட்டில் விட்டுவிட்டு, கை கழுவிக்கொண்டார். பக்கவாட்டு விலாஎலும்புப் பகுதியில் வலி என்று வேதனைப்பட்ட கணவனை, ராமி மருத்துவரிடம் அழைத்துக் காட்டியபோது

'அந்த விலாஎலும்பு முறிந்திருக்கலாம், இங்கு குணமாகாது, பட்டணத்து அரசு மருத்துவமனைக்கு கொண்டு போங்கள்' என்று ஆலோசனை கூறினார்கள். ராமி பண்ணையாரின் காலைப் பிடித்து உதவிக்காகக் கெஞ்சினாள்.

"சரி விடு. நீ சொல்றாப்படி அவனுக்கு நல்லபடியானால், என் வீட்டில் வேலை செய்து தீர்ப்பான். ஆனா செத்துப்போனால் யார் தீர்ப்பாங்க? நீயோ புள்ளகுட்டிங்களோட இருக்கிற. அவங்களப் பாத்துக்கறதே போதும் போதும்னு ஆயிடும். இனி என் கடனோட

கதி என்ன?”

“எப்படியாச்சும் தீர்த்துடறேன்யா. இந்த கஷ்ட காலத்துல கைகுடுங்க அய்யா!” என்று ராமி பலவிதமாகக் கெஞ்சியது வீண் புலம்பலாகி, பண்ணையாரிடமிருந்து திட்டு வாங்கித் திரும்ப வேண்டியதாகி விட்டது....

தன் முன்னால் இருக்கும் பாதை இரண்டாகப் பிரிந்திருப்பதைப் பார்த்த அவள் நடையை நிதானப்படுத்தி யோசிக்கத் தொடங்கினாள். எந்த வழியைத் தொடரட்டும்?

நதியின் கரைக்கா அல்லது மலைப்பகுதிக்கா? எதையும் சீக்கிரமாக முடிவு செய்ய முடியாமல் குழப்பத்தில் இருந்தாள்.

இதுவரையிலும் அவள் என்றும் தனியாக மலையோரக் காட்டுக்குப் போனதில்லை. ‘தாண்டா’ (லம்பாடிகள் இருக்கும் பகுதி) பெண்கள். ஆண்கள் ஒன்றாகப் புறப்படும்போது அவளும் அவர்களுடன் போய் விறகுக்கட்டை கட்டிக்கொண்டு

கூட்டத்தோடு திரும்புவாள். ஆனால், இன்று இந்த நேரம், கூட இருந்தவர்களெல்லாம், விறகுக்கட்டைக் கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டனர். சிலர், அச்சமயத்தில் நகரத்துக்குப்போய் விறகுக்கட்டை விற்றுவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

‘தாண்டா’ பகுதியின் அருகில் யாரோ ஒருவன் வேகமாக வந்து கொண்டிருப்பதைப்போலத் தெரிந்த போது, மலைப்பக்கம் போகிறவனாக இருப்பானோ என்ற நம்பிக்கையில் அந்தப் பக்கம் வைத்த கண் இமைக்காமல் பார்க்கிறாள்.

வந்து கொண்டிருப்பவன் ‘காளு’ என்பதை அறிந்து அவள் முகம் ஓரளவுக்கு மலர்ந்தது. ஆனால், அவன் கையில் கோடரி இல்லாததைப் பார்த்து அவள் ஏமாற்றமடைந்தாள்.

“என்ன தங்கச்சி. ஒத்தையில போற? விறகு எடுத்துட்டு வரவா?” என்று காளு விசாரித்தான்.

“என்ன செய்வேன் அண்ணா. என் தலையெழுத்து படுமோசமா இருக்கே. அவருக்கு வேற இன்னும் ஒடம்பு சரியாகல. பக்கவலிக்கு ஒரேயடியா புலம்பிட்டிருக்கான். சின்ன குழந்தைக்கு காய்ச்சல். அதுக்குதான் காலம்பற எல்லோரோடயும் போக முடியல” என்று தன்னுடைய வேதனையை அவனிடம் சொன்னாள்.

“ஒலகத்துல யாரும் வண்டியிலயிருந்து கீழே விழறதில்லியா தங்கச்சி. நல்லா இருந்த மோட்டர் வண்டியிலிருந்து விழுந்தா கூட, ஒரு வாரத்தில சரியாகி ஏர் ஓட்டிட்டிருக்கான் அந்த பீமப்பனோட புள்ள. இவனுக்கு என்ன ஆச்சுன்னு சொல்றேன்”

“எப்படித்தான் இது நடந்ததோ தெரியல, பெரிய ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப்போலாம்னா கையில பணம் வேற இல்ல. பண்ணையாருட்ட கேட்கப்போனா திட்டி அனுப்பிட்டாரு”

“ஒடம்பு முறிய வேலை செஞ்சவங்களுக்கு கூட பணம் குடுக்கமாட்டேங்கறான் அந்த எம் மவன். இனி ஒனக்கு எப்பிடி குடுப்பான். விடு. சரி எப்படியாவது போகட்டும். ‘சேவாலாலனுடைய கோயிலுக்குப் போயி சீரு வுக்கு ஒரு விபூதி பிரசாதம் வாங்கிக்குடு. எங்க தாத்தா, கொள்ளுத்தாத்தா எல்லாம் ஒடம்பு சரியில்லைன்னா ஆசுபத்திரிக்கா போயிட்டிருந்தாங்க. எந்த நேரமா இருந்தாலும் அந்த சாமிட்டதான் போயி நிப்பாங்க.

அப்படித்தான் இல்லியா"

'இப்ப நான் கூட அததான செய்திருக்கேன் காளண்ணா. வரப்போற அமாவாசக்கி 'கத்யம்மா'க்கு ஒரு சேவல் குடுக்கிறேன்னு நேர்ந்துட்டிருக்கேன். 'மடதய்யா' வுக்கு காணிக்கை முடிச்சு கட்டியிருக்கேன்'

'பாபண்ணன் கிட்ட கொஞ்சம் மந்திரம் போட வெச்சிடு தங்கச்சி. பேய் ..கீய்.. புடிச்சிருக்கோ என்னமோ...' என்று அவன் மற்றொரு புது யோசனை கூறியபோது அவள் அதை நிராகரிக்கும் சூழ்நிலையில் இருக்கவில்லை. ஏற்கனவே, தன்னுடைய மூக்கில் இருந்த புல்லாக்கை கணவனுக்காக விற்று விட்டாள். இப்பொழுது இருப்பது இது ஒன்றுதான் என்று தன் கால்கொலுசைப் பார்த்தாள்.

"ரோடு போடுற வேலை ஆரம்பிக்கும்னு அன்னிக்கு நீ சொன்னியே அண்ணா?" என்று அவள் வினவிய போது, "வரப்போற திங்கக்கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்போறாங்க. அதப்பத்தி கேக்கத்தான் மேஸ்திரியப் பாக்கப் போயிட்டிருக்கேன். எத்தனை ஆளு வேணும்னு கேட்டு பேர் குடுத்துட்டு வரேன்" என்றான் 'காளு'.

"அப்படின்னா ஒனக்கு புண்ணியம் வரும். என் பேரையும் குடுத்துட்டு வாங்கண்ணா. என் பாடு என்னான்னு ஒனக்கு நல்லாவே தெரிஞ்சிருக்கு" என்று வேண்டினாள்.

"ஏன் நீ சொல்லாட்டா எனக்குத் தெரியாதா என்ன தங்கச்சி. நம்மள மாதிரி இருக்கிற ஏழைங்களோட தலையெழுத்தெல்லாம் இவ்வளவுதான் பாரு. ஏழுமலை சுத்தி ஒரு சின்ன துணுக்கு ரொட்டிய எட்டிப் பாக்க வேண்டியிருக்கு" என்று பெருமூச்சு விட்டு, "நீ என்ன இப்ப நதியோரத்துக்கு போயிட்டிருக்கியா?"என்று கேட்டான்.

"இல்லைண்ணா. மலைப்பக்கம் போலாம்னு நெனைக்கிறேன்' என்று அவள் கூறியவுடனே காளு பதற்றத்தோடு கூறினான், "வேண்டாம் தங்கச்சி. தனியா அங்க போகாத. காட்டுக்கு ஓநாய், நரி, கரடி எல்லாம் வருதாம். மனுஷன எடுத்துட்டுப்போக ஆரம்பிச்சிருச்சின்னு ஜனங்க பேசிக்கறாங்க. இந்த ரத்னி பாயி, தீரா பாட்டி எல்லாரும் கண்ணால பாத்துட்டு வந்திருக்காங்களாம்! சும்மா நதி ஓரத்துக்கு மட்டும் போ" என்று ஆலோசனை சொல்லி அவன் தன் வழியே போய்விட்டான்.

ராமி மறுபடியும் குழப்பத்துக்குள்ளானாள். அருகில் இருக்கும் நதிக்கரைக்குப் போனால் பருத்த விறகுக்கட்டைகள் கெடைக்காது, வெறும் சின்னஞ்சிறு சுள்ளிகளை மட்டும் பொறுக்கி வரணும். வாங்குகிற கிராக்கிகள் அதை ஒன்றிரண்டு ரூபாய்க்கு மேல வெலைக்கு கேக்குறதில்ல. அவ்வளவு கம்மி பணத்துல சோளத்த எப்பிடி வாங்க முடியும். உப்பு, மிளகுக்கு கூட பத்தாது. மலைப்பக்கம் போனால், தடிமனான பருத்த வெறகு கொண்டுட்டு வரலாம். ஐந்து ரூபாய் வரைக்கும் சம்பாதிக்கலாம்!' நரி, கரடின்னு வேற பயமுறுத்தறாங்களே. பட்டப் பகல்ல அவை நம்மள என்ன செய்ய முடியும்? அப்படி எதையாவது பார்த்தால், ஓடி வந்துட்டால் முடிஞ்சது. ராமி திடமாக முடிவு எடுத்து

சரசரவென நடக்க ஆரம்பித்தாள். அவளுக்கு நன்றாகத் தெரிந்த பாதை அரைமணி நேரத்தில் முடிந்து, காய்ந்து போன நிலத்தில் சின்னஞ் சிறு செடி கொடிகள் தெரிந்தன. உயர உயரமாக வளர்ந்து நின்ற வெவ்வேறு வகையான மரம் செடி முள்வேலி முட்புதர்கள் அதிகமாகத் தெரிந்தது. அவளின் நடை நிதானமானது. வளைந்து நெளிந்த, மேடு பள்ளம் உள்ள கடினமான பாதையை அதிஜாக்கிரதையாகக் கடந்து, நல்ல விறகுக்கட்டையாகத்

தேடத் தொடங்கினாள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாய் கிடக்கும் கண்ணில் பட்ட விறகுத்துண்டுகளை மகிழ்வோடு சேகரிக்கத் தொடங்கினாள். பெரிய புதரின் அருகில் செல்லரித்த உலர்ந்த மரம் ஒன்றைக்கண்டு வேகமாக அதன் அருகில் போனாள். கைக்கு எட்டும் கிளைகளையெல்லாம் கோடரியால் வெட்டி வெட்டி ஓரிடத்தில் குவிக்கும்போது, புதருக்குள் ஏதோ மிருகம் ஒன்று நடந்தது போல் தோன்றியதைக் கண்டு, அவளுடைய இதயத்துடிப்பு இரட்டிப்பானது. பயத்தால் பின்னால் குதித்து, கண்ணைப் பெரிதாக்கிப் பார்க்கிறாள். உடல் முழுவதும் அடர்த்தியான ரோமம்நிறைந்த ஆளுயர மிருகம் ஒன்று அவளை நோக்கிப் பார்க்கத் தொடங்கியது! ராமியினுடைய முழு தைரியமும் ஒடுங்கிப் போனது. தொண்டை வறண்டு உடலெங்கும் வேர்த்துக் கொட்டியது. குரல்கொடுப்பதற்கோ, ஓடுவதற்கோ இயலாமல் நடுங்கி நின்றாள்.

கரடி மனுஷங்களைப் பார்த்தா சும்மா விடாது. ஆனா ஆண் கரடி கைக்கு பொண்ணுங்க யாராவது மாட்டிக்கிட்டா அவ்வளவுதான் கத. அது மானபங்கப்படுத்தி படுத்தியே சாகடிச்சுடும்!' என்று மக்கள் கூறியதைக் கேட்டு அறிந்திருந்த அவளுக்கு, தனக்கே அந்த துர்மரணம் அருகில் வந்துவிட்டதோ என்னும் முடிவுக்கு வந்தாள். மக்கள் கூறியிருந்த அறிவுரையைக் கேட்டிருக்க வேண்டும். பட்டினி கிடந்திருந்தாலும் பரவாயில்ல. தன்னந்தனியே இங்கே வந்திருக்கக்கூடாது என்று தனக்குள்ளேயே புலம்பிக்கொண்டாள்.

ஒரு குடிசையின் மூலையில் சுருண்டு படுத்துக்கிடக்கும் கணவன், தன் வருகைக்காக வாசலில் பசித்து உட்கார்ந்திருக்கும் ஏழைப் பிள்ளைகளை நினைத்து அவளின் கண்கள் ஈரமாயின. கரடி தன் மீது பாய இருப்பதை அறிந்தவுடன் ராமி எச்சரிக்கையானாள். தனது குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காவது தான் வாழ வேண்டும் என்ற ஆசை அவளை அங்கிருந்து தப்பித்துக்கொண்டு ஓடத் தூண்டியது.

பிடியிலிருந்து நழுவும் கோடரியைத் தோளில் போட்டுக்கொண்டு ஊரை நோக்கித்

திரும்பி ஓடத் தொடங்கினாள்.

அந்த சமயத்தில் நகரத்து நாகரீக இளைஞனைப் போல தோற்றமளிக்கும் ஒருவன் மிக அருகில் வருவதைப் பார்த்ததும், அவளுக்கு சற்றே தைரியம் வந்தது. 'அய்யோ! அப்பா! கரடி!' என்று சத்தமாகக் கத்தினாள். அதைக் கேட்ட இளைஞன் உடனே அங்கேயே நின்று, கரடி அவள் அருகில் வருவதைப் பார்த்துத் திகைத்தாலும், கண நேரத்தில், சுதாரித்துக்கொண்டு, தன்னுடைய பேண்ட் பாக்கெட்டிலிருந்து தீப்பெட்டியை எடுத்து உடனே நெருப்பைப் பற்ற வைத்தான். தோள்பையிலிருந்து வெளியே தொங்கிக்கொண்டிருந்த பத்திரிக்கை ஒன்றை வெளியில் எடுத்து அதற்கு நெருப்பை வைத்தான். காகிதம் சடசடவென பற்றிக்கொண்டது.

கண் இமைமூடுவதற்குள் கரடி எங்கோ மாயமானது. ராமி புனர்ஜென்மம் அடைந்ததுபோல் பெருமூச்சு விட்டாள். "எனக்கு நீ சாமியப் போல வந்தே. இல்லைன்னா இன்னிக்கு என் கத முடிஞ்சிருக்கும்!" என்று கூறியவாறே கை கூப்பினாள்.

"தனியா வந்தியா. இல்ல கூட யாராவது வந்திருக்கிறாங்களா?" என்று அவன் கேட்டபோது, உண்மையைச் சொல்லலாமா வேண்டாமா என்று அவள் மனம்

குழம்பியது, இவனுடைய முகத்தைப் பார்த்தால் நல்லவனாகத் தோணுது உண்மை யைச் சொல்லலாமென்று எண்ணி,

"ஒத்தையிலதான் வந்திருக்கிறேனுங்க, என் வீட்டுக்காரருக்கு ஒடம்பு சரியில்லாத காரணத்தாலதான் அவரு என் கூட வரல" என்று காரணம் கூறினாள்.

அவன் நாக்கால் 'உச்' சுக்கொட்டி அவளை பரிதாபமாகப் பார்த்து, 'உன் கணவனுக்கு என்ன நோய்?" என்று வினவியபோது,' நீங்க டாக்டராங்க ஐயா?' என்று மறுகேள்வியைக் கேட்டாள் ராமி.

'இல்லம்மா. நான் டாக்டர் இல்ல. நான் ஒரு பத்திரிக்கை நிருபர். இந்த மலைப்பிரதேசத்தைப் பார்க்க வந்தேன்' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். ராமியை ஒரிரு போட்டோ எடுத்துக்கொண்டான். அதைக் கொண்டுபோய் என்ன செய்வீங்கய்யா என்று கேட்டபோது,' பேப்பரில் போடறோம். ஒங்களைப்போல ஏழை மக்களின் சுக, துக்கங்களை அறிந்து அதை பேப்பரில் எழுதுவது எங்களின் வேலை.

சில சமயங்களில் அரசின் கவனத்துக்கு வந்து, உங்களுக்கு ஏதாவது சலுகைகள் கிடைக்க வாய்ப்புண்டு!' என்று அவன் விவரித்த போது, ராமிக்கு அவன் மீது மரியாதை ஏற்பட்டது. தன் குடும்பத்தில் எப்போதும் உள்ள கஷ்ட சங்கடங்களை அவனிடம் மனம் திறந்து கூறினாள்.

"உன் கணவன், கீரு, பண்ணையார் நிலத்தில் வேலை செய்துகொண்டிருக்கும்போது விபத்து நடந்ததால், அவனே (பண்ணையாரே) நஷ்ட ஈடு கொடுத்துக்காப்பாற்ற வேண்டும். இல்லையென்றால், பண்ணையார் குற்றவாளி ஆவான். இதையெல்லாம் நான் பத்திரிகையில் எழுதுகிறேன். நீ கவலைப்படவேண்டாம்!" என்று அவன் தைரியமளித்தபோது,

இன்றிலிருந்து தன்னுடைய கஷ்டங்களெல்லாம் தீர்ந்தது போல எண்ணி ராமியின் மனம் லேசானது. அவள் விறுவிறுப்பாக விறகை சேகரித்து பெரிய கட்டாகக் கட்டியதை, பத்திரிகை நிருபர் மிகுந்த சிரமத்துடன் அவளுடைய தலையின் மேல் ஏற்றி வைக்கிறான்.

அவள் நன்றியோடு கைகூப்பி அவனை விட்டு திரும்பி வந்தாள். இரண்டு பேர் தூக்க வேண்டிய சுமையை அவள் சுமந்திருந்தாலும், அவளுடைய முகத்தில் ஆயாசத்தின் சுவடு கூட தெரியவில்லை. 'அந்த பத்திரிகை எழுதற மனுஷன் வரலைன்னா இந்த பேய் சுமைய நான் ஒருத்தியே தலையில தூக்கி வெச்சிருக்க முடியாது. எங்கேருந்துதான் வந்தானோ புண்ணியவான் சாமி போல... அவனுடைய பொஞ்சாதி புள்ளைங்க நல்லாருக்கணும். இன்னிக்கு இந்த சுமைய அஞ்சு ரூபாய்க்கு கம்மியா குடுக்கவே கூடாது. கடையிலேருந்து ரெண்டு கிலோ சோளம் வாங்கி, சுண்ணாம்பு போல நைசா மாவரச்சி புருஷன் புள்ளைங்களுக்கு வெள்ளையா ரொட்டி தட்டிக் குடுக்கணும். காலணா பணங்குடுத்து வெள்ளைப்பூண்டு வாங்கணும். புருஷனுக்கு பூண்டு காரம்னா ரொம்ப இஷ்டம்!...அப்படியே பணம் மிச்சமானா ஒரு அரை பாட்டில் சாராயத்தை வாங்கிட்டுப்போகணும். அதைக் குடிச்சிட்டுப் படுத்துட்டால் ஒடம்பு வலியெல்லாம் போயிடும். பாவம்! அப்படியாவது கொஞ்சநேரம் மறக்கட்டும்!'

சட்டென்று அவளுக்கு எதிரில் இரு மனிதர்கள் குறுக்கே நின்று,'ஏய்! சுமய கீழே போடு' என்று சத்தமான குரலில் கட்டளையிட்ட போது, ஆகாயத்தில் ரெக்கை

விரித்துக்கொண்டிருந்த பறவை அரை கணத்தில் ரெக்கை முறிந்து தரையில் விழுவதைப்போல ராமி அழகான கற்பனை உலகத்திலிருந்து யதார்த்த உலகுக்கு வந்தாள்.

கழுத்துவரை முடியை விட்டு, அடர்த்தியான தாடி, மீசையோடு, பூப்போட்ட சட்டை, தொள தொள பேண்ட் அணிந்திருந்த அந்த நடுவயது ஆண்கள் இருவரும் குடித்ததால் போதை ஏறி அவளையே விழுங்கிவிடுவதைப்போல் பார்ப்பதைக் கண்டு, இரண்டாவது முறை கரடியைப் பார்த்ததைப்போல ராமி பயந்து அலறினாள்.

'என்ன பாத்துட்டிருக்கிறே? சுமைய எறக்கி கீழே போடுன்னு சொன்னது கேக்கலியா?' என்று மற்றுமொருமுறை அரட்டியபோது, 'ஏன் கீழ போடணும்? இருட்டாகுது. சீக்கிரமா நான் வீட்டுக்குப் போகணும்' என்று சுமையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு கூறினாள்.

" இலவசமா இந்த மரத்த வெட்டி ம்ம்ம் கொட்டி, கட்டு கட்டறே. சீக்கிரமா வீட்டுக்குப் போகாம என்ன செய்துகிட்டிருக்கிறே?" என்றவாறே ஒருத்தன் அவள் சுமந்திருந்த கட்டையை இழுத்து தரையில் வீசினான். மற்றொருவன் அவள் கையிலிருந்த கோடரியைப் பிடுங்கிக் கொண்டான். "தினமும் இப்படி வந்து வந்து திருட்டுத்தனமா மரத்தை வெட்டி வெறகு எடுத்துட்டுப் போறீங்களே. குத்தகை வாங்கி இருக்கிற நாங்க என்ன வாயில மண்ணு போட்டுக்கிட்டு போகணும்னு நெனக்கிறீங்களா?" ஒருவன் ரோஷமாக நிந்தித்தான்.

"அய்யோ ரொம்ப ஒண்ணும் வெட்டலையய்யா. கீழே விழுந்து கெடந்ததைத்தான் எடுத்திருக்கிறேன். பத்திரிகையில எழுதற அய்யா இங்கதான் இருக்காங்க. வேணும்னா அவங்கள கேட்டுப் பாருங்க."

"எந்த அய்யாவோட சாட்சியும் வேண்டாம் எங்களுக்கு. எங்க அனுமதி இல்லாமல் இந்த காட்டுக்கு வந்திருக்கிறே. பின்னே கைல கோடரி வெச்சிருக்கிற இந்த சாட்சி போதும். பணத்த எடு. ஒரு கோடரி எடுத்து வந்ததுக்கு உனக்கு தண்டப்பணம் இருபது ரூபாய்.கொடுக்கணும். அத கொடுத்துட்டு போ."

ராமி பயந்தாள். "ஏழை இருபது ரூபாய் எங்கிருந்து நான் எடுத்துவரட்டும் அய்யா! இந்த ஒரு வாட்டி பெரிய மனசு பண்ணி விட்டுடுங்க. இன்னொருவாட்டி இந்தப்பக்கம் வரமாட்டேங்க" என்று தீனமான குரலில் வேண்டினாள்.

"விட்டுட்டோம். போ. விறகுகட்டையும், கோடாரியையும் தண்டப்பணத்துக்கு எடுத்துக்கிட்டோம்" என்றதைக் கேட்டு அவள் ஆவேசமாய்க் கத்தினாள்.

"அய்யய்யோ. உங்கள வேண்டிக் கேக்கறேன் அய்யா. கோடரி என் வலது கையி மாதிரி.

கடைசியில அத ஒண்ணையாவது குடுத்துடுங்க நான் போயிடறேன்"

"அதெப்படி போவே. நில்லு. நல்லா ஒரு முயல் வேட்டை கெடச்சிருக்கு. எப்படியும் உலர்ந்த வெறகுயெல்லாம் சேகரிச்சிருக்கிறே. அதில் இந்த முயல சுட்டு சாப்பிட்டு அனுபவிக்கலாமுன்னு"

"ஏய். உன் கால்ல இருக்கே அது வெள்ளியா"

இருவரும் விதவிதமாகப் பேச ஆரம்பித்த போது ராமி பயத்தால் நடுங்கி நின்றாள்.

“உன்னோட பையையாவது வெளியே எடு. அஞ்சு, பத்து ரூபாயாவது கெடைக்குதான்னு பாக்கலாம்“, என்று கூறுகின்ற அவர்கள் இருவரும் அந்தப் பையை இழுக்கும் சாக்கில், அவளுடைய பாவாடையின் நாடாவை அவிழ்த்து முந்தானையையும் பிடுங்கி வீசினார்கள்.

“விடுங்க. என்னய விட்டுடுங்க’ என்று கூக்குரலிட்டு அவள் மறுத்தபோது, ‘நீ இப்படி கத்துனா இந்த கோடாரி வெறகு கட்டைங்களையும் எடுத்துட்டு போயிடுவோம் பாரு”, என்று பயமுறுத்தினார்கள்.

“எடுத்தா எடுத்துட்டு போங்க. என்ன விட்டுடுங்க. நான் போறேன்”, என்று ராமி கெஞ்சினாள்.

“விடு. அப்படி விடுறதா இருந்தா பிடிச்சே இருக்க மாட்டேன். இந்த காட்டுல நீ எவ்வளவு கத்தினாலும் எந்தப் பயனும் இல்ல” என்று அராஜகமாக அட்டகாசமான சிரிப்போடு அவளின் மேல் பாய்ந்து விழுந்தார்கள்.

எத்தனையோ நேரமானபோது ராமி துஷ்டரிடமிருந்து விடுதலையாகி, கஷ்டப்பட்டு எழுந்து தன் கோடரி, விறகு கட்டைகளைத் தேடினாள். அவை இரண்டும் மாயமானதோடு அவள் காலின் கொலுசுகளும் காணாமல் போயிருந்தன. ராமியினுடைய இதயம் முழுக்க ரோஷம் தலை தூக்கியது. முஷ்டிகள் இறுகின.


‘நீங்க எந்த குகையில போயி மறைசிட்டாலும் நான் விடமாட்டேண்டா! என்னோட கோடாலியை எப்படியாவது பிடுங்கி அதால உங்கள சின்னச் சின்ன துண்டு துண்டமா வெட்டின பெறகுதான் நான் வீட்டுக்குப் போவேண்டா’ என்று காடே நடுங்குமாறு கூப்பாடு போட்டுக்கொண்டு அடர்த்தியான காட்டுக்குள் ஓடத் தொடங்கினாள்......

## காலம்

கரைந்தோடும் பொழுதுகளில்
கரைகின்ற பாழ்மனதால்
இறந்த காலத்தில்
உறைந்து நிற்கிறேன்
நிகழ்காலம் எதிர்காலம்
நோக்கித் தள்ளிவிடுகிறது
தடுமாறியவர்களை
ஓடுபாதையில்
நிற்க சம்மதிப்பதில்லை
காலம்!
முன்னால் ஓடினால்
முட்கள் துரத்துகின்றன
தயங்கி நின்றால்
தள்ளி விடுகிறது
காலத்தோடே பயணிக்க
காலம் பணிக்கிறது
நின்று விட்டால்
காலம் கூட
காலமாகி விடும்
நிற்காமல் ஓடு நண்பா!
துடிப்போடு இரு!
இல்லையெனில்
தூக்கிப் போட்டு விடுவார்கள்
என்று மூச்சிரைத்தவாறே
சுட்’டிக்‘ காட்டியது காலம்!
இப்பொழுது
காலத்தின் மீதேறி
நானும் பயணிக்கிறேன்!

● பா. சிவகுமார்

● சிறுகதை



# பவுல் ராஜின் டைரி குறிப்புகள்

● நௌஷாத் கான் லி

இந்த உலகத்தில் இப்படியெல்லாம் நடக்குமா ?இதுவரை பெண் பிள்ளைகளுக்கு இழைக்க பட்ட கொடுமையை தானே படித்து இருக்கிறோம் ஆண் பிள்ளைகளுக்கும் இப்படி நடக்குமா என்று கேள்விக்குறியுடன் ஒரு வித பிரம்மை பிடித்த மன நிலையுடன் இந்த கதையை படிக்க நேரிடலாம் ..சிலருக்கு இதுமாதிரியான விஷயங்கள் கூட இந்த பாழாய் போன உலகத்தில் நடக்கிறதா என்று அச்சத்தில் அவர்களின் இதயத்தின் பட படப்பும் கூடலாம் ..

ஒரு கையில் உள்ள ஐந்து விரலே ஒன்றாக இல்லாத போது மனிதன் மட்டும் எப்படி ஒரே குணத்தில் இருப்பான் ?

காட்டில் கூட மிருகங்களை அதன் குணாதியசங்களை கொண்டு அடையாளம் காண

முடியும், காட்டில் வாழும் மிருகங்களை விட நம்மை சுற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் கொடூரமான சில மனித ஜென்மங்கள் வெளியில் அகப்படாத வரை உத்தமன் வேஷம் தான் போடும் ...

தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு மேல்நிலை பள்ளியில் சுதாகர் ஒன்பதாம் வகுப்பு கொண்டிருந்தான் ,அவனுக்கு ஒரு கெட்டபழக்கம் ஒன்று உள்ளது செய்யாதே என்றால் செய்வான் மத்தபடி படிப்பில் கெட்டி ,திறமையானவன் அவனுடைய அமைதியான குணத்திற்கு ஒத்து போகும் வகையில் அவன் கிளாசில் பவுல் ராஜ் மட்டும் தான் இருந்தான் ,அதனால் அவன் கூட மட்டும் தான் நட்பு வச்சுக்கிட்டான் ,பவுல் ராஜும் ரொம்ப அமைதியானவன் ,அவன் படிப்பை விட படம் நல்லா வரைவான் ..பார்த்ததை பார்த்த மாதிரியே தத்ரூபமாக வரைவான் அவனுக்கு படிப்பதை விட படம் வரைவது தான் ரொம்ப பிடிக்கும் அமைதியாக பேசுவான் ,எது கேட்டாலும் கொடுப்பான் ,சாப்பிடுவதை கூட பகிர்ந்து கொடுப்பான் ஆனால் அவன் பேக்கை தொட்டால் மட்டும் அவனுக்கு மூக்குக்கு மேல் கோபம் வரும் ..ஒரு நாள் உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் பள்ளியிலேயே மயங்கி விழுந்து விட்டான் ,அவன் வீட்டுக்கு தகவல் கொடுக்கவும் அவன் அம்மா ஆட்டோவில் வந்து அவனை அழைத்து சென்று விட்டாள் ,பதற்றத்திலும் ,மறதியிலும் அவங்க அம்மா அவனுடைய பேக்கை எடுத்து செல்லாமலே வகுப்பறையிலேயே விட்டு விட்டாள் .

ரொம்ப நாளாக பவுல் ராஜின் பேக்கில் என்ன இருக்கிறது என்கிற ஆர்வம் சுதாகர்&க்கு உண்டு எனவே வகுப்பறையில் யாருமில்லாத உணவு இடைவேளையின் போது பவுல் ராஜின் பேக்கை திறந்தான் பாடபுத்தகங்கள்,பென்சில் பாக்ஸ் மற்றும் ஒரு டைரி இருந்தது கிளாஸ்க்கு வேறு யாரும் வருவதற்கு முன் டைரியை மட்டும் எடுத்து தன் பேக்கில் வைத்தான் பவுல் ராஜின் பேக்கை அவன் உட்கார்ந்திருக்கும் பெஞ்சுக்கு கீழ் பத்திரமாக வைத்தான் ...

அன்று மாலை வகுப்பு முடிந்ததும் நல்ல பிள்ளையாக கால் ,முகம் கழுவி படிப்பது போல் பாட புத்தங்களுக்கிடையே பவுல் ராஜின் டைரியை படிக்க தொடங்கினான் ..

டைரியின் முதல் பக்கத்தில் இது வெறும் டைரி அல்ல ,என் மனசு ...இந்த டைரியில் இருப்பது எல்லாம் வெறும் வார்த்தைகளோ &எழுத்துக்களோ இல்லை என் வலிகள் &வேதனைகள் &என் எண்ணங்கள் என்று எழுதி இருந்தது

டைரியின் முதல் அத்தியாயம்

டேய் பவுல் இங்கே வாடா ???

என்னங்க ஆண்டட்டி

உங்க அம்மாக்கிட்ட சொல்லு ,நாம்ம குடிக்கிறது ,குளிக்கிறது எல்லாமே நம்ம காலனியில இருக்குற டேங்க் தண்ணியில தான் ,அந்த டேங்கை கிளீன் பண்ணி ரெண்டு மாசம் ஆகுது இப்படியே விட்டோம்னா சீக்கு தான் வந்து சாவோம் ,ரொம்ப சின்ன டேங்கு தான் ஆனா அதை க்ளீன் பண்ண எண்ணூறு ரூபாய் கேட்குறானுங்க அதனாலே நீயும் ,நானும் சேர்ந்து க்ளீன் பண்ணுவோம் ,எங்க வீட்டுக்கும் ,உங்க வீட்டுக்கும் காசு வாங்க வேணாம் மீதமுள்ள ரெண்டு வீட்டுக்கு ஆளுக்கு இருநூறு வாங்கிடுவோம் அதுல உனக்கு இருநூறு ,எனக்கு இருநூறு என்றாள் .டேங்கை க்ளீன் பண்ணுறதுக்கு முன்னாடி எல்லோரையும் தேவையான அளவுக்கு தண்ணி பிடிச்சிக்க சொல்லு என்றாள் ..அந்த

இருநூறு ரூபாய்க்கு ஆசைப்பட்டு அம்மாவிடம் பர்மிசன் வாங்கி கொண்டு டேங்க் க்ளீன் செய்ய சென்றேன் ..

வெளியே பட்ட பகலாய் காட்சியளித்து சூரியன் கொளுத்தினாலும் அந்த டேங்குள் குளுமையாய் ,இருட்டாய் இருந்தது ,உள்ளுக்குள் லேசாய் பயம் இருந்தாலும் பக்கத்தில் ஆண்ட்டி இருக்கிறார்கள் என்ற தைரியத்தில் ப்ளீச்சிங் பவுடர் போட்டு டேங்கை க்ளீன் செய்து கொண்டிருந்தேன் திடீரென ஆண்ட்டி நான் போட்டிருந்த கால் சட்டையின் தொடை இடுக்கின் வழியே கைகளை மேல கொண்டு சென்றாள் , அவளது கையை விருப்பமில்லாமல் தட்டி விட்டேன் மீண்டும் ப்ளீச்சிங் பவுடரை போட்டு டேங்கின் இன்னொரு புறம் சுத்தம் செய்து கொண்டிருந்தேன் ,என் முதுகில் வாயால் ஊதுவது ,தொடையில் கை வைத்து தேய்ப்பது ,கிட்ட கிட்ட வந்து உரசி ,உரசி அமர்வது என வாழ்க்கையில் முதன் முறையாக அந்த பக்கத்து வீட்டு ஆண்ட்டி அப்படி செய்தது என்னவோ போல் அருவெறுப்பாய் இருந்தது ...ஒரு வழியாக டேங்கை க்ளீன் செய்து விட்டு மேல வந்து விட்டேன் ..அதன் பின் அந்த பக்கத்து வீட்டு ஆண்டியிடம் சரியாக முகம் கொடுத்தே பேசுவதில்லை ..

டைரியின் இரண்டாம் அத்தியாயம்

டே பவுலு உங்க அப்பா &அம்மா தான் ஊருக்கு போறாங்களே ?எங்க வீட்லயும் யாரும் இல்லை,நானும் தனியா தான் இருக்கேன் ,உங்க வீட்ல டிவியும் இல்லை உனக்கு நிச்சயமா பொழுதும் போகாது உனக்கு தான் கார்திக்ன்னா ரொம்ப பிடிக்கும் லே ,வர்ற வியாழக்கிழமை நைட் கார்த்திக் &ரேவதி நடிச்ச தெய்வ வாக்கு படம் போடுறாங்க ,ரொம்ப நல்லா இருக்கும் வர்றியா என்றான் சண்முகம் ..

கார்த்திக்கை ரொம்ப பிடிக்கும் என்பதால் சரி என்றேன் .முதன் முதலாய் வேறொரு வீட்டிற்கு செல்கிறேன் ,யாரிடத்திலும் சரியாக பேச மாட்டேன் இருந்தாலும் சண்முகம் தெரிந்த அண்ணன் ,ஒரே தெரு என்பதாலும் &கார்த்திக் படம் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தாலும் சரி என்றேன்

வள்ளி வள்ளி என வந்தான் வடிவேலந்தான்

புள்ளி வைத்து புள்ளி போட்டான்

புது கோலம்தான்

சொல்லித்தர சொல்லி கேட்டு தினமும் சிந்து பாடினான்

வள்ளி இன்ப வள்ளி என்று தினமும் முல்லைச்சரம் கொண்டு சூடினான்

வள்ளி வள்ளி என வந்தான் வடிவேலந்தான்

அப்படியே மெய் மறந்து என்னை மறந்து கேட்டு கொண்டிருந்தேன் ,திடீரென யாரோ என் கையை கட்டுவது போல இருந்தது நான் சற்றும் எதிர்பார்க்காத சமயத்தில் சண்முகம் அவன் கட்டியிருந்த லுங்கியை தொடைக்கு மேல் தூக்கி கொண்டு என் கால் சட்டையை கீழே இறக்கி பின் புறத்தில் ஏதோ செய்தான் அடுத்த நிமிடம் வலியால் அலறி துடித்தேன் அவன் என்னை விட பெரியவன் , பலசாலி என்பதால் என்னால் எதுவும் செய்ய முடிய வில்லை ..அன்றைய இரவு அங்கு நடந்ததை வெளியே சொன்னால் கொன்று விடுவேன் என்று மிரட்டினான் ..அன்றிலிருந்து யார் உடனும் சரியாக பேசுவதை

தவிர்த்தேன் ..அம்மா ,அப்பாவை தவிர யாரிடமும் பேசுவதற்க்கே பயமாய் இருந்தது .

இந்த உலகம் ரொம்ப மோசமானது , குப்பை தொட்டியை விடஅழுக்கானது , கழிப்பறையை விட நாற்றம் நிறைந்தது

டைரியின் மூன்றாம் அத்தியாயம் :

டே பவுல் படம் வரைஞ்சா மட்டும் பத்தாது ,படிப்பிலும் கொஞ்சம் நல்லா படிக்கணும் .என்னை மாதிரி நல்லா படிச்சு வாத்தியார் ஆகணுமா வேணாம்மா ??

உங்க அம்மாக்கிட்ட நான் பேசிக்கிறேன்,உன்னை இப்படியே விட்டா உருப்படாம குட்டி சுவரா போயிடுவ ?

அன்றைய இரவு

டே பவுல் பரீட்சை முடியுற வரைக்கும் நீ வாத்தியார் வீட்ல தங்கியே படி ,அந்த வாத்தியார் ரொம்ப நல்லவரா இருக்கிறாருடா ,மலைக்கு போற மாதிரி வருஷம் முன்னூத்தி அறுபத்தி அஞ்சு நாளும் கழுத்துல மாலை போட்டு , நெத்தியில பொட்டு வச்சு பார்க்கிறதுக்கு தெய்வ கடாட்சமா இருக்கிறாருடா ,அவர்கிட்ட போனா நீ உறுபட்டிடுவ..

அம்மா வேணாம்மா

அட சனியனே ஒழுங்கு மரியாதையா போய் படிச்சு ,பாஸ் ஆகு,பரீட்சை முடியுற வரைக்கும் வீட்டு பக்கம் காலை வச்சே காலை உடைச்சிடுவேன் என்றாள் அம்மா

வாத்தியார் வீட்டில் இரவு பத்து மணி வரை படித்து முடித்த பிறகு உறங்கி கொண்டிருந்தேன் ..நள்ளிரவு யாரோ என்னை எழுப்புவது போல் இருந்தது ..மாலையும் கழுத்துமாய் பய பக்தியாய் இருக்கும் வாத்தியார் அரைக்கால் ஷாட்ஸ் போட்டிருந்தார் என்னை அவர் ரூமுக்கு அழைத்தார் வேண்டாம் வேண்டாமென சொல்லியும் கூட சண்முகம் அண்ணன் செய்தது போலவே அதை விட ஒரு மடங்கு மேல் போய் செய்தார்..என் அலறல் அதிகமாக இருந்ததால் ஒரு பெரிய துணியை வாயில் வைத்து கட்டி சத்தம் வராத படி பார்த்து கொண்டார் ...

இங்க பாருடா பவுல் இந்த விஷயத்தை வெளியே சொன்னே உன்னை பெயில் போட்டிடுவேன் ,நான் எப்பப்போ சொல்றனோ அப்பவெல்லாம் என் வீட்டுக்கு வரணும் என்றார் ...

அப்போது என் பின் புறத்தில் ஈரமாய் இருந்தது தொட்டு பார்த்தேன் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது ...மறுநாளும் எரிச்சலும் &வலியும் சற்று அதிகமாகவே இருந்தது...

இந்த ஒரு வருஷம் சீக்கிரமா முடியணும் ஆண்டவா அப்ப தான் அந்த எஸ் .எம் .பிரபு சார் கிட்ட இருந்து எனக்கு விடுதலை கிடைக்கும்னு அந்த டைரியில் பவுல் ராஜ் உருக்கமாய் எழுதி முடித்து இருந்தான் ...

மறுநாள் சீக்கிரமாகவே வகுப்பறைக்குள் சென்று பவுல்ராஜின் பேக்கில் அவனது டைரியை வைத்து விட்டு ஒன்றும் தெரியாத பிள்ளை போல இருந்து விட்டேன் ...

பத்து வருடங்களுக்கு பிறகு

கல்லூரி வாழ்க்கையெல்லாம் முடிந்து நல்ல வேலையிலும் சேர்ந்து சமீபத்தில் தான் திருமணமும் பெரியோர் ஆசிர்வாதத்தால் நடந்து முடிந்தது ,குடும்ப தேவைக்காக பணம் எடுப்பதற்காக வங்கிக்கு சென்றேன் அங்கு எதிர்பாராத விதமாக பவுல்ராஜை பார்த்தேன் ..

எப்படிடா இருக்கே ?நல்லா இருக்கியா ?எங்கே இருக்கே ? என்ன பண்ணுற ?என அடுக்கடுக்காய் பல கேள்விகள் ஆனால் அவனோ கொஞ்சம் பொறுமையாக நல்லா இருக்கேன் என்றான்

அப்புறம் நீங்க யாரு என்றான்

நான் தாண்டா உன் கிளாஸ்ல உன் கூட படிச்ச சுதாகர்ன்னு அவனுக்கு ஞாபகம் படுத்தி ஒரு அரை மணிநேரம் நல்ல விசாரிப்புகளோடு பழைய சில நல்ல நினைவுகளை அவனுக்கு ஞாபகம் படுத்தி விட்டு அந்த இடத்தை விட்டு சென்று விட்டேன் ..பவுல் ராஜ் கொஞ்சம் பெண் நளினங்களோடு இருந்தாலும் அவன் பிறப்பால் ,குணத்தால் ஆண் தான், அவனுடைய பொறுமையையும், நளினத்தையும் காரணமாய் வைத்து அவனை சின்ன வயசில் ஒரு சிலர் சீரழித்ததை நான் அறிந்தும் கூட அந்த வயதில் அவனை காப்பாற்ற முடியாத பாவியாக ஆகி விட்டேன் ...இன்னும் சில மாதத்தில் தனக்கு திருமணம் என்று பவுல் ராஜ் சொல்லி விட்டு நகர்ந்ததை நினைத்து மனம் கொஞ்சம் ஆறுதல் அடைகிறது அதன் பிறகு பல வருடங்கள் உருண்டோடினாலும் பவுல் ராஜின் நினைவுகளும் அந்த டைரியின் ஞாபகங்களும் ஏனோ மறக்கவே இல்லை இப்போதும் நான் ஆண்டவனிடத்தில் வேண்டுவது ஒன்றே ஒன்று தான் பவுல் ராஜின் திருமண வாழ்க்கை எந்த பிரச்சனையின்றி, அவன் குழந்தை குட்டிகளோடு பல்லாண்டு வாழ வேண்டும் என்பது மட்டும் தான்..

## எரியும் மரங்கள்

காட்டை நெருப்பு
கவ்வி இழுக்கும்,
வாழும் மரங்களின்
வாழ்க்கை வழுக்கும்;
சிரித்த கிளைகளின்
மௌனப் புலம்பல்,
உதவும் கரங்களில்
கரையும் சாம்பல்!

காற்றை கொடுத்த
கடவுள் அவரோ?
மரத்தை விதைத்த
தலைவர் யாரோ??
மரங்களை காக்க
மறந்தவரின் வாழ்க்கை,
விரைவில் முடிந்தது
இதுதான் இயற்கை!

வாழ்க்கையை நேசிக்கும்
இயற்கையின் பிள்ளை,
தவத்தில் இருக்கிறது
“வேண்டாம்!” தொல்லை;
எரியும் மரங்களின்
ஆன்மா பேசும்,
மனிதர்கள் அழிய
சாபம் வீசும்.

**● வெ.ஹேமந்த் குமார்,**
**ஈரோடு**

# ஒரு பக்கம் உடைந்த மிருதங்கம்

● மு. தயாளன்



லண்டன் மாநகரம் மழையால் நனைந்து கொண்டிருந்தது. பல நாட்களாக மழை இல்லாதிருந்ததைப் போக்கும் முகமாக மழை தன் ஆரவாரத்துக்குக் கொட்டிக் கொண்டிருந்தது. இந்த மழையை யன்னலூடாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் மணிவாசகம். மணிவாசகத்துக்கு வயது எழுபத்தைந்து ஆகிறது. ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் மணிவாசகம். ஓய்வு பெற்று ஐந்து வருடமாகிவிட்டது. ஓய்வு பெற்று மூன்று வருடங்களில்அவரது மனைவி பவளராணி காலமாகிவிட்டாள். அவளின் இழப்பை அவரால் தாங்க முடியவில்லை. எல்லாவற்றுக்கும் அவளின் உதவியைப் பெற்றுச் செல்லப் பிள்ளையாக வாழ்ந்த அவருக்கு அவளில்லாமல் வாழ்வது மிகக் கடினமாகவே இருந்தது.

ஒரு தேநீர் கூடப் போட்டுப் பழக்கமில்லாத அவர் மிகவும் கஸ்டப்பட்டார். தன்னுடைய உடுப்பைக்கூட அவர் அழுத்தியதில்லை. அவர் போடும் உடுப்புக்களைக் கூட அவளே தெரிவு செய்வது வழக்கம்.

உழைக்கமட்டுமே தெரிந்து வைத்திருந்த மணிவாசகத்துக்கு இன்றைய நிலை கண்ணைக் கட்டிக் காட்டில்

விட்டது போலிருந்தது. ஒரு நாள் பவளராணிக்கு வந்த நெஞ்சுவலியால் அவளைவிட மணிவாசகம்தான் துடித்தார். அந்தக் கொடிய நெஞ்சுவலி அவளை அழைத்துச் சென்றுவிடும் என்று கனவிற் கூட அவர் நினைக்கவில்லை.

அவளின் உடம்பை வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்குக் கொண்டு வந்தபோது மணிவாசகத்தார் ஒவென்று கதறினார். தனக்கு ஒத்தாசையாக இருந்த அவள் போனபின்பு மணிவாசகத்தார் பலமிழந்த மாடு வண்டிலை அழுதழுது இழுப்பதுபோல் வாழ்க்கையை இழுக்க ஆரம்பித்தார். தான் யார் வீட்டுக்கும் வரமாட்டேன் என்று பிள்ளைகளிடம் கூறிவிட்டார். அவருடைய பிள்ளைகள் நல்லவர்கள். அவர்களால் தங்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்த தகப்பனை தனியே விட்டுச் செல்ல முடியவில்லை.

மணிவாசகத்தார் பிடிவாதமாகவே இருந்தார். மணிவாசகத்தாரைப் பொறுத்தவரை பிள்ளைகளுக்குப் பாரமாக இருப்பதை அறவே வெறுத்தார். தனியே இருந்து தன்னால் சமாளிக்க முடியாதென்பதும் அவர் உள்ளத்துக்குத் தெரியும். என்னதான் இருந்தாலும் அவரால் விட்டுக் கொடுக்க முடியவில்லை. வருத்தங்களும் அவரை வருத்திக் கொண்டிருந்தன. சில வேளைகளில் கட்டிலை விட்டு இலகுவாக இறங்க முடிவதில்லை. அப்போதெல்லாம் மனைவியின் படத்தைப் பார்த்து அழுவார்.

ஒரு நாள் மூன்று பிள்ளைகளும் வீட்டுக்கு வந்து ஒரே பிடிவாதமாக நின்றார்கள். ஒவ்வொருமாதமும் ஒவ்வொருவர் வீட்டில் இருக்கலாமென்றார்கள். மணிவாசகத்தார் மறுத்துவிட்டார்.

" நான் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வீட்டில் மாறிமாறித் தொங்கிக் கொண்டிருக்க முடியாது" என்று சத்தம் போட்டார்.

மூவரும் ஆளையாள் பார்த்தனர்.

அவரின் மூத்தபிள்ளை வினயன் "சரி அப்பா நீங்கள் எங்கடை வீட்டை மட்டும் வந்திருங்கோ" என்றான்.

நிலமை சுமுகமாகி மணிவாசகத்தார் புறப்பட ஆயத்தமானார். பிள்ளைகளுக்கு மிகுந்த சந்தோசம். மூத்தமகன் வினயனுடன் புறப்பட்டார். வினயனுடைய மனைவியும் நல்ல பெண். வினயனுக்கு மூன்று பிள்ளைகள். மணிவாசகத்தார் அவர்கள் வீட்டை அடைந்ததும் பேரப்பிள்ளைகள் அவரைக் கட்டியணைத்தார்கள். மணிவாசகத்தார் மனதுக்குள் மகிழ்ந்தாலும் இதனைப் பார்க்க தன் மனைவி இல்லையே என்று கவலைப்பட்டார். ஒவ்வொரு நிமிடமும் அவர் மனதில் தோன்றித் தோன்றி மறைபவள் அவரின் மனைவியே.

தன்னை ஒரு குழந்தையாக வளர்த்துவிட்டுப் போய் விட்டாளே என்று தினமும் ஏங்குவார். மகனின் வீட்டில் அவருக்கு ஒரு அறை கொடுக்கப்பட்டது. முதற்கிழமை சந்தோசமாகக் கழிந்தது. மணிவாசகத்தாருக்கு அடிக்கடி தேனீர் வேண்டும். அவர் கேட்டால் யாரும் மறுக்கப் போவதில்லை. மருமகளுக்குத் தொந்தரவு கொடுக்க அவர் விரும்பவில்லை. தானே போய்த் தேனீர் தயாரிக்கவும் விரும்பவில்லை. அவர் சென்று தயாரித்தால் யாரும் தடுக்கப்போவதுமில்லை. ஆனால் அந்தச் சமையலறையை அந்நியமாகவே பார்த்தார். தன்னைப் பார்த்து ஏதும் சொல்லி விடுவார்களோ அல்லது சினப்பார்களோ என்று பயந்தார். இந்த உளவியல் ரீதியான தாக்கம் அவரைத் துன்புறுத்தியது. மனைவி இருக்கும்போது காலையில் எழும்பி கீழே வரும்போது

" பவளம் ஒரு தேத்தண்ணி போடு" என்று கூறும்போது பவளராணி தேனீரோடு வந்து நிற்பாள். இப்படியான வாழ்க்கை இனிவராது என்பது பவளம் போனபோது சொல்லப்பட்ட செய்தி என்பது அவருக்குத் தெரியும். வினயனின் மனைவி விதுரா உண்மையில் தங்கப்பதக்கம். ஆனால் அவள் பவளம் இல்லையே என்பதுதான் அவரின் பிரச்சினை. பவளராணி இருக்கும்போது அடிக்கடி நான் நீ இருக்கும்போது போய்விடவேண்டும் என கூறுவார். ஆனால் அப்படி நடக்காமல் போனது அவரின் இருதயத்தில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. ஒரு தடவை அவர் மகன் வினயன் அவர் இருக்கும் அறைக்குவந்து

"அப்பா எப்படி இருக்கிறியள். ஒழுங்காய்ச் சாப்பிடிறியளோ" என்று கேட்டுவிட்டு

"அப்பா உங்கடை நன்மைக்குத்தான் சொல்லிறன். சும்மா இருக்காமல் உங்கடை வேலையளை நீங்களே செய்யப் பாருங்கோ."

என்று சொன்னபோதுதான் மணிவாசகத்தார் பவளம் இப்போ இல்ல என்ற யதார்த்தத்தை உணர்ந்தார். அதற்குப் பிறகு தன் உடுப்புகளைத் தான் தோய்ப்பதற்கும் இதர தன் வேலைகளை தானே செய்வதற்கும் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டார் மகன் வந்து சொன்னதை அவர் பெரிதாக எடுக்கவில்லை. தன் நன்மைக்கே சொல்வதாகக் கருதிக் கொண்டார்.

நன்றாக வாசிப்பார். பவளம் இருக்கும்பொழுது " சரியான புத்தகப் பூச்சி" என்று அவள் பேசியமை நினைவுக்கு வரும். இப்போ அவர் படிக்க எதுவுமில்லை. வினயனைக் கேட்டால் அவன் மறுக்கப் போவதில்லை. ஆனால் தன்னால் கேட்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டார். எதையும் யாரிடமும் கேட்கக்கூடிய தெம்பு மணிவாசகத்தாரிடம் இல்லாதிருந்தது.

ஆனாலும் வினயன் இங்கிதம் தெரிந்தவன் சில சமயங்களில் தான் கடைக்குப் போகும் சமயங்களில் தகப்பனின் வாசிப்புக்காகச் சில தமிழ்ப் பத்திரிகைகளை வாங்கிவந்து கொடுப்பான். அதுகூட மணிவாசகத்தாருக்குப் பிடிப்பதில்லை. அவருடைய மனதில் தான் பிள்ளைக்குக் கஸ்டம் கொடுக்கிறேனோ என்றே நினைத்தார். உளரீதியாக மணிவாசகத்தார் பாதிக்கப்பட்டிருந்தார். அவரிடம் யாரிடமிருந்தும் எதையும் பெற்றுக் கொள்ளும் மனநிலை இருக்கவில்லை. அவர்கள் பிள்ளைகளாக இருந்தாலும் அதுதான் அவர் நிலை. தனிமையைத் தன் நண்பனாக்கிக் கொண்டார். தனிமையில் இருந்து மனைவியை நினைப்பதே அவர் வாழ்க்கையாகிவிட்டது.

தந்தையை நன்கு பார்க்க வேண்டுமென்ற மனநிலையிலிருந்த பிள்ளைகளுக்கும் என்ன செய்வதெனப் புரியவில்லை. வைத்தியர்களோடும் ஆலோசனை செய்து பார்த்தார்கள். அவராகத் தன்னை மாற்றிக் கொண்டாலொழிய மருந்துகளால் எதுவும் செய்ய முடியாதெனக் கைவிரித்துவிட்டார்கள். இது ஒருவகை மனநோய் என்றே கூறினார்கள்.

பேரப்பிள்ளைகளோடு நன்றாகவே பழகினார். அவர்கள் சந்தோசப்படும்படி எல்லாவற்றையும் தனது ஓய்வூதியப் பணத்தில் வாங்கிக் கொடுப்பார். தான் உண்ணும் உணவுக்கான பணத்தையும் தவறாது வலுக்கட்டாயமாகக் கொடுப்பார். ஒரு தடவை வினயன் மணிவாசகத்தாரின் நண்பருக்குத் தகப்பனாரின் நிலையைக் கூறியபோது

"அவன் அப்பிடித்தான். மாற்றமுடியாது. வரட்டுக் கௌரவத்தைத் தன்மானம் என்று

நினைக்கின்ற அசட்டுப் பிடிவாதக்காரன். “ என்று அவர் கூறினார்.

சில சமயங்களில் தமிழ்ப் புத்தகங்களைக் கண்டால் அப்பா படிப்பார் என நினைத்து வாங்கி வருவான் வினயன். அதை வாங்குவார். ஆனால் மறுகணம் அதற்கான பணத்தையும் கொடுத்துவிடுவார். அவரின் மனம் பவளத்திடம் போய்விடவேண்டுமென்றே சிந்தித்துக் கொண்டிருந்தது. கடவுள் நம்பிக்கையும் அவருக்கு இல்லை. தனக்குத் தன் மனைவிதான் கடவுள் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வார். வினயனும் மற்றச் சகோதரர்களும் கதைக்கும்போது

“அம்மாதான் அப்பாவைக் கெடுத்துப் போட்டார்”

“ வீட்டிலை அப்பாவை சின்னக் குழந்தைமாதிரிக் கருதி தானே எல்லா வேலையையும் செய்து சந்தோசமாய்ப் போயிட்டா”

“ உண்மைதான். அப்பாக்குக் காசை விசிறத் தெரியும் வாங்கத் தெரியாது”

“ அப்படி ஆரிட்டையும் வாங்கினால் கௌரக் குறைச்சல் எண்டு நினைக்கிறார்”

“ எங்கடை குசினியுக்கை ரீ போடுறதுக்குக்கூடப் பயப்படுகிறார்”

“ அப்ப என்னதான் செய்யிறது”

“ அப்பாவை ஒரு காப்பகத்திலை சேர்த்துவிட்டால் தன்னோடொத்த ஆக்களோடை சந்தோசமாக இருப்பாரோ”

“ ஊரென்ன சொல்லும். நாங்கள் மூன்றுபேர் இருந்து கொண்டு அவரைக் கைவிட்ட மாதிரியெல்லே கதைக்கும்”

“ ஊருக்காக அப்பாவின்ரை சந்தோசத்தைக் குழப்பேலாது. கதைக்கிறவை கதைக்கட்டும்”

“ ஓம் எங்களுக்கு அப்பாவின்ரை சந்தோசம்தான் முக்கியம்”

இப்படித்தான் சகோதரர்கள் உரையாடினார்கள்.

மணிவாசகத்தார் நிரம்பக் குழப்பம் அடைந்திருந்தார்.

முதல்நாள் இரவு அவரின் மனைவி பவளம் கனவில் வந்து அழைத்ததுபோல் உணர்ந்து சாமத்தில் எழும்பிவிட்டார்.

அடுத்தநாள் பேரப்பிள்ளைகளுடன் கதைக்கும்போது

“நேற்று இரவு உங்கடை அப்பம்மா கனவிலைவந்து என்னைக் கூப்பிட்டா. நான் அவவிட்டைப் போகப்போறன்”

அவர்களுக்கு எதுவும் புரியவில்லை. இதனை குசினிக்குள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த விதுரா திடுக்கிட்டுப்போய் உடனே கணவனுக்குத் தொலைபேசி மூலம் செய்தி அனுப்பினாள். அவனும் பயந்துபோய் தன் சகோதரர்களுக்குச் செய்தி அனுப்பினான். எல்லோரும் உடனே வினயன் வீட்டுக்கு வந்தார்கள். வினயனும் வந்துவிட்டான். அவர்கள் அப்பாவின் அறைக்குச் சென்றபோது அறை உள்புறமாகப் பூட்டப்பட்டிருந்தது.

# இராம. பெருமாள் ஆச்சி கவிதை

கவிதை நூலைக்
கையிலெடுக்கிறேன்

வெளிச்சுவரருகே முணுமுணுக்கின்றன
மர இலைகள்..

இன்னிசைப்பாடலொன்றை
இசைக்கின்றது குயில்..

ஓவெனக் கூச்சலிடுகின்றனர்
விளையாடும் குழந்தைகள்..

காய்கறிகளின் பெயர்களை
கூவிச்செல்கின்றார் தள்ளுவண்டிக்காரர்.

அடுக்ககத்தின் கீழ்த் தளத்தில
எரிவாயு உருளையை உருட்டும் ஓசை

எதிர் வீட்டின் அழைப்பு மணியைக்
கதற விடுகின்றார் பூக்காரப்பெண்மணி..

அட்டைப்படத்திலிருக்கும் நவீன சித்திரம்
புருவ முடிச்சுகளில் புதிராகின்றது.

ஒலிப்பான் அலற ஓய்விடம் வரும்
மகிழுந்தைத் தவிர்க்கும் செவிகள்.

ஆழப்பெருமூச்சொன்றை
உள்ளிழுக்கத் தூண்டும் மசாலா மணம்..

திசை திருப்புதல் தவிர்த்துச் சில பக்கங்களில் விரைகின்றன விழிகள்..

வேடிக்கைகளின் வீரியத்தைக் குறைக்குமளவிற்குக் காரமில்லை..
வளமற்ற சொற்களின் வார்த்தைக் குழம்பு..

• சிறுகதை



# செவகாமி

• அழ. இரஜினிகாந்தன்

"அம்மே.."

கொட்டகைக்குள் இருந்தபடி ஆத்தாவை செவகாமி அப்படித்தான் அழைக்கும்.. பாவம்.. பசியோ தாகமோ எடுத்திருக்கும் போல..

"எலே.. சின்ராசு.. செவகாமி கத்துது பாருடே.. கொஞ்சம் நீச்சத்தண்ணியும் கம்பந்தவுடும் கலந்து வச்சுட்டு வாடே..ஆமா.. இந்த சின்ன சனியன் எங்கிட்டுடே ஒழிஞ்சது.." என்று கேட்டபடியே அடுப்படி ஓரமாக அமர்ந்து முருங்கைக் கீரை

கோம்புகளை ஆய்ந்து முறத்தில் போடத் தொடங்கினாள்.

திண்ணையில் இருந்து பாக்கு இடிக்கும் சத்தம் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

மறுபடியும் செவகாமி" அம்மே "எனக் குரல் கொடுத்தது.

" ஏத்தா.. செவகாமி.. கொஞ்சம் பொறுத்துக்கடீ ராசாத்தி.. இப்பம் அண்ணன் வந்துருவான்.." என்று அடுப்படியில் இருந்து சத்தமாக சொல்லிவிட்டு "இன்னுமாடே தவுடு பெசையுத.. போடா சீக்கிரம்.. செவகாமி கத்துது பாரு.." என்றாள்.

ஆத்தாவுக்கு அம்புட்டு பிரியம் செவகாமி மீது.. இருக்காதா பின்னே.. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி பெரும்புயலும் வெள்ளமுமாக ஊரே மிதந்து கொண்டிருந்தபோது.. கம்மாக்கரையோரமாக இருந்த கருவேல மரங்களுக்கிடையில் சிக்கிக்கொண்டு ஈனஸ்வரத்தில் முனகிக் கொண்டிருந்த செவகாமியை ஆத்தாதான் மார்பளவு தண்ணீரில் நீந்திப்போய் தூக்கி வந்தது. அன்றைக்கு ஆத்தா மார்பில் ஒண்டியதுதான்.. ஆத்தா எங்கே போனாலும் அவளது கொசுவத்தை நுகர்ந்தபடியே பின்னால் போகும்.. வயக்காட்டு வேலை முடிந்து ஆத்தா வீடு திரும்பும் போதெல்லாம் கைப்பிடி அளவு கடலைக் கொடியையோ கண்ணால முருங்கை இலையையோ அருகம்புல்லையோ ஆலங்கொத்தையோ கொண்டு வந்து செவகாமிக்குப் போட்டு அது மென்று தின்னும் அழகை இரசித்தபடியே உட்கார்ந்திருக்கும்.

"புள்ளைங்க கொலப்பட்டினியா கெடக்கு.. ஆட்டுக்குட்டிய கொஞ்சிக்கிட்டு இருக்கா பாருடே.. உம் பொஞ்சாதி.." எனப் பாட்டி வந்ததும் வராததுமாக அப்பாவிடம் போட்டுக்கொடுக்கும்.. அப்பா காதிலேயே வாங்கி கொள்ளாமல் உள்ளே போய்விடுவார்..

"அதிசயமான ஆடு வளக்கா ஆக்கங்கெட்ட கூவ.. சீமையிலே இல்லாத பேருவச்சு செறுக்கிமவ செறுக்கி.. செவகாமியாம் செவகாமி.. "எனத் தவடையைத் தோளில் இடித்தபடி பாட்டி சொல்லும் எதுகைக்கு "போன அடைமழைக்கே போயிருக்கணும்.. இன்னமும் படுத்துக்கிட்டு உசுர எடுக்கா.. சனிபுடிச்ச மூதி.. "என ஆத்தாவும் பதிலுக்கு மோனை படிக்கும்.

"எடுபட்ட செறுக்கிக்கு எட்டூரு வாயாம் யாருன்னு பார்த்தாக்கா எங்கூட்டு நாயாம்.." எனப் பாட்டி பாக்கு இடிக்கும் சாக்கில் பழமொழியை வைத்து சேர்த்து இடிக்கும்.

எப்போதாவது அருகில் வந்து நிற்கும் செவகாமியை ஊன்றுகோலால் வலிக்க ரெண்டு போடுபோடும்..கத்திக் கொண்டு ஓடும் செவகாமியைப் பார்த்து கண்களை சுருக்கி சிரிக்கும். ஆத்தாவையே அடித்துவிட்ட திருப்தி கெழவிக்கு.

"எலே.. செவல.. மலையப்பன் வூட்டு மாங்கண்ணைத் தின்னுடுச்சாம்.. மணியக்காரரு வூட்டு முருங்கை போத்தைக் கடிச்சிடுச்சாம்.. தெண்டம் கட்டச் சொல்லி இப்பத்தேன் நம்ம பெரிய கருப்பு சொல்லிட்டுப்போறான்.." எனப் பாட்டி பற்ற வைக்கும் போதெல்லாம் "அட.. சும்மா இருத்தா.. நீ வேற.. நான் பார்த்துக்கிடுதேன்.. "என்று அப்பா கெழவியை அதட்டி விட்டு போய்விடுவார்.

"அந்த செறுக்கி வச்ச மையில எம்புள்ள மூளப் பெசகிப் பேசுதான்.. ம்ம்ம்.. எம்புட்டு நாளைக்கிதான் எடுபடுவான்னு நானும் பாக்குதேன்.." எனப் பொறுமும் கெழவி.

"எழவெடுத்த ஆட்டால எப்பம் பாரு சண்டைலே.. தெண்டம் கட்டுன ரூவாய நெனச்சா திண்ட சோறும் செமிக்கல.." . என அப்பாவைப் பார்க்கும் போதெல்லாம்

ஏற்றிவிட்டுக்கொண்டே இருக்கும் கெழவி.

இது மாதிரியான சமயங்களில் எல்லாம் ஆத்தாவும் ரௌத்திரமாகி புளிய மிலாற்றால் செவகாமியைப் பின்னிவிடுவாள்.. பிறகு பொழுது வரை அதைக் கட்டிக்கொண்டு அழுது கொண்டிருப்பாள்.

“ ஏண்டி.. வாயில்லா சீவனை போட்டு கொல்லுத.. உனக்கு புத்தி கித்தி பெசகிப்போச்சுதா..” என அப்பாவும் செவகாமிக்குப் பரிந்து பேசுவார். பாட்டிக்காரிக்கு இதையெல்லாம் பார்த்து பற்றிக்கொண்டு வரும்.

பாட்டி சொன்ன எதற்கும் மசியாத அப்பாதான் தீவாளிக்கு முதல் நாள் செவகாமியை விற்பதற்கு பேசி முடித்து அச்சாரப்பணத்தோடு வந்து நின்று ஆத்தாவிடம் சொன்னார்” வேற வழியில்லடே.. விடிஞ்சா தீவாளி.. புள்ளைகளுக்கு போட்டுக்க புதுத்துணி எடுக்கணும். பய பட்டாசு கேக்கான்.. பெரியக்காவுக்கும் சின்னக்காவுக்கும் தீவாளி சீரு கொடுத்து விடணும்.. ஆத்தாவுக்கும் ஒனக்கும் சீலத்துணி எடுக்கணும்.. எல்லாப்பயலுவகிட்டேயும் கேட்டுப்பாத்துட்டேன்.. ஒரு பயலும் அசையல.. வச்சுக்கிட்டே இல்லேங்குதானுவோ.. அதாம்ல வித்துடலான்னு முடிவு பண்ணிட்டேன்..“

பொறுமையா கேட்டுக்கிட்டு இருந்த ஆத்தாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

“ ஏய்யா.. எலும்பு கூட முத்தாத பச்சக்குருத்துலா எம்புள்ள.. ஈத்த வடியுறதப் பார்த்துமா ஒனக்கு வெளங்கலை.. அப்படி என்ன தீவாளிக்கு பீத்திங்க வேண்டியிருக்கு.. ஓத்தாளுக்கு கருமாதி பண்ண புள்ளத்தாச்சி புள்ளைய பொலி போடுவியாலே.. போலே அப்பால.. எம்புள்ளய விக்கறதுக்கு ஒருக்காலும் நா சம்மதிக்க மாட்டேன்.. அப்படி வித்தீன்னா எம் பொணத்தைத்தான் நீ பார்க்க வேண்டி இருக்கும்.. “என்று கத்தினாள்.

அப்பா செய்வதறியாது கைகளைப் பிசைந்த படி நின்றார்.

“ வெறும்பயக் குடும்பத்துல பொறந்த வெளக்குமாறு வெள்ளித்தாம்பாளத்துலதான் பேலுவேன்னுச்சாம்.. வக்கத்த பயலுக்கு பொறந்ததுக்கெல்லாம் வாய் மட்டும் நீளுமாம் காதுவரைக்கும்.. “எனத் தன்பங்குக்கு ஆரம்பித்தாள் கெழவி. ஆத்தாவின்

குடும்ப மானத்தையே கொத்துக்கறி போட்டு கொக்கியில் தொங்கவிட்டாள்.

“மூளி மூதேவி எல்லாம் மூலையில கெடக்கா.. சீமையைப் பார்த்து எங்கூட்டு சீதேவி போவுதே.. “எனத் தலையில் அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள் ஆத்தா.

“சும்மா கத்தாதடே.. என்ன பண்ண சொல்லுதே.. வய வரப்பெல்லாம் காஞ்சு கெடக்கு.. சம்பாரிச்ச காசெல்லாம் ஒரத்துக்கும் மோட்டாரு தண்ணிக்கும் செலவாகிப்போச்சு.. இடுப்புக் கோவணந்தேன் மிச்சமுன்னுட்டு கெடக்கேன்.. பொத்திக்கிட்டு போவியா.. பொலம்புறவோ.. பொசக்கெட்ட செறுக்கி..” என எகிறினார் அப்பா.

“ம்ம்ம்.. எல்லாம் என் தலைவிதி.. வக்கத்தவனுக்கு வாக்கப்பட்டா வெக்கத்த வித்துப்புட்டு வேசியாதேன் திரியணும் போல.. “என அப்பாவின் தன்மானத்துக்கு ஆத்தா ஆப்படிக்க..

சட்டென்று பாய்ந்து வந்து ஆத்தாவின் தலைமுடியைப் பற்றி மாறி மாறி செவிட்டில் அறைந்தார் எட்டி உதைத்து சுவற்றோடு தள்ளினார்.. உதடு கிழிந்து இரத்தம் வந்த பிறகு

தான் அடிப்பதை நிறுத்தினார்.. பாக்கு இடிக்கும் சத்தமும் பட்டென நின்றது. வரமறுத்துக் கதறிய செவகாமியைத் தரதரவென இழுத்துப்போனார்.

“விடியும் வரை அப்படியே கிடந்தாள் ஆத்தா.

“எம்புட்டுக்குலே போச்சுது அந்த எளவு..? “என்ற கெழவியின் குரல் கேட்டபிறகுதான் ஆத்தா எழுந்து அமர்ந்தாள்.

“நேத்து ஒரு வெலயச் சொன்னான் இன்னிக்கு மாத்திப்பேசுதான்.. அந்த பரமன். போடா. மயிராண்டின்னுட்டு ஏழுக்குக் கேட்ட நம்ம இப்ராகிம் பாய்கிட்டே கை மாத்திட்டேன் ஆத்தா.. இந்நேரம் சோலி முடிஞ்சிருக்கும்.. பெறவு ரெண்டு கிலோ கறி கொடுத்து விடறேன்னாரு..” என்ற அப்பா சொன்ன கடைசி வாக்கியத்தைக்கேட்டு” யாத்தீ.”. என மார்பில் அடித்தபடியே திட்டிக்கதவை எட்டி உதைத்து திறந்து வெளியே ஓடினாள் ஆத்தா..

வாசலில் நின்ற படியே” ஆத்தாளும் மவனும் நாசமா போயிடுவடே.. இந்தா பாருடே.. ஏஞ்செவகாமிக்கு மட்டும் ஏதாவது ஆச்சுதுன்னா புருசன் மாமியான்னு பார்க்க மாட்டேன்.. ரெண்டு பேத்தையும் அருவா மணையால வவுந்து புடுவேன்.. இப்படி ரோசங்கெட்ட பீத்திங்கறதுக்கு பதிலா இந்த இத்துப்போன செறுக்கியோட எங்கிட்டாவது போயி நாண்டுகிட்டு

சாவுடே... தூ.. “என உமிழ்ந்துவிட்டு

கைநிறைய மண்ணை அள்ளி தூற்றினாள்.. பிறகு” அய்யோ.. செவகாமி..ஏஞ்சாமீ.. . உனக்கு என்னாச்சோ.தெரியலையே... “என்று அலறியபடி ஓட ஆரம்பித்தாள்.

குறுமணலையும் சாம்பலையும் சாணைக்கல்லில் கொட்டி கத்தியைக் கூர் தீட்டிக்கொண்டிருந்தார் இப்ராகிம் பாய். கால்கள் பிணைக்கப்பட்டு கத்திக் கத்தி ஓய்ந்துபோய் மலங்க மலங்க விழித்தபடி கிடந்த செவகாமியை ஓரக்கண்ணால் பார்த்தபடியே பக்கத்தில் நின்று கொண்டு இருந்த கரீம் பாயிடம் சொல்லிக் கொண்டிருந்தார் “நல்லா கொழுத்த அயிட்டம்டே.. பத்துப் பன்னிரண்டாவது தேறும்.. தீவாளி செவலைக்கு இல்லடே.. நமக்கு..”!

வயல்வரப்புகளில் எல்லாம் தடுக்கி விழுந்தபடி அசுர வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தாள் ஆத்தா.. நழுவும் கால்சராயை இழுத்துப் பிடித்தபடி கூடவே நாங்களும்..

உயர்த்திப் பிடித்த கத்தியோடு மண்டியிட்டு அமர்ந்து ஆகாயம் நோக்கிய இப்ராகிம் பாயின் உதடுகளில் அறுப்பதற்கு முன்பான வேண்டுதல்கள்.

கழுத்தில் கத்திவைக்கப்பட்ட கடைசி நேரத்தில் கேட்டது செவகாமிக்கு ஆத்தாவின் குரல்”ஏத்தா.. செவகாமி... என்னையப் பெத்தவளே....”

குரல் வந்த திசையைப் பார்க்க எத்தனித்து தலையை உயர்த்திய வேளையில்....

கரகரவென அறுத்துமுடித்திருந்தார் இப்ராகிம்.

உதைத்துக் கால் பரப்பி துடித்து அடங்கிய செவகாமியின் உறைந்த விழிகளில் எப்படியும் வந்து மீட்டுப்போவாள் ஆத்தா என்ற ஏக்கம் மட்டும் கண்ணீர்க் கோடாய் வழிந்தபடி இருந்தது.

# அ.லில்லி ஏஞ்சல் கவிதை

**(முத்தமிழ்) திருக்கோவிலூர்**



மௌனமே....
சொல்லப்படாத வார்த்தைகளில்தான்
புதைந்துள்ளது..அதீத பொருண்மைகள்....

மௌனங்கள்...
குத்திக்கிழிக்கும்
கூரியசொற்களுக்கு
சற்றும் சளைத்தவைகளல்ல....
சிலநேரங்களில்....

.ஆழ்மௌனமே....
.அழகியலை உணர்கிறது
சலனமற்ற
நடுக்கடலாய்......

யாருமற்ற தனிமையின் மௌனம்....
எண்ணக் கலவைகளால்
சித்திரங்களை...
வரைந்துவிடுகிறது....
மனஏடுகளில்.....

கொடூரனின்
மௌனம் சில நேரங்களில்
அடுத்துவரும் வஞ்சக
அரங்கேற்றங்களுக்கு
ஒத்திகை பார்த்துவிடுகிறது....!

நம் இருவரின்
மௌனமொழிகளை மட்டும்
விழிகள் ...சட்டெனவே
மொழிபெயர்த்து விடுகின்றன.....

புத்தனின் மௌனம் மட்டுமே....
இன்றுவரை
நிர்வாணமாய்.....



# பெரியமனசுக்காரன்

● கவிச்சிகரம் அ.முத்துவிஜயன்

பிச்சைமுத்துபொண்டாட்டிய நேத்து ராத்திரிலைருந்து காணோம். ஊரே தெறண்டு அவன் வீட்டுலதானிருந்தது துக்கமா ஏம்பா ஏதாவது சொல்லிட்டுஇருந்தாளா ந்னு விசாரிச்சிக்கிட்டு இருந்தாக. அவ அம்மாவீட்டுக்கு ஆள் போய்விசாரிச்சிட்டு வந்தாச்சு.

அங்குணக்குள்ள வரலயாம். அவுக அம்மாபொலம்ப ஆரம்பிச்சிட்டா என்னமோ ஏதோன்னு ஆனா ஆருக்கும் தெரியல, என்ன ஆச்சுன்னு. பிச்சமுத்து பொண்டாட்டி சரசு மாநிறம்தான் ஆனா பாக்குறமாதிரி இருப்பா, எதித்தாப்புல போறவுக ஒருதடவ திரும்பிப்பாக்குற லச்சணம். ஆனா பிச்சமுத்து கொஞ்சம் சுமார்தான் நோஞ்சானா இருப்பான். ரெண்டு ஆம்பள புள்ளைங்க அவுகளுக்கு லச்சணமா, எப்பப் பாத்தாலும் சண்டதான் ரெண்டுபேருக்கும். அடிக்கடிகோவிச்சிக்கிட்டு அம்மா ஊருக்குப்போய்டுவா. இவந்தான் கிடந்து பொலம்பிட்டுகிடப்பான் அப்புறமாபோய் கைல கால்ல விழுந்து கூட்டியாருவான்

அதுல ரெண்டுபொம்பளைக சொன்னாக மேலத்தெரு கணேசன் கூட அங்கங்க பேசிகிட்டு இருப்பான்னு. அதையும் போய் ரெண்டுபேரு அவன் இருக்கானான்னு. பாத்துட்டு வந்துசொன்னாக ரகசியமா அவனையும்காணாம்னு.எல்லாரும் குசு

குசுன்னுபேசிகிட்டாக அவனோட போயிருக்கலாம்னு.

ஆனா பச்சமுத்து சொல்லிக்கிட்டு இருந்தான் அவ அப்படியில்லன்னு. ஆனா யாருக்கும் உறுதியாத்தெரியல கணேசன் வீட்டுலகேட்டா. அவன் பழனிக்கு மொட்டபோடப்போயிருகிறதா சொன்னாக. ஆனா தனியாப்போயிருக்கவே சந்தேகம் .

அன்னிக்கிப்பொழுதுசாயிறவரஒன்னும் துப்புக்கிடைக்கல ஆறுதல்சொல்லிட்டு தூங்கப்போயிட்டாகபச்சமுத்துமட்டும் தூங்காம தெருவையே பாத்துக்கிட்டு இருந்தான் பிள்ளைகளை மடில போட்டுக்கிட்டு பொலம்பிட்டு இருந்தான்.

போறப்ப ஒருத்திசொல்லிட்டுப்போனா இந்தபுள்ளங்கள எப்புடித்தான் விட்டுட்டுப்போறதுக்கு மனசு வந்துச்சோன்னு பக்கத்து வீட்டு அமுதாக்கா புள்ளைகளுக்குசாப்பாடுகுடுத்துச்சு. அவன் கண்ணீரோட அக்கா உங்களுக்கு நல்ல மனசுன்னான்.

காலையில கணேசன் மொட்டை போட்டுவந்திருந்தான் எல்லாருக்கும் பஞ் சாமிர்தமும் துண்ணூரும் குடுத்தான்.பழனிக்குப்போயிருந்தேன் திடீருண்ணு கிளம்புனதுனாலஆர்கிட்டயும் சொல்லிட்டுப்போகமுடியல அந்தப்புள்ளையகாணாமா பாவம் இப்புடியா புள்ளைங்களை விட்டுட்டுபோவான்னு ஆறுதல் சொன்னான்.

இப்போ எல்லாரும் கொழம்பிட்டாக . ஒன்னும் புரியலஇதுக்குநடுவுல நேத்து டவுனுக்குள்ள அவளப்பாத்ததக சின்னச்சாமி சொன்னாரு அந்தபுள்ளமாதிரிதான் இருந்துச்சுன்னு.ஒருவாரமாயிபோச்சு ஒன்னும் துப்புக்கிடைக்கல.

அன்னிக்கி வெள்ளிக்கிழம சேவாசங்கத்து ஆளு ஒருத்தர் பிச்சமுத்து வீடுதேடிவந்தாரு சரஸ்வதி வீடெங்க இருக்குன்னு திரும்ப ஊரு கூடிருச்சு என்னா விசயம்ன்னுசரஸ்வதி பெரியாஸ்பத்திரில இருக்கா தலையில அடிபட்டு நிதானமில்லாம இருந்தா இன்னிக்கி கண்ணு முழிச்சவன்ன அய்யோ எம்புள்ளகள எங்கன்னா அப்புறம் நிதானமா விசாரிச்சப்போ வெவரம் சொல்லிருக்கா... அதான் தகவல் சொல்ல வந்தேன்னார்

எல்ல்லாருக்கும் ஏதோபுரிஞ்சமாதிரியும்புரியாதமாதிரியும் இருந்துச்சு அவருகூட பிச்சமுத்துவும் புள்ளைங்களைக்கூட்டிட்டுபாக்கப்போனான் அமுதாக்க செலவுக்கு இருக்கட்டுனு காசகைல திணிச்சுவிட்டா கூட ஆறுமுகமும் தொணைக்கிபோனான்பெரியாசுப்பத்திரில படுத்திருந்தா சரசு புள்ளங்களைகண்டதும் கண்ணீர்வழிஞ்சது அவ கண்ணுல

எப்படியாச்சுன்னு கேட்டான்தெரியல கம்மாக்கரையில ஆரோ மண்டையில அடிச்சமாதிரிஇருந்துச்சு முளிச்சிப்பாத்தா இங்க இருக்கேன்னாரவுண்டுக்குவந்தடாக்குட் டருஇவனத்தனியாக்கூட்டிடுப்போனார்அவங்களை மண்டையில காயப்படுத்தி மயக்கமாக்கி செய்யக்கூடாததை ஒன்னுக்கு மேல் பட்டோர் செஞ்சிருக்காங்க கேஸ் குடுக்குறீங்களா ந்னு கேட்டார் இவனக் கேட்டார்.

அவளுக்கு அது தெரியுமான்னு டாக்குட்டரு தெரியாதுன்னார். எனக்கும் அது தெரியாத விசயமாகவே இருக்கட்டும்னான். சரசுகேட்டா டாக்குட்டரு என்னசொன்னார்னு இவன் சொன்னான். சீக்கிரம் சரியாயிடுமாம் உன்ன நல்லாப்பாத்துக்க சொன்னாருன்னு சொல்லும்போது அவன்கண்ணுல இருந்து கண்ணீர் வழிஞ்சிச்சு. மாமா கவலைப்படாத நான் சரியாயிடுவேன்னா பிள்ளைங்கள அணைச்சிக்கிட்டு கண்ணீருடன்.......... அப்ப அவகண்ணுலயும் நீர் வழிஞ்சது.........



# ஆமினா

● கவிஜி

**2**0 வருடங்களுக்குப் பிறகு ஆமினா அதே புன்னகையோடு தடவி தடவி சோறு போட நானும் பழனிசாமியும் அடுத்தடுத்து அமர்ந்து சாப்பிட்டோம்.

"ஒரு கல்யாணத்த பண்ணிக்கலாம்லண்ணே...!?" அக்கறையோடு விசாரித்த ஆமினா முகத்தில்... அன்பும் அமைதியும்...... கொஞ்சம் கூட மங்காத அதே புன்னகையும்.

ஆனால் முகம் நிறைந்த வருத்தம்.

“எங்கம்மா....! சினிமா சினிமான்னு அலைஞ்சு......எல்லாம் போச்சு... வயசும் போச்சு... இனி எங்க...” கவலையைக் கவள சோற்றில் விழுங்கினேன். அமைதியாய் சாப்பிட்டுக் கொண்டிருந்த பழனிச்சாமியின் கண்களில் இனம் புரியாத நடுக்கம்.

சாப்பிட்ட கையோடு வாசல் திண்ணையில் அமர்ந்தோம்.

“எனக்கு தூக்கம் வருது.. நீங்க பேசிட்டு வந்து படுங்க...” - சொல்லிக்கொண்டே உள் அறைக்கு சென்ற அமீனா பாய் விரித்து படுத்துக் கொண்டாள்.

அவளை ஒருமுறை பார்த்து பெருமூச்சு விட்டபடியே......அர்த்தத்தோடு பார்த்தான் பழனிசாமி.

“என்னடா.......எதுக்கு வர சொன்ன....? எல்லாம் நல்லபடியாதான போயிட்டு இருக்கு....!” என்றேன்.

“ம்ம்ம்ம்.... என்னமோ உன்ன பாக்கனுமுன்னு தோணுச்சுடா.... அதான்...” சுவற்றில் ஒரு இயலாதவனின் உடல்மொழியில் சாய்ந்திருந்தான்.

“குழந்தை இல்லங்கறதெல்லாம் ஒரு விஷயமே இல்லடா.. இந்த வாழ்க்கையில் நாம எப்படி வாழ்ந்தோம்ங்கிறது தான் முக்கியம்....”

அவன் அமைதியாய் சூனியத்தை வெறித்திருந்தான்.

“என்ன பழச நினைச்சிகிட்டியா... என்ன செய்ய... தப்பு தான்... துரோகம் தான்...... உன் காதல் என் கண்ணையும் சேர்த்து மறைச்சிருச்சு...” உள்ளே வாசலைப் பார்த்துக் கொண்டே கிசுகிசுத்தேன். என் கண்களிலும் அதே நடுக்கம்.

இருவரின் கண்களும் வானத்தில் எங்கோ நிலை குத்தின. வட்ட வட்டமாய் நாங்கள் செய்த துரோகம் இருளில் நட்சத்திரங்கள் சிமிட்டின.

“லூசு மாதிரி உளறாதடா... அந்த ஆமினா புள்ள பேரழகி. சொல்றேன்னு தப்பா நினைக்காத.. உனக்கு செட் ஆகவே ஆகாது....”

தென்னை மரத்தில் தலையை முட்டிக் கொண்டு கதறிய பழனிசாமி... வாயில் ரத்தம் ஒழுக..... கண்களில் காதல் வழிய பேசியது இன்னும் கேட்கிறது.

“எம்பல்லு இப்டி தூக்கிட்டுருக்குன்னுதான அப்டி சொல்ற.. என் நிறம் அட்ட கருப்பு.....அதான. இந்த என் முன்நெத்தி கொரங்குக்கு மாதிரி நீட்டிட்டு இருக்கறதுனாலதான எல்லாம். பேசாம நான் செத்து போய்றேண்டா.....”

கீழே விழுந்து ஒரு சிறுவனைப் போல அழுது புரண்ட பழனிசாமியை தூக்கி.......கட்டிக் கொண்டு நானும் அழுதேன்.

“உனக்கு வேற பொண்ணு பாக்கலாம் பழனி.. சொன்னா கேளு.....அவ நம்மகூட பேச கூட மாட்டாடா..... உலக அழகி போட்டிக்கு போனானா....ஜெயிச்சிருவாடா.... அவ்ளோ தகதகப்பு..... அவளோ மினுமினுப்புடா அந்த புள்ள...... ஆமினாவெல்லாம் நமக்கு வேண்டாம் பழனி....”

பாட்டிலை அரைத்துக் கொண்டிருந்த அதிகாலையில் கையும் காதலுமாக பிடித்தேன். கொஞ்சம் விட்டிருந்தால்..... குடித்து செத்திருப்பான்.

“என்ன பண்ணலாம்...?”

அன்று முழுக்க மேட்டாங்காட்டில்... மேற்கு தோட்டத்தில்.. கிணற்று மேட்டில்... சினிமா தியேட்டர் பின்புறம் என்று யோசித்துக் கொண்டே நடந்தேன். கூட நடந்த அவனுக்கு யோசனை முழுக்க ஆமினாவாகவே இருந்தது.

யோசனையை சொல்லவும்.. முதலில்... அதிர்ந்தான். அதற்கும் அழுதான். அவன் உடல் அவனை விட்டு தனியாக துடிப்பது போல... அப்படி ஒரு ஒப்பாரி.

“கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசைன்னா ஒன்னும் பண்ண முடியாது பழனி...” என்றேன்...அப்படியாவது வேண்டாம் என்பான் என்று.

அவன் ‘சரி’ என்றான். கண்களில் பிசாசு மிளிர “செய்யலாம்“ என்றான்.

அதே பாட்டில் கண்ணாடியை உடைத்து அரைத்து... சுடு சுண்ணாம்பில் கலந்து காத்திருந்தோம். டியூசன் விட்டு பெரிய தோப்பு வழியாக வந்த ஆமினாவை முகம் மூடி உடல் முழுக்க கருப்பு துணியை போர்த்தியிருந்த நான் வழி மறித்து....சைக்கிளைத் தள்ளி கீழே சரித்தேன். நொடியில்.. அதே போல முகத்தோடு மூடிய கருப்பு அங்கியில்...ஓடி வந்த பழனி அவளின் கைகளை பின்னால் வளைத்து முதுகோடு அழுத்திப் பிடிக்க.... ஒரு கையால் பின்னாலிருந்து அவள் கழுத்தை தரையோடு அழுத்திக் கொண்டு...கால்களை ஆட்டுக்கால்கள் போல தரையில் கிறுக்கிக் கொண்டே அவள் கத்த கத்தவே....... துணி சுற்றி கண்ணாடி சுண்ணாம்பு கலவை முக்கி எடுத்த வலது கையை அவள் கண்களில் தேய்த்தேன். அவள் சத்தமே வராமல் கத்தினாள். மேலே சென்ற மூச்சு வலியில் கீழிறங்க மறுத்து திணறியது. இடுப்புடைந்த பாம்பை போல நெளிந்து துள்ளினாள். விட்டு விட்டு ஓடி ஒளிந்து கொண்டோம். சில நொடிகளில் தொண்டை அறுத்துக் கொண்டு வெளியேறிய சத்தம் கேட்டு தோப்புக்குள் இருந்து இருவர் ஓடி வந்து என்ன ஏதென்று தடுமாறி தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள்.

ஒன்றரை வருடங்களுக்கு பின்....

மெல்ல ஆமினாவின் குடிகார அப்பாவிடம் பெண் கேட்கும் சமாச்சாரத்தை எடுத்தான் பழனிசாமி.

என்ன தான் கோட்டருக்கு அடிமையானாலும்.. இப்படி ஒருவனுக்கு எப்படி......! - கோட்டரையே வெறித்தார்.

“குருட்டு புள்ளைய இனி யாருண்ணே......கட்டிக்குவா.....இருந்த காசையெல்லாம் உயிரை காப்பாத்த செலவழிச்சிட்டடீங்க... பழனிக்கு நிலம் புலம் இருக்கு.. தென்னத்தோப்பு.. வாழை தோப்பு..... காடு வீடுன்னு... யோசிங்கண்ணே..... புள்ளை ஏற்கனவே செத்து பொழைச்சிருக்கு. மிச்ச வாழ்க்கையையாவது நல்லா வாழட்டும்...”

“கட்டி வைங்க..... நல்ல பார்த்துக்குவேன்....”

அவர் அழுதார்.

மூவருக்குமே கெட்ட போதை.

ஆமினாவிடம் மறுப்பும் இல்லை. விருப்பும் இல்லை.

“அட லவ் பண்றேன்னு சொல்லி பின்னால சுத்துனானுங்கள்ல....அதுல எவனோ ஒரு வேக்காட்டு பைய தான் இதை பண்ணிக்கணும்.. ஆனா யாருன்னு கண்டு பிடிக்க முடியலயே....” என்று போலீஸ் உள்பட ஊர் பெருசுங்க எல்லாம் பேசி பேசி ஒய்ந்தது.......இன்னும் காதில் கேட்க......பாதி பிணமாகவே மாறி இருந்த ஆமினாவுக்கு..... அப்பா சொல்வதை மறுக்க முடியவில்லை. தப்பாக இருந்தாலும்... மறுக்க முடியவில்லை. இனி என்ன இருக்கு.. சரி என்றாள்.

கல்யாணம் முடித்து வைத்த கையோடு.. ஊரை விட்டே கிளம்பி விட்டேன். ஒவ்வொரு நாளும் ஆமினாவை அத்தனை அருகே கண்ணில்லாமல் பார்க்க உள்ளே குத்தி குடைந்தது.

20 வருஷம் ஊர் பக்கம் இதற்காகவே தான் நான் வரவில்லை. என் கண்களில்... வழிந்த நீரை துடைத்து விட்ட பழனியின் கண்களிலும் கண்ணீர்.

“நல்லா பார்த்துக்கறல்ல...?” கேட்டேன்.

“சாமி மாதிரி பாத்துக்கறேன்... எது கேட்டாலும்... எது சொன்னாலும்.. மறு பேச்சு பேச மாட்டேன்...” என்றான்.

தலை குனிந்து குலுங்கி சத்தம் வராமல் அழுத என்னை.....’ சரி.. சரி..... வா.....வந்து படு...... காலைல பேசிக்கலாம்“ என்று அழைத்து சென்று ஹாலில் படுக்க வைத்து விட்டு அவனும் அருகே படுத்துக் கொண்டான்.

அசையாமல் படுத்திருந்தாலும்.... தூக்கம் வராத மனம் புரண்டு கொண்டே இருந்தது. இங்கு வந்திருக்க கூடாதோ.. எத்தனை அழகான கண்களைக் கொண்டவள் அமீனா. இப்படி ஒட்டையான கண்களில் ஒரு பிசாசின் முகத்தோடு அவள் இருப்பதை காண சகியவில்லை. எவ்ளோ பெரிய தப்பு இது. கண்கள் மூடி மனம் புலம்பிக் கொண்டிருக்கும் போதே..... என் தலை மீது எதுவோ கனமாக விழுந்தது.

உடலை அசைக்க முடியாத சூட்டில் உலகமே இருளடைந்து போல இருந்த கணத்தில்... தலைலிருந்து வழிந்த சூடான ரத்தம் என் கண்களில் நிறைந்து கன்னம் நடுங்க சொட்டிக் கொண்டிருந்தது..

இடது பக்கம் நடுக்கத்தோடு நகர்ந்த கண் அருகில் முட்டி போட்டு பிரார்த்தனை செய்பவன் போல.....”என்ன மன்னிச்சுடு மச்சான்.... போன வாரம்.. குடிபோதைல உளறிட்டேன்... அவ உன்ன கொல்லணும்னு சொன்னாடா......... தட்ட முடியல” என்று தரையில் தலையை முட்டி முட்டி சொல்லி சத்தமே வராமல் கத்தி அழுது கொண்டிருந்தான்... பழனிசாமி.

மீண்டும் தட்டுத் தடுமாறி என் கழுத்தோரம் சொதசொதவென கிடந்த அம்மிக் கல்லைத் தூக்கி.......இன்னொரு முறை என் தலையில் போட்டாள் எனக்கு மேலே கால் அகற்றி கடவுளைப் போல நின்றிருந்த ஆமினா.

அதன் பிறகு பழனி அழும் சத்தம் மட்டுமல்ல... நான் உள்ளுக்குள் புலம்பும் சத்தமும் கேட்கவில்லை.

● கனகசபாபதி செல்வநேசன்
அல்வாய்

# காத்து நிற்கிறேன்

விடியல் வானத்தில்
வண்ணத் தூரிகையின் துன்புறுத்தல்
சிதைவுகளின் ரத்தத்துளிகள்.

தொடரிப் பயணத்தில் நகரும்
மரங்களில்
போதி மரங்களும் நிதானமிழக்கிறது
சன்னலை மூடிவிட்டு எதிரே
பார்க்கிறேன்.

காதல் அம்புகள் என்னைக் குறி
வைக்கின்றன
அன்பினி தோள் சுமந்த துப்பாக்கியில்
தாய் மண்ணின் துயர்
ஒதுங்கிக் கொள்கிறேன் நான்.

காதல் பிரிந்து கல்லறை மீதினில்
செங்காந்தள் செடியாய் வேரோடுகிறது
காற்றிலாடுகிறது ஏற்றிய தீபம்
சாவின் அனுபவம் விடுதலை
வேட்கையாய்.


தோல்விதனைத் தோலுரித்து
என் பகையைத் தீர்ப்பதாய்
தாய்நிலம் துறந்து அந்நிய தேசத்தில்
காத்திருக்கிறேன்
என் சாவின் விற்பனைக்காக.

● பூவன்னா சந்திரசேகர்

# நாற்காலியின் கதை

தனித்த ஓர் பிரபஞ்சத்தில்
தனியான ஓர் பூமியில்
செதுக்கினாற்போல் கிடக்கும்
தனியான ஓர் மலையில்
நிலைகுத்தி கிளைபரப்பி நிற்கும்
தனியான ஓர் மரத்திலிருந்து தான்
பாட்டி செத்த பின்
தனிமரமான தாத்தாவுக்கு
தனிமையிலிருக்க வேண்டி
ஓர் தனி நாற்காலி பரிசளிக்கப்பட்டது
அவர்...
அதிலே தான் உண்டார்
அதிலே தான் உறங்கினார்
முகம் புதைத்து முன்னூற்று இரண்டு
முறை
அதிலே தான் அழுதார்
பின்னொரு நாள்
அதிலே தான் இறந்தும் போனார்
அவரோடு சேர்த்து சிதைமூட்டிய
நாற்காலி
தனியொரு மரமான பின்
தனியான ஓர் பூப் பூத்து
தனியான கனியொன்று கனிந்து
கிடக்கிறது
கனி தந்த விதையினின்று
லட்சோப லட்சம் மரங்கள்
வியாபித்துக் காடாகிறது
இப்போது அவற்றிலிருந்து
கொஞ்சம் அதிகமாகவே
நாற்காலிகள் செய்யலாம்.

• சிறுகதை



# கிறுக்கனும் கிறுக்கியும்

• வெ.சீதாலெட்சுமிவெங்கட்

நீதான் நீ மட்டும் தான் என் உலகம். உன்னோட நான் வாழ்ந்த இந்த வாழ்க்கையில எனக்குன்னு நீ கொடுத்த உசந்த வசந்தம் நம்ம புள்ள யமுனா மட்டும் தான். என் உசுருல நீ கலந்த நொடியில இருந்து என்னை விட்டு நீ போன அந்த நிமிசம் வரைக்கும் நான் தான் இந்த உலகத்துல மகாராணி. இப்ப என் தலையில பூவாசமும் இல்ல. என் தேகம் முழுக்க உன் வாசமும் இல்ல. நம்ம யமுனாதான் என் உசுர இன்னமும் விடாம பிடிச்சுட்டு இருக்கா.. ஏன் மாமா நான் உனக்கு ஏத்த பொண்டாட்டியா இல்லையா மாமா??.. என்ன விட்டுட்டு ஏன் போன மாமா... சீக்கிரமா வந்துரு மாமா... முத்தங்கள் பல கோடி.. மாமா...."

லட்சுமியின் நாட்குறிப்பில் வழக்கம்போலவே குமாரின் நினைவுகளும் அவளின் ஆழ்மன எண்ணங்களும் பதிவு செய்யப்பட்டன..ஏகப்பட்ட குடும்பச் சிக்கல்களுடன் போராடி கையில் கிடைத்த வெற்றிதான் லட்சுமி குமாரின் திருமணம்.. கதிரவன் பட மலரும் செந்தாமரையாய் காதலின் பிடியிலும், தாம்பத்தியத்தின் மடியிலும் இவர்களின் இல்லற வாழ்வு மலர்ந்திருந்தது.

புகைப்படக் கிறுக்கனாக இருக்கும் குமாரின் போட்டோஃகிராபி தொழிலின் பொருட்டு அவ்வப் போது வெளியூர் செல்லும் சூழ்நிலை வரும். இப்பிரிவின் தாகமே "லட்சுமியின் நாட்குறிப்பு பதிவுகள்"..

வெளியூர் சென்ற குமாரின் அழைப்பிற்காக பாலைவன மணலாய் வானம் பார்த்து காத்திருந்தாள் லட்சுமி. மூன்று நாள் கழிய அலைபேசி அடித்தது. மடி நிறைந்த அவள் தள்ளாடிய நடையுடன் அலைபேசியை எடுத்து குறுநகைத்தாள்.

"ஏய் குண்டாத்தி என்னடி பன்ற.. எப்படி இருக்கடி"

"மாமா......"

"சொல்லுடி சாப்டியா ...பாப்பா என்ன பன்ற மிதிக்காலா..என்ன கேட்டாலா..?"

"மாமா..."

" என்னடி கோவமா..?? இங்க டவா; இல்லடி..அதான் கூப்ட முடில...நாளைக்கு வந்துருவேன்.. பத்திரமா இரு... என் புள்ளைய பாத்துக்கோ..."

"எங்க மாமா போன... சரி மாமா சீக்கிரம் வந்துரு...."

"அட கழுத ..சாப்டு.. எல்லோரையும் பாத்துக்கோ.."

" சரி மாமா...."

அழைப்பு நிம்மதியில் துண்டிக்கப்பட்டு தேடலில் நீண்டது...

விடியற்காலை 5.00 மணிக்கு குமாரின் கால்தடங்கள் லட்சுமியின் அருகில் வந்து நின்றது. திடுக்கிட்டு விழித்தவள்;;;;;;;;; கட்டி அணைத்து கதறி அழுதாள். குமாருக்கு நன்றாகத் தெரியும் இவளின் வரவேற்பு இதுதான் என்பது. இல்லறம் நல்லறமாகவே யமுனாவின் பிறப்புடன் மலா;ந்திருந்தது..

குமார் காதல் கடந்து லட்சியமான புகைப்படத் துறையில் தீவிரமாக கால் வைக்கத் தொடங்கினான். ஃபுல் ஃப்ரேம் , சட்டர் ஸ்பீடு , லென்ஸ் , ஆட்டோ ஃபோகஸ் என குமாரின் தொழில்ரீதியான வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியாத லட்சுமியின் உரையாடலை குமார் தவிர்த்தான். இதே சமயம் கலைத்துறையில் ஆர்வமுள்ள ரேவதியின் அறிமுகத்தையும், அவளுடனான சந்திப்புகளையும் அதிகரித்தான் குமார்.. காலம் செல்ல இருவரின் சந்திப்புகளும், எண்ணங்களும் திசைமாறின. லட்சுமியின் நாட்குறிப்பில் மட்டுமே காதல் நீண்டது.

மாடல் அழகியாக அறிமுகமான ரேவதியின் கலையறிவும், அவளின் வசீகரமான தோற்றமும் குமாரின் ஆண்மையை அடிபணிய வைத்தது. அவ்வப்போது செல்லும் வெளியூர் செல்லும் குமாரின் பணி நிரந்தரமாக வெளியூரிலேயே ரேவதியுடன் மாற்றியமைத்தான். இச்சூழலில் லட்சுமியின் அழைப்புகள் நிராகரிக்கப்பட்டன.. அவளின் தாபங்கள் தரிசாக்கபட்டன. ரேவதி குமாரின் செல்வத்திற்கும், இளமைக்கும் தனது பெண்மையை பரிசாக்கினாள். உள்ளூர வேசியாகி, வெளியில் கலையரசியாக தெரியும் ரேவதியின் விருப்பம் குமாரின் செல்வத்தில் மட்டுமே..

மூன்றாண்டு காலத்தில் மூன்று முறையே லட்சுமியை சந்தித்தான். இச்சந்திப்பில் குமாரின் வாழ்வில் வேறொரு பெண் இருப்பதை உணர்ந்தாள் அவள். ஆனால் மனம் விட்டு கேட்க முடியாதபடி மழலை யமுனாவின் எதிர்காலம் கண்முன் நின்றது. குமாரின்

பெற்றோர்களும் மகனின் வெளியூர் வாசத்தை வருமானத்தின் வாசல் என்று நினைத்திருந்தனா;.

மூன்றாண்டு காலம் ரேவதி;க்கு அடிமையாகி செல்வத்தைக் கரைத்தான் குமார். எண்ணெய் தீர்ந்து போக திரி கருகும் நிலையாய் குமார் மனம் , உடல், செல்வம் என அனைத்திலும் கருகிப்போனான். ரேவதியின் சுயநலம் உணர்ந்தான். ரேவதியை அவன் மனம் வெறுத்தது. அன்றிரவு லட்சுமியை நோக்கி மனம் பயணித்தது.

" உங்களுக்கு பிடிச்ச பொண்டாட்டியா என்னால இருக்க முடியல போல.. அதான் என்ன நீங்க விட்டுட்டு இருக்கீங்க. என்னவோ இப்பலாம் நான் உங்கள அதிகமா நேசிக்குறேன். ஏன் மாமா நான் நிசமாவே உனக்கு ஏத்தவ இல்லையா மாமா.. ?? என்கிட்ட வந்துரு மாமா... யமுனா அப்பா அப்பான்னு ரொம்ப கேட்க ஆரம்பிச்சுட்டா..என்னால சமாளிக்க முடியல..மாமா.. நான் உங்க போட்டோஃகிராபி பத்தி இப்பலாம் நிறைய கத்துக்கிட்டேன் மாமா..கதை, கவிதை எழுதுறதலாம் விட்டுட்டேன் மாமா..சீக்கிரம் வா மாமா..." அழுகையுடன் லட்சுமியின் நாட்குறிப்பு நிறைந்து கொண்டிருக்க அலைபேசி ஒலித்தது.

"மாமா..."

"நாளைக்கு மொத்தமா வீட்டுக்கு வந்துருவேன். உன்கிட்ட நெறையா பேசனும்..என்ன மன்னிச்சுருடி.."

"ம்ம்ம்ம்ம்..." அழைப்பு துண்டிக்கப்பட்டது.

வெகு நாட்களுக்குப் பின் மொத்தமாக இருவருக்கும் விடிந்த பொழுது அது.. நிலைகுலைந்து வருகை தந்த குமாரின் கால்தடங்கள் கண்டும் காணாமல் லட்சுமி விழித்திருந்தாள்..அள்ளி அணைத்து வரவேற்கும் லட்சுமியின் வரவேற்பு அன்று குமாரின் வரவேற்பானது. லட்சுமியை கட்டி அணைத்து விழி திறவாமல் ரேவதியுடனான மூன்றாண்டு நாடகத்தை லட்சுமியிடம் அரங்கேற்றினான் குமார். கணவனின் அழுகையையும், அரவணைப்பையும் ஏதும் சொல்லாமல் ஏற்றுக் கொண்டாள் லட்சுமி..

இறுக்கி அணைத்த இருவரின் அணைப்பும் இதழில் தொடங்கி,, இமை மூடி கூடலில் முடிய சம்மதித்து குமாருடன் சங்கமித்தாள் லட்சுமி.. லட்சுமியின் மோகநதியில் மன்னிப்பு பெற்றான் குமார். தனிமையில் அழுத லட்சுமியின் ஒட்டு மொத்த இரவுகளும் அன்று பகலில் அர்த்தம் கண்டன.. லட்சுமி தழுதழுத்த குரலில் பேசத் தொடங்கினாள்..

"எத்தன ஜென்மம் ஆனாலும் நீதான் என் மாமா.. ரேவதி பத்தி இனி எதுவும் பேசாத மாமா.. அடுத்த ஜென்மத்துலயாவது நீ எனக்கு மட்டும்னு இருந்துரு மாமா......அப்பவாது நான் உனக்கு பிடிச்ச பொண்டாட்டியா இருக்கேன் மாமா.... எனக்கு இப்ப போட்டோ எடுக்கலாம் தெரியும் மாமா.." கதறி அழுது தன் மன்னிப்பையும்,, காதலையும் வெளிப்படுதினாள் லட்சுமி..

இருவரும் ஆழ்ந்த மௌனத்தில் நிலைத்திருந்தனா;. மௌனத்தை தூக்கி எரியும் ஆயுதம் அழுத்தமாக வந்து குமாரைக் கட்டி அணைத்து "அப்பா நான் தான் எங்க ஸ்கூல்ல பாட்டுப்போட்டில ஃபர்ஸ்ட்" என்று கத்தினாள்.. மௌனமாக குமாரின் விழி பார்த்து சிரித்தாள் லட்சுமி. இருவரையும் தன் மார்போடு சேர்த்துக் கொண்டு மனதில் " நீங்க தான் என் உலகம்... என்ன மன்னிச்சுருங்க இரண்டுபேரும்" அழுத்தமாக சொன்னான் குமார்.

● சாந்தக்கண்ணா

# இருக்கவிடு

உன்னைப்போல நானில்லையென
எள்ளி நகைக்கும்
என்னுயிர்த் தோழனே!

என்னைபோல ஏன் நீயில்லையென்று
என்றாவது நினைத்தாயா?

தேடலும்,தெரிவும்,
அறிவும்,ஆளுமையும் ஆளுக்காள்
வேறுபடும்

உன்னிடத்தில் உள்ள
நிறை என்னிடத்தில் இல்லையென்றால்
என் நிறையில் ஏதோவொன்று
உன்னிடமும் குறைதானே!

நிறைகுடமென நிதம் தற்பெருமை
பேசுவதும் தடுமாறித் தளம்புவதன்
அடையாளம், அறிவாயா?

நீக்கமற நிறைந்தவனாய் நின்னை
நினைப்பவனே!

உன் முகத்தை என் அகத்தில் ஒட்டும்
முனைப்பதை நிறுத்து!

நீ...நீயாகவேயிரு...!

என்னையும் நானாக இருக்கவிடு....!

# முத்துலெஷ்மி கவிதைகள்

வாடகை வீட்டுக்காரன்
சொந்த வீட்டை இடிக்கிறான்
சிலந்தி வலை.

சுதந்திரம் வாங்கி
தந்ததிற்காக காந்தி
முகத்தில் தின்மும்
பூசுகிறோம் கரி
தபால் தலை

வீட்டில் சண்டை
விபரம் அறியாத காக்கா
வழக்கம் போல் கரைகிறது
ஜன்னல் ஒரத்தில்

ஆங்கிலம் பேசாததிற்கு
அடிவாங்கிய குழந்தை
அழுதது
"அம்மா" என்று



# இனியவன் காளிதாஸ் கவிதை

எனக்குத் தெரியும்
நீ என் நிறுத்தத்தைத் தாண்டி
சென்று கொண்டிருக்கிறாய்...

எனக்குத் தெரியும்
நீ என்னைக் கவனித்தும்
கவனியாதது போல்
கடந்து செல்கிறாய்...

எனக்குத் தெரியும்
இப்போதெல்லாம் உன் தேடல்கள் எனைவிடுத்து
எங்கோ நிலைக்கின்றன...

எனக்குத் தெரியும்
உன் பயணங்களில் எனைவிட
இன்னுமுனக்கு
நல் அனுவங்கள்
வாய்த்திடலாம்...

எனக்குத் தெரியும்
இன்னும்
உன் பாதையின்
நீளம் கூடிக்கொண்டே போகலாம்...

எனக்குத் தெரியும்
என்றோ ஒருநாள்
உன் பயணத்தின் சுவாரஸ்யங்களில் கரைந்து
நீ எனை மறந்தும் போகலாம்...

எல்லாம் அறிந்தும்
என்றேனும் ஒருநாள்
எனைக் காண வருவாய்
எனும் நம்பிக்கையோடு
காத்திருக்கும்
என்விரல் பிடித்த
ஓர் ஒற்றை ரோஜாவில் தான்
படிந்து கிடக்கிறது
உலகத்தின் ஒட்டுமொத்த நேசம் நிறைந்த காதலும்.



• சிறுகதை

# கறுப்புச் சூரியனும் கறுத்த ஆடும்

• நவஜோதி ஜோகரட்னம்

மனிதன் தனிமையாக மகிழ முடியாது. மற்றவர்களோடு பேசி மகிழ்ந்து சிரிக்கும்போதுதான் மற்றவர்களுக்கும் அந்தச்சிரிப்புத் தொற்றி எல்லோரையும் மகிழச்செய்கின்றது.

ராஜி போன் செய்து கதைக்கத் தொடங்கும்போதே சிரிப்பு வந்துவிடும் புனிதாவுக்கு.

இந்தக் கொரோனா வந்ததும் போதும் எங்கட சனங்கள் விதம் விதமாகச் சமைக்கிறதும் சாப்பிடுகிறதும்தான் வேலை புனிதா.

ஏதோ ஒரு கூட்டத்தில் பேசப்போன முன்னைய பிரபல நடிகர் எம்ஆர்.ராதா அவர்கள்; 'ஏண்டா டே ஏண்டா கத்துறிங்கள்' என்றுதான் பேச்சை ஆரம்பித்தாராம் சனங்களைப் பார்த்து வணக்கம் கிணக்கம் எதுவுமே கிடையாதாம்; என்று அவரது குரல் மாதிரியே பாவனை செய்துகாட்டிப் பேசியவரைக் கேட்டு மகிழ்ந்தது போலத்தானிருக்கும் ராஜியின் கதைகள்;; புனிதாவுக்கு. அதே தோரணையில்தான்; ராஜியும் பேச்சை ஆரம்பிப்பாள். அவள் கதைக்கிற விதத்தில் 'படா'ரென்று சிரிப்பு வந்துவிடும்;.

எங்கட வீட்டிலும் இதுதான் எனக்கு வேலையாகக்கிடக்குப் புனிதா. ஆனால் வெளிநாடுகளிலிருந்து வந்த சில சனங்கள் இந்தக் கொரோனாக் காலத்தில வேலைக்கும் போக முடியாமல், இந்தப் பயலுகள் சட்டங்களையும் அடிக்கடி மாத்தி, வேலையையும் இழந்து சரியாகக் கஷ்டப்படுகுதுகள். தெரியுமே? செய்திகள் பார்த்தனியே புனிதா?

புனிதா சிரித்துக்கொண்டாள். 'தகவல்சாலை' என்ற தமிழ் நிகழ்ச்சி வீட்டிலை இருந்து ஒளி பரப்புவதாலை எனக்குத் தெரியாமலிருக்குமா ராஜி? பிபிசியும், பிரான்ஸ்24 உம் தவறாமல் பார்க்கிறனான். நல்ல சமுதாயப் பத்திரமாக்கியும்; பார்த்துக்கொள்வேன். வார்த்தைகளுக்குள் வாழ்க்கையை வைப்பதுதானே பேச்சு ராஜி. இப்படித்தான் அந்த நிகழ்ச்சிகளையும் நெழிந்து சுழிந்து போறதை கொஞ்சம்; ரசிக்கிறனான் ராஜி.

கொரோனாவுக்குப்பிறகு ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் ஆளுக்கொரு ஒலி, ஒளி

பரப்புக்கள் ஷ{முக்குள்ளால் தொடங்கி இப்போ எதைக் கேட்பது என்று தெரியவில்லை புனிதா.

நான் பார்க்கிறது லண்டனுக்கு வந்தகாலத்திலிருந்தே கேட்கிற தமிழ் ஒலிபரப்பு ராஜி. இதுதான் பிரித்தானியாவில் முதன் முதலாக ஆரம்பித்த தமிழ் ஊடகம் என்ற ஒரு குறிப்பு உண்டு..

அப்ப அந்த 'சண்றைசோ' புனிதா?

ஓமோம். இப்ப அது பெயர்கள் தமிழில மாற்றிக்கிடக்கு.

ஆனா இப்ப கொரோணா வந்ததும்போதும் வட்சப்பின்ர ஆக்கினை தாங்கேலாமல் கிடக்கு. உதுகளுக்கெல்லாம் விசர் புனிதா. தமிழ் பொம்பிளைகளின்ர படத்தை உடம்பு கூசுகிறமாதிரி போடுதுகள்;. ஐயோ நேற்று மலேசியாவில ஒரு தமிழ் பொம்பிளையைக் கொல்லுறமாதிரி... என்னால சொல்லமுடியாது நெஞ்சு நொருங்கி நடுங்கிப்போனேன். வட்சப்;பில வாறதுகளை அழிக்கவே கையெல்லாம் வலி எடுக்குது.

பொம்பிளைகளைப்பற்றிக் கேவலமாக வந்தால் உடனேயே அழித்துவிடுவேன். சிலவற்றை தெரிவு செய்து பார்க்கவேண்டும் ராஜி. பல நல்ல விடயங்களையும் அனுப்புகிறார்கள்தானே!

சும்மா கிட புனிதா.

ராஜி போன் செய்து புனிதாவுடன் கதைத்தால் சில வேளைகளில் முழுத்தரிப்புக் கிடையாது. தற்போது தான் வாழ்ந்துகொண்டிருக்கிற லண்டன் தமிழ் மக்களின்ர புதினங்கள் அது இது என்று பலதும் பேசி மகிழும் ராஜி, மறக்காமல்; தான் வாழ்ந்த கிராமத்தைப்; பற்றியும் சுவையாக ஒன்றைப்பற்றிச் சொல்லாமல் போன்; அமைதி பெறாது.

புனிதாவுக்கு சிரிப்பு பீறிட்டு வயிறு நோவெடுத்துவிடும்.

கொரோனா காலத்தின் மீளவும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் ஒரு புறம். காண்டீபக்குரல் கொண்ட பிரபலத்தின்; உயிர் இழப்போ மறு புறம். மூளை, உடம்பு, மனசு எல்லாம் சேர்ந்து மகிழ்ந்தால்த்தானே வாழ்வை அழகாக முன்னெடுக்கலாம். ஆனால்

ஐக்கிய ராச்சியத்தில் வேலைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் எல்லாம் ஆரம்பித்தாலும் சனங்கள் அச்சத்தோடுதான் திரியுதுகள் ராஜி. இந்தக் கொரோனோ காலத்தில் நோய் ஒருபுறம், சாவு ஒரு புறம், கஷ்டம் ஒரு புறம். அத்தோட சாப்பாடு இல்லாமல் முப்பத்திநாலு வயதுப் பெண்ணும் அவளின் ஒன்றரை வயதுக் குழந்தைப்பொடியனும் உயிர் பிரிந்து கிடந்ததுகளாம். எனக்கு நெஞ்சு வலிச்சுது ராஜி.

உண்மையாயோ புனிதா!

ஐயோ இதென்ன கொடுமை. எங்க பாத்தனி புனிதா? பசியால செத்ததுகளோ? பதறிப் போய் அங்கலாய்த்தாள் ராஜி.

பிபிசியில பார்த்தனான்.

ராஜி மிகவும் மனித நேசம் கொண்டவள். வெளிப்படையாக எதையும் கதைக்கும் சுபாவம் அவள் சொத்து. அதனால் புனிதாவின் இதயத்தில் அவள்மீது ஒரு தனி அன்பு.

அவள் தொடர்ந்தாள்...

ஏதோ சனங்களுக்குச் சாப்பாட்டுச்சாமான்கள் கொடுக்கிறமாதிரி உதவி செய்யிறது மாதிரி செய்தியில் காட்டினாங்கள்தானே புனிதா.

அதுவும் சிலர் செய்யினம்தான். எத்தனை நாளுக்குதான் செய்வினம் ராஜி?

அதுகள் அந்த 'மேர்சி பேகுமா' என்ற பொம்பிளையும் அவளின் குழந்தைப்பொடியனும் பசியால் சாகிறதுக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் தான் கொஞ்ச அரிசியும் சாமான்களும் கொடுத்ததாக பத்திரிகையில் போட்டிருக்கு.

என்ன பத்திரிகையில பாத்தனியோ புனிதா?

வேறே என்னத்தில பார்க்கிறது? இன்ரனெற்றில்தான் போட்டிருக்கு. படம் எல்லாம் உடனுக்குடன் இப்ழி;பா எடுக்கிறதும் ஊடகங்களில போடுறதும்தானே இப்ப நடக்குது? அதுவும் செத்தவர்களின் படங்களைப் போட்டால் பெரிய செய்திதானே!

ஐயோ தாயே! புனிதா அதுகள் எந்த நாட்டவர்கள் ?

உகண்டா நாட்டவர்களாம். அண்மைக் காலத்தில்த்தான் எங்ளைப்போல சிரமப்பட்டு தஞ்சம் கேட்டு வந்ததுகளாம். ஆதரவற்ற பொம்பிளையாம் ராஜி. அதோட அதுக்கு மொழிப்பிரச்சினையும் என்றால் என்ன செய்யிறது?

இதில என்ன புனிதா கறுப்பு வெள்ளை நிறம் இருக்கு. அதுகள் எங்களைப்போல மனிதப்பிறவிகள். அந்தத் தாயும் பிள்ளையும் ஆ.. ஐயோ.. இதென்ன வேதனை! இந்தத் தேசத்தில...எனக்குத் தெரிந்திருந்தால் நான் வீட்டில சமைக்கிறதுகளைக் கொண்டுபோய்க்; கொடுத்திருப்பேனே.

அந்தப் பொம்பிளை பாவம் ராஜி. ஐக்கியராச்சியச் சட்டப்படி வேலை செய்யிற அனுமதிப்பத்திரம் காலாவதியாகப் போயிட்டுது என்ற குற்றமாம். அதால அந்தப் பொம்பிளைக்கு வேலை செய்யிற உரிமை இல்லாமல் போச்சாம். இந்தக் கொரோனா வந்ததால அதுகள் எங்க வெளியிலயும் போகேலாது. வீட்டிற்குள் முடக்கினால் அதுகள் என்ன செய்யுங்கள்;? பசியால் சாப்பாடு இல்லாமல் அநியாயமாக அதுகளின்ர உயிர் போயிட்டுது. இந்தக் கொடுமை யாருக்கும் வரக்கூடாது ராஜி.

இதைக் கேட்க வெட்கமாயிருக்குப் புனிதா.

ஓம் ராஜி. ஒரு ஒழுங்கில்லாத அமைப்புகளின் செயல்களால் ஒரு இளம் தாயும் மகனும் உயிரிழந்துவிட்டுதுகள். அதுகளுக்கு கொரோனாத் தொற்று வந்திருந்தால் அது தாக்கிவிட்டது என்று செய்திகள் வந்திருக்கும். அதுக்குள்ள செய்திகளைச் சோடிச்சிருப்பினம்.

அதுகளின்ர ஆத்மாக்கள் சாந்தியடையட்டும்!

ஊடகங்கள் தங்களது பொய்த் துயரங்களைப் பரப்பாமல் இருக்கட்டும்! ராஜி கவலையோடு வெளிப்படுத்தினாள்.

சரியாகத்தான் கூறினீங்கள் ராஜி. மனிதருக்குக்; கவசமாக இருப்பது மனித நேசம். எத்தனையோ மனிதர்கள் இதனைச் செய்திருக்கிறார்கள், செய்கிறார்கள். மறைந்த பிரபல இசைக்கலைஞன்;; எஸ்.பியும் இந்த மனித நேசத்தினால்தான் உலகெல்லாம் இமயமாகக் காட்சிதருகின்றார். 'நாம் உயிரோடு இருக்கும்வரை யாரும் வெறுக்கக்கூடாது. நாம்

இறந்தபிறகு யாரும் மறக்கக் கூடாது' என்றல்லவா அந்த மகான் தனது இசையையும்; எமக்கு விட்டுச் சென்றிருக்கிறார் ராஜி.

அந்த வேதனையோ சொல்லமுடியாது புனிதா. அந்த மனுஷனின்ர மனித சேவையைப் பாலீர்த்து நான் கண்ணீர்விட்டேன் புனிதா! மனிஷரெண்டால் இப்பிடியெல்லோ இருக்கவேணும்.

ஓம் ராஜி என்னுடைய அம்மா நவமணியும் அவரின் பிரிவால் 'அழுதேன்' என்று கூறினார். 'மரணம் வாழ்க்கையின் ஒரு பகுதிதான். அதைப் புரிந்து அதைத் தாங்கும் பக்குவம் பெறவேண்டுமே ஒழிய, அதை ரசிக்க முடிவதில்லை. அதை ரசிக்கிறவர்கள்தான் அதைத் தாங்கமுடியாதவர்களாக அழுது புலம்புகின்றனர்' என்று ஜெயகாந்தன் சொன்னதெல்லோ இப்ப நினைவுக்கு வருகுது ராஜி.

இந்தக் கொரோனோவால் எத்தனை விதமாகின்றது சனங்களின் சோகங்கள்.

அது மாதிரித்தான் கொரோனாவில் சனங்களின் கஸ்டங்களைப் பார்த்த மன்சிஸ்டர் உதைபந்தாட்ட வீரரான மார்கஸ் ரஷ்ஃபோலீட் உதவ வந்திருக்கிறான். உணவுக் கஷ்டம் உள்ள குடும்பங்களுக்கும், மாணவர்களுக்கும் உணவுப் பொட்டலங்களும் உணவுகள் வழங்கும் திட்டங்களை முன்னெடுக்க வந்திருக்கிறது பெரிய செய்தியாகக் கதைக்கினம் ராஜி.

அதுவும் துன்பப்பட்டு வளர்ந்த பிள்ளையாக்கும் புனிதா.

சரியாச் சொன்னாய் ராஜி. ரஷ்ஃபோர்ட்டும் ஆதரவற்ற தாயோடு மட்டும் இருந்து வளர்ந்த பிள்ளையாம்;. அவனும் சின்னப் பையனாக இருந்தபோது வறுமையில் வாடியிருக்கிறான். சாப்பாட்டுக்கு மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறான். கைம்பெண்ணான அந்தத் தாயும் துன்பத்திற்கு மத்தியில் அவனை வளர்த்திருக்கிறார்.

அப்படியே புனிதா?

இப்ப அந்தப் பையன் என்னமாதிரி பெரிய விளையாட்டு வீரனாக வந்திட்டான் ராஜி. என்ர மகன் மாதிரித்தான் அவனுக்கு இருபத்திரண்டு வயதுதான்.

இப்போ கொரோனா காலத்தி;ன் கோடை விடுமுறை நாட்களில் வறுமையில் வாழும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச உணவு வவுச்சர்களை பெறுவதற்காகப் பிரச்சாரம் செய்திருக்கிறான்;. அப்படியான உதவிகள் செய்ய முடியாது என்று சொன்ன எங்கட பிரதமரையெல்லோ தலைகுனிய வைச்சிட்டான்.

அவன் ஒரு பொடியனாக இருந்து கொண்டு ஏழைகளுக்கு உதவ வந்தவுடன் இந்த அரசியல்வாதிகளுக்குப் பெரிய சவாலாகப் போயிட்டுது போல. பாத்தியே புனிதா? அந்தப் பிள்ளை தான் பட்ட கஷ்டத்தை உணர்ந்து தனது வருமானத்தை இப்படி ஒடுக்கப்பட்ட சனங்களுக்கு கொடுக்க முன்வந்திருக்கிறான். உண்மையாகப் புனிதா மனித குலத்தின் வயிற்றிற்கு உணவுபோடும் மார்கஸின் சிந்தனையைப் பார்க்க சரியான சந்தோஷமாகக் கிடக்கு. இந்தக் காலத்தில எங்கட பிள்ளைகளும் இப்படி நடந்தால் எவ்வளவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும்?

கடைசியாக எங்கட பிரதமர் பொறிஸ் ஜொன்சனும் தினமும் நடக்கும் டவுனிங் தெருவின் மாநாட்டிலே மார்கஸ் ரஷ்ஃபோர்ட்டிற்கு வாழ்த்தும், நன்றியுமெல்லே சொல்லியிருக்கிறார் ராஜி.



அவர் அதைச் சொல்லாத்தானே வேண்டும். பார்த்தியே புனிதா! குழந்தைகளின்

உணவு வறுமையை அதுகளின்ர பசியைச் சமாளிக்க இதைவிட வேற என்ன மிகச்சிறந்த சேவை கிடக்கு. எல்லாச் சமூகங்களுக்கும்; ஒரு அதிர்வையெல்லோ செய்து காட்டியிருக்கிறான். அந்தப் பிள்ளைக்கு புண்ணியம் கிடைக்கட்டும். எங்கட சில சனத்துக்கு ஆசை. தேவைக்கு மேலே ஆசைப்பட்டு சேர்க்குங்கள். கடைசியாக என்னத்தைக் காண்கிறது? மற்றவர்களுக்கும் குடுத்து வாழப் பழகவேண்டும். அதெங்க அதுகள்... லண்டனில் வைத்தியசாலையில் வேலை செய்த ஆட்களுக்கு வியாழக்கிழமைகளில மாலை எட்டு மணிக்கு கைதட்டி நன்றி சொல்லிச்சினம். நல்ல விசயம். அதுபோல இந்தப் பொடியன் ரஷ்ஃபோர்ட்டுக்கும் ஒரு நாளைக்கு இப்படி கைதட்டலாம்தானே!

ஓம் ராஜி. பிதமருக்கு ஒருக்கா போன் பண்ணிக் கதைச்சுப் பாப்போம்.

உனக்கு நான் ஏதும் சொன்னால் ஒரே பகிடியும் சிரிப்பும்தான் புனிதா. இண்டைக்கு ஒரு கதை கேள்விப்பட்டனான். தெரியுமே! இந்தக் கொரோனாவுக்கு தனிய சின்னக்கடை வச்சிருக்கிற முதலாளிமாருக்கு அரசாங்கம் ஒரு தொகைக் காசு கொடுத்து உதவினாங்களாம். சில முதலாளிமார் நியாயமாக சனத்துக்கு விற்றார்களாம். ஆனால் சில எங்கட முதலாளிமார் இந்த உயிர்போற நேரத்திலகூட கொள்ளை லாபம் வைத்து விற்றதோட அங்கு வேலை செய்யிறதுகளுக்கும் சம்பளத்தை சரியாகக் கொடுக்காமல் அதைத் தங்களுக்குள்ள அமுக்கிப் போட்டாங்களாம்.

பார்த்தீரா எங்கட சனத்தின்ர விளையாட்டை. சீ.. இதுகள் என்ன மனிதரப்பா?

அந்தக்காசில் இலங்கையில தங்கட ஊரிலயெல்லே கட்டிடங்கள் எழுப்பிக்கொண்டிருக்கினமாம் புனிதா.

எங்கட சனத்தை திருத்த ஏலாது ராஜி. பறவைகள்போல நாமும் வாழக்கற்றுக்கொண்டால் என்ன என்பதுபோல் எனக்குத் தோன்றுகின்றது ராஜி. எறும்புகள், தேனீக்கள், கறையான்கள் இவை என்ன சேமித்து சேமித்து கடைசியாக எல்லாவற்றையும் பறிகொடுக்கின்றனதானே!

சரியாகச் சொன்னாய் புனிதா! நாங்கள் உழைக்கிறதும் உலகம் சுத்துறதும்தான் வேலை.

அப்போ உங்களிட்ட கனக்க காசு இருக்குதுபோல ராஜி.

மனசுக்குள்ளதான் கனக்கக் காசு இருக்கு. சும்மா கதைக்குச் சொன்னனான். இந்தியாவிலுள்ள கோயில்களுக்கும், இலங்கை, ஐரோப்பா என்று சும்மா போய் பார்த்துட்டு வந்தனாங்கள். இந்த அற்புதமான உலகத்தை போய்ப்பார்க்கத்தானே வேண்டும்? இப்ப கொரோனா வந்ததும் நல்லதாகப்போச்சு வீட்டுக்குள்ள இருந்துகொண்டு ஷ}முக்குள்ளால உலகத்தைச் சுத்துறம். என்ன உலகத்திலுள்ளவர்களோட கதைத்துக்கொண்டிருக்கிறோம். அதுவும் மகிழ்ச்சிதான். ஆனால் எனக்கு இப்போ ரஷ்ஃபோட் மாதிரி பெரிதாக இல்லாவிட்டாலும் சமைக்கிற சாப்பாட்டில் வசதியற்ற மற்றவர்ளுக்கும் கொடுக்கவேண்டும் போல இருக்கிறது புனிதா.

நல்ல யோசனை வந்துட்டுது உங்களுக்கு. சின்ன சின்ன உதவிகள் கூட சிறப்பான விடயம்; ராஜி.

ஓ! இயற்கை அழகானது! இயற்கை அதிர்ச்சி தருவது! எமது வாழ்க்கையும் அழகானதுதான். நெருக்கடிகளின் மத்தியிலும் அழகான உருவம்தான் வாழ்க்கை. பிரச்சனைகளை முறியடிப்போம்! வாழ்க்கையை வெற்றியாக முன்னெடுப்போம்!



# கலா புவன் கவிதை

**(லண்டன்)**

நீலத்தை பிரிந்து ஆகாயம் இருப்பதில்லை
ஆகாயமே நீலம் தானே
வளர்தலும் குறைதலும்
நிலவின் இயல்புகளாம்
மண்ணையும் விண்ணையும்
இணைக்கும் முயற்சியில் மரங்களே
நிலங்களின் கரங்களையும்
இருளையும் பெண்ணையும்
பிரிக்க முடியாது என்பார்கள்

இரவும் பகலும் மனதை தொடர்பவன் அறிஞன்
அகத்தையும் புறத்தையும் அளப்பவர் ஞானிகள்
தூசு என்பது நிலத்தின் சருமம்
கடல் என்பது நதிகளின் முடிவு
காற்றில் ஒருபோதும் வாளின் தடம் தெரியாது
சொற்களின் ஆவேசம் மிகப்பெரிய ஆயுதம்
உனக்கும் எனக்கும் மௌனத்திலும்
சொற்கள் பேசிக் கொண்டிருக்கின்றன

இடையறா இயங்குதல்
வையகத்தின் வாழ்க்கையாம்
இதுவே இயல்பு
இதுவே நியதி
இதுவே பிரபஞ்ச சஞ்சாரம்
அறிவோம் உணர்வோம்
அவனியின் இயக்கம்

● சங்கர சுப்பிரமணியன்.

# மக்களும் மாக்கள்தாமோ?




ஆடிமுடித்த பின்னே ஆவிபிரிந்த பின்னே
அத்தனையும் அடங்கி அற்ப பிணமாக
அகிலமதில் மாண்டு மறைந்திடும் மனிதா
அரைநொடியாகிலும் அறிந்திலையோ

உயிரற்று உறங்கிக் கிடக்கிறாயே
மருத்தவம் படித்ததினால் மருத்துவரா
சட்டம் படித்ததால் வழக்கறிஞரா
பொறியியல் படித்த பொறியாளனா

எழுத்திலகில் சிகரம் தொட்டு நின்றாயே
கவிதைகள் வடித்ததால் நீ இப்போ கவிஞனா
கதைகள் நீ எழுதியதால் கதாசிரியரென்பரோ
கட்டுரை எழுதிய உன்னை இன்று
கட்டுரையாளன் என்பாரோ

வழிபடுமிடமெலாம் தொழுதிட உதவிடும்
அழிவிலா புகழென்று அகந்தை கண்டிடும்
விழிமிரட்டி வெற்றிகாணும் வீணர்களும்
பழியேதும் செய்தறியா பாமர மக்களுமே

நிலைமாறி நிலமதில் வீழ்ந்தபின்னே
இலையொரு சொல் பிணமென்றிடல் தவிர்க்க
தலைகீழாய் நின்றாலும் மாற்றவியலாதென
நிலையுணரா மக்களும் மாக்கள்தாமோ!



● செவல்குளம் செல்வராசு

# பேசாப் பெருந்துயர்

வனங்கள் இழந்த பட்சிகள் சோகத்தை
வார்த்தையில் சொல்லும் முயற்சி
பூமியில் எல்லோர்க்கும் மகிழ்ச்சி இருக்கு
எங்களுக்கெங்கே இருக்கு .....?
இடி கிணற்றில் விழுந்த மான்குட்டி போல
கதறும் வாழ்க்கை எதுக்கு ....?
உங்களில் ஒருவராய் எங்களை நினைத்தால்
முன்னேற்றம் உண்டு எமக்கு ....

மூன்றாம் பால் பிறப்பு ஹார்மோன்கள் பொறுப்பு
கருவில் வந்த மாற்றமன்றோ ....?
இயற்கை தவறில்லை இறைவன் தவறில்லை
ஒதுக்கும் வாழ்க்கை வலிக்குதே

தாயின் நினைவுகள் கண்களைக் குளமாய் மற்றிடுதே
எங்கள் மகிழ்வையே சொந்தமும் பந்தமும் சிதைத்ததே
பக்கத்து வீடும் எதிர்த்த வீடும்
ஏற்றுக் கொண்டாலே துன்பமில்லை
அன்பும் படிப்பும் கிடைத்தால் போதும்
தனியாய் இங்கோர் கூட்டமில்லை

ஊமைக் காயங்களைப் பேசாப் பெருந்துயர் கூட்டுதே
உள்ளச் சிக்கல்களே உயிரின் நீளம் குறைக்குதே
அன்பின் கரங்கள் தேடித் தேடி
ஆயுள் முழுக்க அலைகின்றோம்
அதிலும் கூடத் தோற்றுப் போயே
முடிவைத் தேடிப் போகின்றோம்

● ந.க. துறைவன், வேலூர்

# கார்த்திகை தீபம்

தாமரைப் பொய்கையில் பிறந்தேன்
வளர்த்து ஆளாக்கியவர்கள்
கார்த்திகை நட்சத்திரப் பெண்கள்.

❍

ஆறறிவு படைப்பின் ரகசியம்
உணர்த்தும் பிரபஞ்ச அழகிகள்
கார்த்திகைப் பெண்கள்.

❍

எனைக் கவிஞனாக்கினாள்
மூடனாக இருந்த எனக்கு
ஞானப்பால் ஊட்டிய சக்தி.

❍

விண்வெளி மைதானம்
ஆயிரம் தோழிகளோடு நானும்
இரவில் குறும்பு விளையாட்டு.

❍

ஆசைகள் நிறைந்த மனசு
எப்பொழுதும் கொஞ்சுவாள் உருகி
என் பெரிய பாட்டி நிலா.

❍

ஒளி சிந்தும் ஒளியிருந்து
ஒளிவீசும் அழகு
நீயே உலகின் ஒற்றை நிலா.

எனக்கு நானே இரவில்
வெள்ளை இருட்டில் சுடர்கிறேன்
சுகிக்கிறது என் ஆன்மா.

❍

எழுத்துக்கள் இன்றி பயின்றேன்
கற்றது குரு வழி கல்வி
பெற்றது ஞானஒளி.

❍

பழத்திற்குள் விதைகள்
விதைக்குள் எண்ணெய்
தீபத்திற்கு ஆகாரம்.

❍

அகல்விளக்கு ஏற்றிவைத்தேன்
எங்கு ஒளிப் பிரவாகம்
இருள் விலக்கியது தீபம்.

❍

என் பூதஉடல் இருப்பில்
உள்ளொளி வெப்பமாய்
உயிர்ப்பிக்கும் தீபச்சுடர் நீயே...

❍

என் அறிவொளி நீ, உயிர்சுடர்நீ
நீயே என் ஞானதீபம்
உன்னை வணங்குகிறேன். ❍

# மனரேகைகளின் பரமபதம்.

● வேதா. இலங்காதிலகம், டென்மார்க்

அகம் திறந்து பாராட்டி
முகம் மலர்ந்து வரியொட்டடல்
மகிமையுடன் திறனை ஒப்புதலாக்கும்.
அகிற்கூட்டு வார்த்தை அங்கீகாரம்
சுகித்தலாகி வேர் நீண்டு
திகிலழித்துத் திராணியேற்றும் சிகரமேற.

கரணமடித்துப் பாலனுக்கும் பலமேற்றும்
அரணித்தலாகும் அன்பு வார்த்தைகள்
இரணியமாகும், மழையாகும் இதமிகுமொழிகள்.
பரணிபாடும் பாங்காக எழுத்துலகில்.
உரமிகு அங்கீகார மொழியால்
தரமற்றுத் தோற்பவனும் நந்தவனமாகும் நிலையுண்டு

கனமான தோல்வியால் நிலைமாறினும்
தனமாகும் பாராட்டால் வனமாகும்
மனதின் ரேகைகளின் பரமபதம்
தினம் வெற்றிக் கதிரொளி விரிக்கட்டும்.
வானளாவிய அதிகாரம் ஏளன
இளக்காரம் தோல்வியின்றுஜீ உயரட்டும்.

இனிய வலியகற்றும் மென்மை
கனியும் இதமுடை வார்த்தைகள்.
மனித இதயத்துச் சிறகுகளே
புனிதமாய் அடைகாக்கிறது வார்த்தைகளை.
காலையோ மாலையோவெனும் இதமான
மானசீக பேறுதான் மொழி.

தீராநதி ஓயாத போராட்டம்
சீராயோடும் நிபந்தனையற்ற எழுத்து
சோராது இதயத்துச் சிறகுகள் வெப்பமாகி
போராக ஏவாது இதமாயெழுதுவது
மனித நுண்ணறிவின் விரிப்பு
புனிதப் பழமாகும் கருத்து.

(அகிற் கூட்டு - சநதனம். சுகித்தல். நலமாக.
ஆரணித்தல் - காவல் செய்தல் இரணியம் - பொன);